முகப்பு:

முதலாம் இராசராச சோழன்
(கி.பி. 985-1014) எடுப்பித்த தஞ்சைப்
பெருவுடையார் கோயில் விமானத்தின்
அழகிய, விழுமிய தோற்றம்

# திருக்கோயில்

மாலை: 22 | சித்தார்த்தி ஆண்டு-கார்த்திகைத் திங்கள்-நவம்பர்-1979 | மணி: 2

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பி ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் [PINCODE] எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

தஞ்சையில் இராசராச சோழன் சதயநாட் பெருவிழா

நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான்,
—திரு ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம். ஓ.எல்

அறுவகைச் சமயங்கள்,
—ஆசிரியர்

திருக்குறளும் வைணவ சமயத்து உறுதிப் பொருள்களும்
—திரு டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம். ஏ. பி.எச்.டி.

ஆன்ம இலக்கணம்
—டாக்டர் திரு ச. கங்காதரன், எம். ஏ. எம். லிட். பி. எச்.டி.

உயர் நலம்
—திரு வை. கணபதி ஸ்தபதி

மதியே மதியே
—ந. ரா. முருகவேள், எம். ஏ. எம். ஓ. எல்.

பேதையும் மேதையுமான சீதை
—திரு புரிசை. சு. முருகேச முதலியார்

வைணவத் திவ்விய தேசங்களும், பெருமாள் தாயார் திருப்பெயர்களும்
—ஆசிரியர்

பாரத நூற் பண்போவியங்கள்
—திரு கவிஞர் மனசை ப. கீரன், பி. ஏ, பி. டி.

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

## தஞ்சையில் இராசராச சோழன்

# சதயநாட்பெருவிழா

[செய்திச் சுருக்கம்]

தஞ்சையை ஆண்ட முதலாம் இராசராச சோழனின் 994-வது சதயவிழா, தஞ்சைப் பெரியகோயிலில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. தஞ்சைப் பெரிய கோயிலில், 31.10.79 அன்று, மங்கள இசையுடன் விழா ஆரம்பமானது. இராசராசசோழன் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஓதுவாமூர்த்திகள் பாராயணத்துடன், திருமுறைத் திருவீதி உலாக் காட்சிகள் சிறப்பாக நடைபெற்றன. காலை நிகழ்ச்சிகளுக்குப் பின், மாலையில் திருவையாறு நாதசுர இசைக்கல்லூரி மாணவர்களின் நாதசுர இசையுடன் விழா துவங்கியது.

வண்ண விளக்குகள் ஆலயத்தின் உட்பகுதிகள், ஆலயகோபுரம் முழுவதிலும் அமைக்கப்பட்டு, இரவு, பகல்போல் காட்சியளித்தது. விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரையும் சதயவிழாக் குழுத் தலைவர் திரு. என். எஸ். இளங்கோ அவர்கள் வரவேற்றுப் பேசினார். வரவேற்பிதழைத் தஞ்சை அரண்மனை ஆலயங்களின் பரம்பரை அறங்காவலர் இராசஸ்ரீ ராசாராம் ராசா சாகிப் அவர்கள் வாசித்தளித்தார். விழாவுக்குத் தலைமை தாங்கிய அறநிலையத்துறையின் ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், I.A.S. அவர்கள்பேசுகையில், இராசராச சோழனின் பலதிறச் சிறப்புக்களை வரலாற்றுச் செய்திகளுடனும், ஆதாரங்களுடனும், விளக்கிப் பேசினார்.

கவியரங்கத்துக்குப் புலவர் திரு. புலமைப் பித்தன் எம். எல். சி., தலைமை தாங்கினார். அக்கவியரங்கத்தில் கவிஞர்கள் தஞ்சைவாணன், முத்துலிங்கம், மா. வரதராசன், மா.வே. பசுபதி, சோழன் போன்றவர்கள் கலந்துகொண்டு, இராசராசசோழனின் தனிச் சிறப்புகள் பற்றிச் சிறந்த செந்தமிழ்க் கவிதை மழை பொழிந்தார்கள்.

விழாவில் சிறப்புரையில் பங்கு பெற்றுப் பேசிய பட்டுக்கோட்டை திரு அன்புவேதாசலம் அவர்கள் பேசுகையில், ''ஆலயங்களின் சொத்துக்களை யார் யாரோ பினாமியாக வைத்துக் கொண்டு, ஆலயங்களுக்கு நெல் அளப்பது கிடையாது. சில ஆலயங்களில், ஆலயங்களின் கணக்கில் கூடச் சொத்துக்களின் கணக்குகள் கிடையாது. ஆலய ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத பல ஆலயங்கள், இன்று தமிழ்நாட்டில் உள்ளன. இராசராச சோழனின் செப்புப் பட்டயங்களில், இந்த ஆலயத்துக்கு உள்ள சொத்துக்களை எல்லாம் குறித்து வைத்துள்ளான். இராசராசசோழனுக்குச் சதயவிழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் ஆலயங்களின் சொத்துக்களைக் காப்பாற்றும்பொருட்டும், ஆலயங்களின் புனிதத் தன்மையைக் காப்பாற்றவும், சட்டப் பேரவையில், அரசு ஒரு தனிச் சட்டம் கொண்டுவர வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளர் திரு. அறிவொளி பேசுகையில், ''இந்திய வரலாற்றில் தமிழகத்தின் பல்வேறு செய்திகள் இடம் பெறாமலேயே போய்விட்டன. இராசராச சோழனின் வரலாறுகள் எல்லாம் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. நம் நாட்டுக் கலைப் பொருட்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டே வருகின்றன. நமக்கென்று உள்ள இந்த வரலாற்று ஆலயங்களை நாம் காப்பாற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இராசராச சோழன் ஒரு சோசலிச வாதி. அவன் அந்தக் காலத்திலேயே ஏழை எளிய மக்களைக் காப்பாற்றவும், கோயில் சொத்துக்கள்மீது மக்கள் ஆர்வமுடன் இருக்கவேண்டும் என்பதற்காகவும், ஆடுகளையும், மாடுகளையும் கிராமம் கிராமமாகக் கொடுத்து வளர்க்கச் சொன்னான். இப் பெரிய கோயிலுக்கு ஏராளமான சொத்துக்களை நன்கொடையாக வாரி வழங்கினான். இவைகள் இப்போது இருக்கும்இடம் தெரியவில்லை. இந்தச் சொத்துக்களை மீட்டுக் காப்பாற்ற இன்றைய அரசு நடவடிக்கை எடுத்து, இராசராசனின் புகழ் அகில உலகம் முழுவதும் விளங்கிடச் செய்யவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், ''இராசராச சோழனின் 994-வது சதயவிழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்கின்றேன். சதயவிழா என்றால் யாருக்குமே தெரியாது. முதன்முதலாக நான் அறநிலையத் துறையின் அமைச்சராக இருந்தபோதுதான், இராசராச சோழனின் சிறப்புக்களைப் பொதுமக்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, 1968ஆம் ஆண்டு, முதன் முதலாகச் சதய விழாவானது,

பங்கு கொள்ளும் விழாவாக நடத்தப்பட்டது. அதன்பின் தொடர்ந்து இந்தவிழா சிறப்பாக இப்போது கொண்டாடப்படுகிறது. வீரம் மிக்க வரலாறுகள் நம்மிடையே இருந்தாலும் கூட, அவைகளைப் பற்றியெல்லாம், நாம் சிறிதுகூடச் சிந்திப்பது கிடையாது.

எத்தனை கலைகள் உண்டோ, அத்தனை கலைகளையும் கட்டிக்காத்த பெருமைக்குரிய மாமன்னர்களில் ஒருவன்தான், இராசராச சோழன். கற்குன்று காணாத தஞ்சைத் தரணியில், அன்னியரும் வியக்கத்தக்க அளவில், தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டிய பெருமைக்கு உரிய சோழமன்னன், இராசராச சோழன்; நாட்டுக்கும் மொழிக்கும் இனத்திற்கும் பெருமை தேடித் தந்த பெருமன்னன். கலையைக் கொண்டு அரசியலைச் சிறப்பாக நடத்தியவன், தமிழ்நாட்டு அரசியலுக்கும் சமயத்திற்கும் பொற்காலம் வடித்தவன், இராசராச சோழன்'' எனக் கூறினார்.

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலில். காலை முதல் இரவுவரை, சதயநாள் திருவிழா, கோலாகலமாகக் காட்சியளித்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு, விழாவினைச் சிறப்பித்தார்கள். விழா முடிவில் திரு. என். எஸ். இளங்கோ அவர்கள் நன்றி கூறினார்.

## II

தமிழகத்தின் பெருமைக்குரிய தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலைக் கட்டிய, சோழமன்னன் முதலாம் இராசராச சோழனின் சதயவிழா, இரண்டாம் நாள் தஞ்சைப்பெரிய கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குத் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தொ.கங்கப்பா,I.A.S. தலைமை தாங்கினார். விழாவுக்கு வருகை தந்து இருந்த அறிஞர்களையும், அமைச்சரையும், அதிகாரிகளையும் மற்றும் அனைவரையும், சதயவிழாக் குழுவினரின் துணைத் தலைவர் திரு. கோவிந்த தாஸ்நாயுடு அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

தலைமையுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கங்கப்பா,I.A.S. அவர்கள் பேசுகையில், ''தஞ்சைப்பெரியகோயில், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலக மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் உள்ளது. இதன் பெருமையை உலகம் முழுவதும் பரப்பவேண்டியது நமது கடமையாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இப்படி ஒரு ஆலயத்தைக் கட்டுவது என்பது வியக்கத்தக்க ஒன்றாகும்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற அடிப்படையில், வெளிநாட்டு மக்களைக் கவரக்கூடிய வகையில், இந்த ஆலயத்தின் வெளிப்பக்கங்களைச் சுத்தப்படுத்தி, தற்போது இராசராச சோழன்சிலை உள்ள இடத்தில் ரூ. 2 லட்சம் செலவில் ஒரு அழகான பூங்காவை விரைவினில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதே போல் இந்த ஆலயத்தின் முன்புறம் உள்ள அகழிகளைச் சுத்தப்படுத்தி, உல்லாசப்பயணிகள் பொழுதுபோக்கும் வகையில் நவீன படகுகள் விடப்படும்'' என்றார்.

விழாவில் பேசிய சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு.பி. பி. வேணுகோபால் அவர்கள் பேசுகையில், ''ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழனின் முன்னேற்றத்திற்குத் திட்டம் வகுத்தவன் இராசராசசோழன். மதவேறுபாடு இன்றி, அனைத்து மதங்களையும் போற்றி வளர்த்தவன் இராசராசசோழன். நாகை அருகே பௌத்தக் கோயிலைக் கட்டியுள்ளான். நீதி கலை நிர்வாகம் அனைத்துமே, இவனது ஆட்சிக்காலத்தில் தனிச் சிறப்புப் பெற்று விளங்கின என்றார்.

### மாண்புமிகு இராம வீரப்பன் :

சதயவிழாவில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில், '' கல்லைப் பேசவைத்த இராசராசசோழன் சதய விழாவில், நான்கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இப்படி ஒரு ஆலயம் கட்டப்பட்டு, உலகமக்கள் பார்த்து வியக்கக்கூடிய வகையில் உள்ளதே தவிர, வேறு எங்கேயுமே இப்படி ஒரு கோயில் கிடையாது. இந்த ஆலயம் 50 அடி ஆழத்துக்குக் கீழே தோண்டப்பட்டு, இதன் மேலே 216 அடி உயரமுள்ள இவ்வளவு பெரிய கோபுரத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கட்டியுள்ளார்கள் என்றால், தமிழனின் கட்டிடச் சிறப்பை மாமன்னன் எவ்வாறு போற்றிக் கலைஞர்களை வளர்த்து உள்ளான் என்பதனை, சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மத்திய அரசு நம்மைத் தாய் இல்லாப் பிள்ளையைப் போல் நடத்தி வருகின்றது. இந்தியாவில் தாஜ்மகாலும், மாமல்லபுரமும் தான் உள்ளன. வேறு ஒன்றுமே இல்லை எனக் கூறி வருகிறது. இந்தக் கோயிலுக்குப் பராமரிப்புச் செலவுக்குக்கூடத் தற்போது மத்திய அரசு கொடுக்கும் நிதி போதவில்லை. அதுவும் பழுதுபார்க்கும் திட்டத்தின்கீழ் இந்தப் பணம் வழங்கப்படுகிறது. இந்தக் கோயிலில் அடுக்கிக் கட்டப்பட்டுள்ள கற்களின் நடுவில் சுண்ணாம்பு சாந்து பூசப்படவில்லை. இவ்வளவு பெரிய புராதனக் கலைக்குப் பெயர்பெற்ற, இந்த ஆலயத்தைக் கட்டிய மாமன்னனுக்கு, இந்த ஆலயத்தின் உள்ளே, ஒரு பத்து அடிச்சிலையை வைக்க மத்திய அரசு அனுமதிக்கவில்லை.

இது எவ்வளவு பெரிய வேதனையான விஷயம் என்பதனை, நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். தற்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ்நாட்டின் பெருமை அயல் நாடுகளில் பரவ ஆரம்பித்துள்ளது. அந்த நாட்டில் உள்ள சுற்றுலா ஏஜென்சித் துறைகள், நமது நாட்டுடன் தொடர்பு கொண்டு, இந்தியாவுக்கு வரும்போது தமிழ்நாட்டில் உள்ள இடங்களையும் பார்க்க ஆரம்பித்து உள்ளார்கள். அப்படி வரும் அயல்நாட்டுப் பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள், சுற்றுலாப் பயணிகளைக்கூட மத்திய அரசு இந்தக் கோயிலின் உள்ளே பார்க்கவிடாமல், வெளியிலேயே நிறுத்தி விடுகின்றது. எப்படி அவர்கள் நம்

நாட்டுக் கலைத் திறனைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்?

அதைவிடக் கேவலம், வெட்கப்படவேண்டியது என்னவென்றால், இந்த ஆலயத்தின் உள்ளே பரத நாட்டியம் ஆடக்கூடாது என்று, மத்திய அரசு ஒரு உத்திரவு தற்போது பிறப்பித்து உள்ளது என என்னிடம் சொன்னார்கள். இந்த ஆலயத்தைக் கட்டிய மாமன்னன் நடனக் கலைக்கு உயிர் ஊட்டியவன். ஏன், நமது நாட்டுக்கு வரும் பெரிய தலைவர்களுக்கெல்லாம், நடனங்களை ஆடச் சொல்லி மத்திய அரசு காட்டவில்லையா? உலக நாடுகளில் எங்கே சென்றாலும், அவர்கள் நாட்டின் கலைத் திறனை, அவர்கள் நமக்குக் காட்டவில்லையா? ஐக்கிய நாட்டுச் சபையிலேயே நடனம் ஆடப்படுகிறது. இதை எண்ணும் போது இந்த ஆலயத்தின் உள்ளே நடனம் ஆடக்கூடாது என மத்திய அரசு கூறுவது, வேதனையான ஒன்றாகும். கல்லைச் சிறிய உளியைக் கொண்டு பேசவைத்த பெருமைக்கு உரியவன் இராசராசசோழன். இங்கே உள்ள ஒரு சிலைக்கு மட்டும் விளக்கம் தரவேண்டுமானால், மணிக்கணக்கில் கூறமுடியும்.

தமிழ்நாட்டில் மட்டும் ஐம்பதாயிரம் கோயில்கள் உள்ளன. இதில் தற்போது பத்துப் பதின்மூன்று ஆலயத்தில்தான், ஏதோ வருமானம் வந்து கொண்டு உள்ளது. அதுவும் நிலத்தில் இருந்து அல்ல. காணிக்கை மூலமாகவும், உண்டியல்மூலமாகவும் வருமானம் வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் ஆலயங்களுக்குச் சொந்தமாகப் பதின்மூன்றரை லட்சம் ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது. இதில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள இருபத்தைந்து கோயில்களுக்கு மட்டும், ஆறு லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. இவ்வளவு நிலங்கள் இருந்தும்கூட, ஆலயங்களுக்கு வருமானம் இல்லை. கடந்த ஏழு,எட்டு ஆண்டுகளில்மட்டும் 15 கோடி ரூபாய் வருமானபாக்கி உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 4800 கோயில்கள் உள்ளன. இந்தியாவிலேயே அதிக கோயில்கள் இங்கேதான் உள்ளது.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய மாமன்னன், இந்த ஆலயத்தின் நன்மையைக் கருதி, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஆயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களை எழுதிவைத்தான். இதன்ஆண்டு வருமானம் என்ன தெரியுமா? ஐம்பத்தெட்டாயிரம் மூட்டைகள் நெல். அதாவது இருபத்துஒன்பது லட்சம் ரூபாய் மதிப்பு உள்ளவைகளை எழுதி வைத்தான். இவை தற்போது எங்கே?, இங்கே இருக்கின்ற அரசியல்வாதிகள் எல்லாம், கோயில்நிலங்களைப் பிரித்துக் கொடுத்துவிடுங்கள் என்று கூறுகிறார்கள். நிலங்களைச் சுலபமாகப் பிரித்துக் கொடுத்துவிடலாம். ஆனால் தற்போது ஒரு பெருவுடையார் கோயிலை நம்மால் கட்டமுடியுமா?என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

மாநிலத்தில் உள்ள புராதனச் சின்னங்களைப் பராமரிக்க ஆண்டு ஒன்றுக்கு மத்திய அரசு ஆறு லட்சம் ரூபாயை வழங்கி வந்தது. ஆனால் இந்த ஆண்டு இரண்டுலட்சம் ரூபாய் தான் அனுமதிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நம்மை மாற்றான் தாய்ப்பிள்ளையைப்போல நடத்தி வருகிறது. மத்திய அரசிடம் நாம் விலைமதிக்கமுடியாத கலைச் செல்வங்களைத் தந்து உள்ளோம். மிக முக்கியமான பொறுப்பை நாம் மத்திய அரசிடம் கொடுத்து உள்ளோம் என்பதைக்கூட, மத்திய அரசு மறந்து செயல் பட்டு வருகிறது.

இந்தியாவின் புகழைப் பரப்பும் நினைவுச் சின்னங்கள் எல்லாம், தமிழ்நாட்டில் கேட்பார் அற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறது. அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும் என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஒப்ப இப்போது தேர்தல் என்றமுறையில் மக்களின் வரிப்பணம் மத்திய அரசால் சூறையாடப்பட்டு வருகிறது. மனிதன் தர்மத்துக்கும், சத்தியத்துக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். இதைத்தான் எங்களுக்கு அண்ணாவும், பெரியாரும் கற்றுத் தந்தார்கள். அதைத்தான் இன்று எம்.ஜி.ஆரின் ஆட்சியில் நாங்கள் செய்து வருகின்றோம்.

இராசராச சோழன், பொன்னை வைத்து விட்டுச் சென்றான். நாம் அவனுக்குப் பூவை யாவது வைக்க வேண்டாமா? பௌத்தருக்கும் சைனருக்கும் ஆலயம் கட்டிவைத்த இராசராசனுக்கு, அவனது நினைவாக விமானத்துடன் கூடிய மண்டபம் ஒன்றை விரைவில் கட்ட, அரசு திட்டமிட்டு உள்ளது. விரைவினில் அதை இந்த அரசு செயல்படுத்தும் என இந்தத் தருணத்தில் கூறிக் கொள்கிறேன். பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுவதைப்போல், மத்திய அரசு எதை எதையோ புராதனச் சின்னங்கள் என்று சொல்லி வருகிறது. உலகில் ஐந்து ஆறு அதிசயங்களைத் தவிர, வேறு ஒன்றும் இல்லை என்று மத்திய அரசு கூறிவருவது விந்தையாக உள்ளது.உலக அதிசயங்களை எல்லாம்விட, மிகப்பெரிய அதிசயம் இந்தக் கோயிலின் அமைப்பு என்பதை, மத்திய அரசு உணர வேண்டும்.

மத்திய அமைச்சர்கள் வெகு தூரத்துக்கு அப்பால் உள்ளபடியால், இவை எல்லாம் அவர்கள் கண்ணுக்குப்படாமல் உள்ளது. அவர்கள் கண்ணில்படும் நாள் வெகுதொலைவில் இல்லை. மத்திய அரசு தாராளமாக இந்தக் கோயிலின் புராதனக் கலையைப் போற்றிக் காக்க வகை செய்யவேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

நல்லூர்

# ஆறுமுகநாவலர் பெருமான்

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

**முன்னுரை :**

தமிழ்கூறும் நல்லுலகில், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழ்ப்புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிச் சுடர்விட்டுத் திகழ்ந்த புகழ்மிக்க சான்றோர்களுள், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் மூவர்! அவர்கள் முறையே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை (1815—1876), யாழ்ப்பாண நல்லூர்ச் சிவத்திரு ஆறுமுகநாவலர் (1822-1879), வடலூர் இராமலிங்க அடிகள் (1823-1874) என்பவர்கள் ஆவர். இம் மூவரையும் 19-ஆம் நூற்றாண்டின் ''முப்பெருஞ் சுடர் மணிகள்'' எனக் கூறுதல் பொருந்தும். இவர்கள் மூவரும் பலவகைகளில் தனிப்பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கினர்.

**மும்மொழிப் புலமைச் செம்மல் :**

இவர்களுள், சிவத்திரு ஆறுமுகநாவலர் அவர்கள், 18-12-1822-ல், யாழ்ப்பாணத்தில், நல்லூர் என்னும் இடத்தில், திரு. கந்தப்ப பிள்ளை என்பவருக்கு மைந்தராகத் தோன்றியருளினார். தமிழ் வடமொழி ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் ஒப்புயர்வற்ற புலமை பெற்றுத் திகழ்ந்தார். ''தென்சொற் கடல்கடந்து, வடசொற்கு எல்லை தேர்ந்து, ஆங்கிலத்தின் கரை கண்டவர்'' என்று, நாவலர் பெருமான் அவர்களைக் குறிப்பிடுதல் முற்றும் பொருந்தும். பீட்டர் பார்சிவல் ( Peter percival ) பாதிரியாரின் ஆங்கில பாடசாலையில் ஆங்கிலம் கற்றுத் தேர்ந்த நாவலர் அவர்கள், பின்னர் அவருக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக அமர்ந்து, விவிலிய நூலைத் தமிழாக்கம் செய்தலில், அவருக்குப் பெரிதும் துணைபுரிந்தார். விவிலிய நூலை (Bible) மொழிபெயர்க்கும் பணியில், பீட்டர் பார்சிவல் பாதிரியாரிடம் பணிபுரிந்தபோது, கிறித்தவ இலக்கியங்கள் பலவற்றையும், நாவலர் அவர்கள் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

**நைட்டிகப் பிரமசாரி :**

அதன்பயனாக, அவர்களைப்போல்தாமும் தமது சைவசமயத்தைப் பெரிதும் முனைந்து வளர்த்தல் வேண்டும் என்று, அளவற்ற ஆர்வம் கொண்டார். அதற்காகவே தம்முடைய வாழ்க்கை முழுவதையும் ஒப்படைத்துக் கொண்டார். அதன் பொருட்டுத் திருமணம் செய்து கொள்ளாமல், வாழ்நாள் முழுவதும் நைட்டிகப் பிரமசாரியாகவே வாழ்ந்திருந்து, அரும் பெரும் தமிழ்நூல்கள் பலவற்றை, நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, ஒரு சிறு பிழையுமின்றி மிகத் திருத்தமாகப் பதிப்பித்து வெளியிட்டார். தம்முடைய செல்வம் அனைத்தையும், தமிழும் சைவமும் வளர்வதற்கு என்றே முழுதாகப் பயன்படுத்தினார்.

**தெய்விக வாழ்க்கை :**

ஒரு பெரும் பல்கலைக் கழகம், பன்னெடுங் காலம் முனைந்து செய்தற்குரிய தமிழ்ப்பணிகள் அனைத்தையும், தாம் ஒருவராகவே நாவலர் அவர்கள் செய்து முடித்தார். யாழ்ப்பாணத்திலும் ( 1848 ), சிதம்பரத்திலும் (1864), சைவ பாடசாலைகள் தோற்றுவித்துப் பெரும்பணி புரிந்தார். அப்பாடசாலைகள் இன்றும் சிறப்புற வளர்ந்தோங்கிப் பணியாற்றி வருகின்றன. நாவலர் அவர்களைப் போலத் தமிழும் சைவமும் வளர்த்த சான்றோர் ஒருவர், அவருக்கு முன்னரோ பின்னரோ இருந்ததில்லை. அவருடைய அருமை பெருமைகள் அளப்பரும் சிறப்புடையன. அவரது வாழ்க்கை மிகச் சிறந்த தொண்டு வாழ்க்கை; ஒப்புயர்வற்ற தியாக வாழ்க்கை; மிக மேலான தெய்விக வாழ்க்கை! தமிழ் நூல்களை அச்சிட்டுப் பரப்புவதற்காக, சென்னையில் தங்கசாலைத் தெருவில், 300-ஆம் எண்ணுள்ள வீட்டில், தாமே மிகவும் முயன்று ''சைவவித்தியாநுபாலன யந்திர சாலை'' என்னும் பெயரில், ஓர் அச்சகம் நிறுவினர். அதன் வாயிலாக அரிய பல நூல்களைத் திருத்தமாக வெளியிட்டுத் தமிழ் பரப்பினர். அவ்வீடும், அச்சகமும் இன்றும் நிலைபெற்று வருகின்றன.

**பதிப்பாசிரியர் :**

தொல்காப்பியம் சேனாவரையர் உரை, சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்துரை, மாதவச் சிவஞானசுவாமிகளின் தொல்காப்பியப் பாயிர விருத்தி, தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி, நன்னூல் காண்டிகை உரை முதலிய நூல்களை, நாவலர் அவர்கள் அருமையாக ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டருளினார்கள். அதனாலேயே தமிழறிஞர்களிடையில் தமிழ் இலக்கண அறிவு வளர்ந்து பரவுவதாயிற்று. பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், கந்த புராணம், கோயிற் புராணம், வில்லிபாரதம் போன்ற அரும்பெரும் காவிய இலக்கியங்களை, ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள், ஒருசிறு

பிழையுமின்றி, மிகவும் திருத்தமாக அழகுற ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டார்கள். டாக்டர் திரு உ. வே. சுவாமிநாத ஐயர் போன்றவர்களுக்கு, ஒருவகையில் நூற்பதிப்பு முறையினைப் பயிற்றுவித்து வழிகாட்டியவர், நமது நாவலர் பெருமான் அவர்களே எனலாம். சிவஞான போதச் சிற்றுரை, திருக்கோவையார் உரை, பதினொன்றாம் திருமுறை, மற்றும் சாந்தலிங்கசுவாமிகள் அவர்களின் வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், கொலை மறுத்தல், அவிரோதவுந்தியார் ஆகியவற்றிற்குத் திருப் போரூர்ச் சிதம்பரசுவாமிகள் இயற்றிய உரை. முதலிய பல நூல்களைத் திருத்தமாகப் பதிப்பித்து வெளியிட்டவரும், ஆறுமுகநாவலர் அவர்களே ஆவர். இளஞ் சிறுவர்களுக்குத் தொடக்கப் பள்ளியில் தமிழ் கற்பித்தற் பொருட்டு, நாவலர் பெருந்தகையவர்கள் எழுதி வெளியிட்ட, பாலபாட நூல்கள் நான்கும், இன்றளவும் தமக்கு இணையின்றி விளங்கி வருகின்றன. இத்துறையில், கடலகம் கா. நமச்சிவாய முதலியார் போன்ற பேரறிஞர்களுக்கெல்லாம், முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும், ஆறுமுகநாவலர் அவர்கள் விளங்கினார்.

''வித்தகமெய்ந் நூல்உரைகள் துகளிற் பல்கி
விராய்க்கிடந்து வரம்பிகந்த விதங்கள் பல வேறு;
அத்தனையும் ஏடுகளில் முன்னர்க் கற்ற
ஆசிரியர் பெரிதுணர்வர்; அவைநன்குஆய்ந்து,
சுத்தமுறத் திருத்திஅச்சில் இடுவித்து, யார்க்கும்
தொலைவில் உணர்வு உதிப்பித்தார்; தொல்லைச் சீர்த்தி
உத்தமநா வலர்; அவர்போல் அவற்றை எல்லாம்
உய்த்துணர்ந்து பதிக்கவல்லார் உலகத்து யாரே?

## பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரனார்:

நாவலர் அவர்களின் அளப்பரும் பெருமைகள் அனைத்தும், ''விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்'. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த பெருங் கவிஞர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்,

அகத்தியம்தொல் காப்பியம்முன்
ஆயபல இலக்கணமும்,
சகத்தியல்பல் இலக்கியமும்,
சாற்றுபர மதநூலும்,
மகத்துவமெய்ப் பொருள்நூலும்,
மதியமையப் பயின்றுணர்ந்து,
சகத்தியலும் அநுபூதித்
தோன்றலாய் அமர்பெரியோன்! (1)

மாறுபடு பரசமய
வழிஅனைத்தும் அறமாற்றி,
ஆறுபடு செஞ்சடிலத்து
அண்ணலார், அருள்நெறியே
தேறுபடும் படிவளர்த்துத்,
திகழும்மா தவமுடையோன்!
வீறுபடு சிவனடியார்
மேன்மைமுழு மையும்உணர்ந்தோன்! (2

கருள்விரவு தலைக்கழிக்கும்
கண்மணியும், வெண்ணீறும்,
பொருள்விரவும் ஐந்தெழுத்தும்,
பொருளாகக் கொண்டுவப்போன்;
தெருள்விரவு சுத்தசைவ
சித்தாந்தப் பெருஞ்செல்வன்,
அருள்விரவு பரவுபுகழ்
ஆறுமுக நாவலனே'' (3)

என்று நாவலர் அவர்களை, மிகப்பெரிதும் விதந்து வியந்து புகழ்ந்து போற்றிப் பாராட்டியிருக்கின்றார். இங்ஙனமே அக்காலத்தில் இருந்த அறிஞர்கள் அனைவரும், ஒருமுகமாக உளமுவந்து புகழ்ந்துள்ளனர்.

## தமிழ்உரைநடை :

தமிழ்மொழியில் ஒருகாலத்தில் எல்லா நூல்களும், கவிதை நடையிலேயே அமைந்திருந்தன. உரைநடை பெரிதும் வளர்ச்சி குன்றியிருந்தது. தமிழில் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தவர், ஆறுமுக நாவலர் அவர்களே யாவர். பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண சூசனம் முதலிய நாவலரின் வசன நூல்கள், அவர் தமிழ் உரைநடைக்குச் செய்த பணியின் சிறப்பினை விளக்கும். ''உரைநடை கைவந்த வல்லாளர்'' என்று பரிதிமாற் கலைஞர் என்னும் வி. கோ. சூரியநாராயண சாத்திரியார், இவரைப் பெரிதும் புகழ்ந்து போற்றியிருக்கின்றார். நாவலர் அவர்களின் தமிழ் உரைநடை, தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்தது. நாவலர், அவர்களின் தமிழ் உரைநடைச் சிறப்பினையும், பகைவரும் திசை நோக்கித் தொழுது போற்றிய பழுதற்ற ஒழுக்க நடைச் சிறப்பினையும்,

அன்னநடை பிடியின்நடை அழகுநடை
அல்லஎன அகற்றி, அந்நாள்
பன்னமுது புலவரிடம் செய்யுள்நடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு,
வன்னநடை வழங்குநடை வசனநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்,
மன்னும்அருள் நாவலன்றன் அழியாநல்
ஒழுக்கநடை வாழி வாழி!

என்று நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்கள், நயந்து போற்றிப் புகழ்ந்து பாடியிருத்தல், நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

## வேண்டுகோள் அறிக்கைகள்:

நாவலர் அவர்களின் அருமை பெருமைகள், குணநலன்கள், தியாகத்தின் சிறப்பு, மன்பதைத் தொண்டு, தமிழ்க் கல்வி வளர்ச்சிப் பணி, அதற்காக அவர் வகுத்த செயல் வகைத் திட்ட முறைகள், அவர்தம் பரந்து விரிந்த மனப் பான்மை, பொதுநல நோக்கக் குறிக்கோட் சிறப்பு ஆகிய பலவற்றையும், நம்மனோர் அறிந்துணர்ந்து கொள்ளுதற் பொருட்டு, இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர், அவர்கள் எழுதி வெளியிட்ட இரண்டு வேண்டுகோள்கள், இங்கு வெளியிடப்படுகின்றன. அவ்விரண்டு வேண்டுகோள்களும், கருங்கல் நெஞ்சையும் கரைந்து உருகச் செய்யும் அரும்பெரும் சிறப்பு

வாய்ந்தனவாகத் திகழ்கின்றன. அவைகள் வருமாறு :

அறிக்கை — 1 :

''நான் ஜய வருடம் (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவ வருடம் (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனுயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை; என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருடம் புரட்டாதி மாதம் (1848) பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல்துரை ''நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது'' என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ் விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும். என்னேடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும், எனக்குப் பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர், தங்கள் தங்கள் சத்திக் கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணைமாத்திரங் கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காமல், வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றேடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என்சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம், சைவ சமயத்தையும், அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும், வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்''.

''இப்பேராசையினுல் இருபது வருஷ காலம் நான் செய்த முயற்சிகள் பல ; அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச் சில. சைவ சமயிகள் யாவரும் சைவ சமயத்திலே சிரத்தையுடையர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன் முயற்சிகளைச் செய்வார்கள், செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.''

''தன்னிம்மைப் பயன்களெல்லாம் இகழ்ந்தும், கைம்மாறு வேண்டாதும், இருபது வருஷ காலம் சுவசமயவிருத்தியின்பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன், மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானுயின், அவன்எடுத்த முயற்சிகளுள் யாது சித்தி பெருது? நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும் பொருட்டு, நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும் பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்ருர்கள். இதனுல் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச்சிறிதும் இல்லை. எனக்குச் செயப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கணணும், தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின் கண்ணும், ஊக்கங் கிளராவண்ணம் தடைவிளைகின்றதே என்னுங் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வ காலத்திலே சைவ சமய விருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்மதிப்பும், பரசமயிகளாலே இடையூறும்செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமயவிருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை., என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னை ஆச்சரியம்!!! சைவ சமய விருத்திப் பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும்இடையூறும்செய்யப் பட்டபோது, நான் தமிழ்க் கல்வியிலும், தமிழ்க் கல்வியையும் சைவ சமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும், போக்குங்காலத்தை முன் பயின்ற இங்கிலிஷிலேயே போக்கி, உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்குமதிக்கப்படல் வேண்டும் என்று விரும்பாவண்ணம், திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங் கருணைத் திறத்தை மறவாதிருத்தலே, எனக்கு வாய்ப்புடைத் தாயதோர் பெருஞ் செல்வம். இஃதிங்ஙனமாக.''

''நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ, நிறைவேருதோ என்னுங் கவலை, என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது : தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள், முக்கியத் தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும், சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும், சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினுலே நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையரு முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரிட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையுங் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும், சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.''

''இதன்பொருட்டு ஏறக்குறைய மாதம் ஒன்றுக்குச் செல்லத்தக்க செலவு வருமாறு:

| | | |
|---|---|---|
| போசனம், விளக்கெண்ணெய், சௌரம், வஸ்திரம், புத்தகம் இவற்றின்பொருட்டுப் பிள்ளை 1-க்கு ரூ. ·5 வீதம் பிள்ளைகள் 100-க்கு | ... | ரூபாய் 500 |
| முதற்றமிழுபாத்தியாயர் வேதனம் | ... | 50 |
| இரண்டாந்தமிழுபாத்தியாயர் வேதனம் | | 30 |
| மூன்றாந்தமிழுபாத்தியாயர் வேதனம் | | 20 |
| சம்ஸ்கிருத உபாத்தியாயர் வேதனம் | ... | 20 |
| சிவாகமபண்டிதர் வேதனம் | ... | 20 |
| ஓதுவார் வேதனம் | ... | 10 |
| இலேககர் வேதனம் | ... | 7 |
| கணக்கப்பிள்ளை வேதனம் | ... | 5 |
| சேவகன் வேதனம் | ... | 5 |
| தோட்டக்காரன் வேதனம் | ... | 3 |
| புத்தகாதி சம்பாதனம் | ... | 30 |
| ஆக | ... | 700 |

''இவ்வுத்தமோத்தமதருமத்தின்பொருட்டு எண்பதினாயிரம் ரூபா வேண்டும். எழுபதினாயிரம் ரூபாவைக் கொண்டு நீர்ப்பாய்ச்சலுள்ள நல்ல கிராமம் வாங்கிவிடல் வேண்டும். பதினாயிரம் ரூபாவைக் கொண்டு வித்தியாசாலையும் மடமுங் கட்டுவித்தல் வேண்டும். நம்மவர்கள் பலர் சிறிது சிறிதாக உபகரிப்பினும், ''ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை'' என்றபடி, இத்தொகை சேர்ந்து விடும். இத்தொகை சேராதொழியினும், சேர்ந்த தொகைக்கிசையவாயினும் நடத்தலாமே. சைவசாத்திரங்களைக் கற்போரும், கற்பிப்போரும், அவர்களுக்கு அன்னம் வஸ்திரம்முதலியவை கொடுப்போரும், சைவாகமவுணர்ச்சி நிலைபெறும்பொருட்டுத் தனராசிகளையும் பூமிகளையும் கொடுப்போரும் பெறும் பயன், சுப்பிரமணியக் கடவுள் அகத்திய மகாமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரம் என்னும் உபாகமத்திலே, சொல்லப்பட்டிருக்கின்றது.''

''இதுவே எல்லாத் தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தம தருமம் என்பது, சாத்திரம் யுத்தி அனுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்த துணிவு. இது ஒருவராலும் மறுக்கப்படமாட்டாது. இதுசத்தியமே எனக்கொள்ளினும், இத்தருமத்தை நடத்துதற்கு நான் யோக்கியனல்லேன் என்னுங் கருத்து அனேகருக்கு உண்டு. அக்கருத்துடையவர்கள் தாங்களே நடத்தக்கடவர்கள்; அது கூடாதவழி யோக்கியராகிய பிறரைக்கொண்டாயினும் நடத்துவிக்கக்கடவர்கள். இத்தருமத்தை நானே நடத்தல் வேண்டும் என்னுங் கருத்து எனக்கு இல்லை. ''யாவர் குத்தினும் அரிசியானாற் போதும்'' என்றபடி யாவர் நடத்தினும் இத்தருமம் நிறைவேறினாற்போதும் என்பதே என்கருத்து.''

''மேற்கூறியபடி ஒருவித்தியாசாலை நடத்தப்படுமாயின், அதிலே தேர்ச்சி யடைந்தவர்களைத், திருக்கோயிலதிகாரிகளெல்லாரும், தங்களாலே நடத்தப்படுந் திருக்கோயில்களிலே சைவப்பிரசாரகர்களாக நியோகித்து அவர்களைக் கொண்டு சனங்களுக்குச் சைவசமயத்தைப் போதிப்பிக்கலாமே! தேவாலயந்தோறும் சனங்களுக்குச் சைவசமயத்தைத் தேசபாஷைகளிலே போதித்தல் வேண்டும் என்று, காமிகாகமத்திலே சிவபெருமானால் விதிக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய சைவ மடாதிபதிகள், இவ்வுண்மையை அறிந்திருந்தும், தங்களால் நடத்தப்படுந் திருக்கோயில்களிலாயினும், சைவப் பிரசாரணம் நடத்தியருளாத தென்னையோ! அவர்கள் செய்தருளின், அதுகண்ட பிறரும் அவ்வாறு செய்வார்களே! இங்ஙனஞ் செய்யப்படிற் சற்சமயமாகிய சைவசமயம் எங்குந் தழைத்தோங்குமே!!' இதனை எட்டுணையும் சிந்திப்பார் இல்லையே'!! ஏழை சொல் அம்பலத்துக்கேறுமா?''

''இது அவசியஞ் செயற்பாலதாகிய பரம தருமம் என்பது, தமது கருத்திற்பதியினும், என்வாயிற் பிறந்தமை பற்றி இதனை அவமதிப்போர் பலர். ஐயையோ, இதற்கு யாது செய்யலாம்!!! இராசாவினுடைய ஆஞ்ஞை புலையன்வாயிற் பிறந்தமை பற்றி அதற்கு அமைந்தொழுகாது அதனை அவமதிப்பவர் இல்லையே. சருவலோகைக நாயகராகிய சிவபெருமானுடைய ஆஞ்ஞை புல்லனுகிய என் வாயிற் பிறந்தமை பற்றி அதற்கு அமைந்தொழுகாது அதனை அவமதிப்பது தகுதியாமா? ஆகாதே!

''அடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதம்பூண்ட'' பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமான், நான் நல்லறிவும் நல்லொழுக்கமும் தம்மாட்டு மெய்யன்பும் சற்றும் உற்றறியாப் பரமசண்டாளனேயாயினும், தமது சமயங் குன்றுதலைக் காண்டலின் கண்ணே பெருங்கவலையும், அச்சமயத்தை வளர்த்தலின் கண்ணே பேராசையும், உடைமையினுற்றானே, என்னிம்மைப் பயன்களெல்லாவற்றையும் இழந்தும் பலராலே பலவகையிடையூறுகளை அனுபவித்தும் வருத்தமுறும் உண்மையைத் திருவுளங் கொண்டிரங்கி, என் கருத்தை யான் எடுத்த தேகம் விழுமுன் நிறைவேற்றியருளும் பொருட்டு, அவருடைய திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

நல்லூர் க. ஆறுமுகநாவலர்.

சென்னபட்டணம்
விபவவருடம், சித்திரைமீ,
(1868)

**அறிக்கை—2 :**

''பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானது திருவருளினலே, நான் யாழ்ப்பாணத்துள்ள புண்ணியவான்கள் சிலர் உபகரித்த பொருள்கொண்டு, சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலும், வித்தியாசாலை தாபித்து நடத்திக் கொண்டு வருதல் எல்லாருக்குந் தெரியுமே! அந்த வித்தியாசாலைகளின் வரலாறும், வரவு செலவு இருப்புக் கணக்கும், பிறவும், நான் அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்திய ஆவேதனங்களினல் நன்ருக விளங்கும். இவ்வருஷம் கோப்பாயிலே ஒரு வித்தியாசாலை தாபித்திருக்கின்

(தொடர்ச்சி 47-ஆம் பக்கம்)

# "அறுவகைச் சமயங்கள்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

(முற்றொடர்ச்சி)

முதன்முதலாகச் சுவேதாசுவதர உபநிடதத்தில்தான், சாங்கியக் கொள்கைபற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. துக்கத்தை வற்புறுத்துதல், வேத வேள்விகளுக்கு முதன்மை கொடாமை, வரம்பற்ற துறவுநிலை யுணர்வின் மிகுதியை இகழ்தல், கடவுள் உண்மை பற்றியோ இன்மை பற்றியோ அறியும் ஆர்வமின்மை, மாறிமாறிச் செல்லும் உலகின் பரிணாம நித்தியத்துவம், என்பவைகளில் சாங்கியக் கொள்கைக்கும், பௌத்தக் கொள்கைக்கும் இடையே ஒரு சிறிது ஒப்புமை உள்ளது. சாங்கியம் முதலில் கடவுள் உண்மையினை மேற்கொள்ளவில்லை. நாளடைவில் கடவுளுண்மையினை உடன்பட்டு ஏற்றுத் தழுவிக் கொண்டது. ஆதலின் நிரீசுவர சாங்கியம் என்றும், ஈசுவரசாங்கியம் என்றும் இருவகையாக அது வழங்கப்பெறும்.

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்னும் திருக்குறளில் திருவள்ளுவர் சாங்கியக் கொள்கையினைக் குறிப்பிட்டுள்ளார். இத்திருக்குறளுக்குப் பரிமேலழகர் ''சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தன் கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம்''-''அஃதாவது தன்மாத்திரைகள் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்துமாக இருபதாம். 'வகை தெரிவான் கட்டு' என்று உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப் பகுதியும் பெற்றாம். தத்துவம் இருபத்தைந்தனையுந் தெரிதலாவது, மூலப்பகுதி ஒன்றிற் றோன்றியது அன்மையிற் பகுதியே யாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட் டோன்றிய மானும், அதன்கட் டோன்றிய அகங்காரமும், அதன்கட் டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும், தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும், தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடையவெனவும், அவற்றின்கட் தோன்றிய மனமும், ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினாறும் தங்கட் டோன்றுவன வின்மையின் விகுதியே யாவதல்லது பகுதியாகா எனவும், புருடன்தான் ஒன்றில் தோன்றுமையானும், தன்கட் டோன்றுவன இன்மையானும் இரண்டு மல்லனெனவும், சாங்கிய நூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல். இவ் இருபத்தைந்தும் அல்லது உலகெனப் பிறிதொன்றில்லை என உலகினது உண்மையறிதலின், உலகம் அவனறிவின் கண்ணதாயிற்று'' என்று எழுதியிருக்கும் உரைவிளக்கப் பகுதி, இங்கு நாம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

கபிலர், ஆசுரி, பஞ்சசிகர், ஈசுவர கிருஷ்ணர், விந்தியாவாசர் ஆகியோர் சாங்கியக் கொள்கையின் மிகப் பழைய ஆசிரியர்களாகக் கருதப் பெறுகின்றனர். கபிலரின் சாங்கியப் பிரவசன சூத்திரம், தத்துவ சமாசம், ஈசுவர கிருஷ்ணரின் சாங்கிய காரிகை, வாசஸ்பதி மிச்ரரின் சாங்கிய தத்துவகௌமுதி, சாங்கிய நாராயணரின் சாங்கிய சந்திரிகை, அநிருத்தரின் சாங்கிய சூத்திரவிருத்தி (15-ம் நூ), மகாதேவரின் சாங்கிய சூத்திரவிருத்திகாரம் (கி.பி.1500), நாகேசரின் லகுசாங்கிய சூத்திர விருத்தி ,விஞ்ஞானபிட்சுவின் சாங்கியபிரவசன பாடியம், சாங்கியசாரம் (கி.பி.1600) என்பவை, புகழ்மிக்க சிறந்த சாங்கிய தத்துவ நூல்களாகும்.

## (4) யோகம்:

யோகம் என்னும் சொல், யுஜ் என்னும் பகுதியினின்று தோன்றியது; அதற்கு ஒன்று சேர்தல் அல்லது இணைதல் என்பது பொருள். உயிரும் இறைவனும்-சீவாத்மாவும் பரமாத்மாவும்-ஒன்றுசேர்வதற்குத் துணைபுரியும் நெறியே யோகம் என வழங்கப்படுகிறது. யோகத்தின் அடிப்படை, சாங்கிய தத்துவத்துடன் தொடர்புடையது. 'சாங்கிய தத்துவத்திற்குச் சமமான அறிவும், யோகக் கலைக்கு நிகரான ஆற்றலும் இல்லை' என்பது பெரியோர் கருத்து.

முதன்முதல் யோக நெறியை விளக்கியவர் பதஞ்சலிமுனிவர். அவருக்கு முன்னரே யோகக் கலை வளர்ந்திருந்தது. அஃது எப்போது, எவரால், தோற்றுவிக்கப்பட்டது என்று சொல்லுதல் இயலாது. ஆயினும் பதஞ்சலி முனிவரே, தமது யோகசூத்திரம் என்னும் நூலால், இந்நெறியைப் பெரிதும் விளக்கியருளினார். ஆதலின் அவரே யோகநெறியின் முதலாசிரியராகப் போற்றப் பெறுகின்றார். பதஞ்சலி முனிவரைப் பற்றி நமக்குத் தெளிவான வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் தெரிய

வில்லை. செவிவழிச் செய்தியாகப் பற்பல கதைகள் கூறப்படுகின்றன.

### பதஞ்சலி சூத்திரம்:

பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம், 195 சூத்திரங்களைக் கொண்டது. மனித வாழ்க்கை வளம் பெறுவதற்குரிய நடைமுறைப் பயிற்சி களை, இவைகள் சிறப்புற விளக்குகின்றன. இந்நூல் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. முதற்பகுதி யோகம் என்பது என்ன? அதன் குறிக்கோள் யாது? அஃது எவ்வாறு தொடங்கு கிறது? எவ்வாறு முடிகின்றது? உணர்வுநிலை பரவசநிலை சமாதிநிலை என்பன யாவை? அவைகளின் பயன்கள் என்ன? அப்பயனை அடையும் செயல்முறைகள் எவை? என்பன வற்றைப் பற்றி விளக்குகிறது. இம் முதற்பகு திக்குச் சமாதிபாதம் என்பது பெயர்.

இரண்டாவது பகுதி, யோகத்தின் நடை முறைக் கூறுகளையும், பொதுக் கொள்கை களையும் விவரிக்கின்றது. எதற்காக யோகம் செய்யப்படுதல் வேண்டும்? யோக நெறியை மேற்கொள்வதன் பயன் யாது? யோகநெறிக் குரிய ஒழுங்குமுறைப் பயிற்சிகளுக்கு உரிய சாதனங்கள் யாவை? அவற்றின் இயல்புகள் என்னென்ன? என்பனவற்றை, இரண்டாவது பகுதி விளக்குகின்றது. இதற்குச் சாதனபாதம் என்பது பெயர்.

மூன்றாம் பகுதி, முன்னர் விளக்கிய புற நிலைச் சாதனங்களுடன் தொடர்புடைய அக நிலைச் சாதனங்களைப் பற்றியும், அவற்றால் ஏற்படக்கூடிய உலகியல் அருளியல் நலங்களைக் குறித்தும் விளக்குகின்றது. இப் பகுதியானது யோகத்தின் மூலம் பெறக்கூடிய விபூதிகள் ஆகிய பலவகைச் சித்திகள் பற்றி விளக்குவத னால், இதற்கு விபூதிபாதம் என்பது பெயர்.

நான்காம் பகுதி, சீவன் குணம் சித்தம் புத்தி அகங்காரம் மனம் இந்திரியம் தன்மாத் திரை ஐம்பூதங்கள் முதலிய தத்துவச் செய்தி களை விவரிக்கின்றது. இவற்றின் முடிந்த முடி பான பயன் கைவல்யம் என்னும் ஆன்ம விடு தலை ஆதலின், இதற்குக் கைவல்ய பாதம் என்று பெயர்.

### அட்டாங்க யோகம்:

மனிதன் பொதுவாகத் துன்பங்களையே பெரிதும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். அவன் இன்பத்திற்காக ஏங்கி நிற்கின்றான். விருப்பு வெறுப்புக்கள், செயல்கள், அவற்றின் விளைவாகிய கன்மங்கள், அவற்றால் விளை யும் பலவகைக் குறைபாடுகள், பிறப்பு இறப்புக் கள் ஆகியவற்றில் அகப்பட்டுக் கொண்டு, மனி தன் சுழன்று உழன்று துயருறுகின்றான். அவன் தனக்கென ஒரு செயலும் உரிமையும் இன்றிப் பலவற்றிற்குக் கட்டுப்பட்டு, அடிமை நிலை யுற்றுக் கிடக்கின்றான். மூலப் பிரகிருதியின் செயல்களுக்கு உட்பட்டு, அவனுடைய உடலும் உள்ளமும் வாழ்க்கையும் முடங்கிக் கிடக்கின் றன. அவனுடைய நிலை, சிறைப்பட்டவனின் நிலையை ஒத்துள்ளது. எனினும் இக் கட்டுக் களினின்று விடுபட்டு, மனிதன் தன் உண்மை நிலையை உணர்ந்து, உய்தி பெற ஒரு வழி யுள்ளது. அதுதான் யோக நெறி.

இந்த யோக நெறி, எண்வகைப் பகுப்புக் கள் (அஷ்ட அங்கங்கள்) கொண்டது. அவை களின் மூலமாகத்தான் மனிதன் தூய்மையும் விடுதலையும் இன்பமும் பெறமுடியும். யோக நெறியின் எண்வகைப் பகுப்புக்கள் ஆவன: இயமம் (Abstention), நியமம் (Observance), ஆசனம் (Posture), பிராணாயாமம் (Regulation of breath ), பிரத்தியாகாரம் (Withdrawal of senses ), தாரணை ( Concentration), தியானம் ( Meditation ), சமாதி ( Trance ) என்பன.

### திருமந்திரம்:

சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக விளங்கும் திருமூலர் திருமந்திரம், இந்த யோக நெறியினைக் குறித்துத் தமிழில் பெரிதும் சிறப்பாகவும், விரிவாகவும் விளக்குகின்றது. இயமம் நியமம் முதலிய எண்வகை யோக உறுப்புக்களை,

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்கம் ஆவது மாமே

என்னும் திருமந்திரப் பாடல், சுருக்கமாகத் தொகுத்துக் குறிப்பிடுகின்றது. அகிம்சை சத் தியம் அஸ்தேயம் பிரமசரியம் அபரிக்கிரகம் சவுசம் சந்தோடம் தவம் சுவாத்தியாயம் ஈசு வரப்பிரணிதானம் என்னும் பத்துவகையான (1, 2) இயம நியமங்களை,

கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்
குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில்நின் றானே

தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்தும் நியமத்த னாமே

தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்த னாமே

என்னும் திருமந்திரப் பாடல்கள் சிறப்புற எடுத்துக் கூறுகின்றன. யோகத்திற்குரிய(3) ஆச னங்களையும் அவைகளின் பல்வேறுவகைகளை யும்,

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாம்முது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே

எனவரும் திருமந்திரப் பாடல் கூறுதல் காண லாம். மூச்சுப் பயிற்சி ஆகிய (4) பிராணாயா மத்தின் இயல்பினை, (A)

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

எனவரும் இனிய பாடல்களால் திருமூலர் அழ குற விளக்கியருள்கின்றார். இவ்வாறே (5) பிரத்தியாகாரத்தின் பெற்றியினை,

நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கும் மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யுந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே

மூலத் துவாரத்தை மொக்கர மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே

எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரல் கீழே
உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே.

என்னும் திருமந்திரச் செய்யுள்களால், திரு மூலர் சிறப்புற விளக்கியிருக்கின்றார். (6) தாரணையின் தன்மை,

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே.

(A) "The remarkable improvement in the heart's nutrition and action is, I think, to a great degree caused by the deep inspirations which are necessitated by the act of climbing, especially steady and prolonged climbing. This consideration has led me to pay particular attention to respiratory exercises, which since then have been very useful to myself and many others, especially persons with weak heart muscles.....I have mostly commenced with moderately deep inspirations and expirations continued during three to five minutes, once or twice a day, and have gradually increased the exercises to ten minutes or a quarter of an hour...."

—*Dr. Weber*,
British Medical Journal,
*Quoted by Dr. S. Radhakrishnan.*

கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பார்க்கு
உடையாமல் ஊழி இருக்கலு மாமே.

என்னும் திருமந்திரப் பாடல்களால், செவ்வி தின் விளக்கப்பெற்றுள்ளது. (7) தியானத்தின் சிறப்பு,

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ னாமே.

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கலொண் ணாதே.

என்னும் திருமந்திரப் பாடல்களாலும்; (8) சமாதியின் இயல்பும் பயனும்,

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.

மூல நாடி முகட்டலகு உச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பீர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே

பூட்டொத்து மெய்யிற்பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற அந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே.

என்னும் திருமந்திரப் பாடல்களாலும்; திறம் பட விளக்கப்பெற்றுள்ளன. இவ்வாற்றாற் பண்டைத் தமிழ்நாட்டில் யோகநெறிக்கலை பெரிதும் பரவியிருந்தது என்பதும், திருமூலர் முதலிய வித்தகச் சித்தர்கணத்தினர் யோக நெறிக் கலையில் வல்லவர்களாய்த் திகழ்ந்திருந் தனர் என்பதும், பிறவும் நன்கு உணரப்பெறும்.

**யோக சித்திகள் :**

யோகப் பயிற்சிகளின்மூலம், உடல் நல மும் வலிமையும் ஏற்படுகின்றன; நோய்கள் தீர்கின்றன. நாம் ஒன்றி நின்று நோக்கும் பொருள்களைப்பற்றிய செய்திகளையெல்லாம், உள்ளொளியுணர்வினால் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. காணாதன எல்லாம் காணும் தெளிவுக் காட்சியும் (Clair-Voyance), கேளாதன எல்லாம் கேட்கும் தெளிவுக் கேள்வி யும் ( Clair-audience ), நமக்குக் கிடைக்கின் றன. முக்காலமும் அறியவல்ல ஆற்றலும், எங்கும் நிகழ்வனவற்றையுணரும் திறனும், பரசித்த ஞானம் என்னும் பிறர் மனம் அறியும் பெற்றியும் ( Thought-reading ), யோகப் பயிற்சியினால் ஒருவர் பெறமுடியும். தொலைவில் இருப்பினும் ஒருவர்க்குத் தம் கருத்தை யுணர்த்தல், அவர் கருத்தைத் தாம் உணர்தல்( Telepathy ), பின் நிகழ இருப் பனவற்றை முன்னர் உணர்தல் (Prophetic vision)

போன்ற ஆற்றல்களும், யோக சாதனையாற் பெறுதல் இயலும். சுருங்கக் கூறலுறின்,

கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம்;
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலின் இரதம்வைத்து ஐந்துஉலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்;
விண்ணவரை ஏவல்கொள்ளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல்மேல் இருக்கலாம்;
தன்நிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது; சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

என்று தாயுமானசுவாமிகள் பாடுவதுபோன்ற எல்லாச் சித்திகளையும், யோக நெறியின் வாயிலாகப் பெறுதல் கூடும் என்பது, தெள்ளிதின் விளங்குகின்றது.

யோகம் என்னும் ஒன்றினையே, கர்ம யோகம் ( Salvation by work ), பக்தியோகம் (Perfection through devotion to God), ஞானயோகம் ( Perfection through wisdom ), இராஜயோகம் ( Training of the mind and its psychic powers ), அடயோகம் (Methods of bodily control and regulation of breath) எனப் பலவகையிற் பிரித்து வெவ்வேறாக வைத்தும் நூல்கள் கூறும். யோக நூல்கள் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆஞ்ஞை சகஸ்ராரம் என்னும் ஆதாரங்கள் பற்றியும், இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் நாடிகள் பற்றியும், விரிவாக விளக்கும்.(B)

**தொல்காப்பியம்:**

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதாகிய தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலில் யோக நெறியின் அட்டாங்கம் பற்றிய செய்திகள் ''நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்'' எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் என்னும் பழம்பெரும் உரையாசிரியர் ''நாலிரு வழக்கின் தாபதப் பக்கம் ஆவது, முக்காலமும் உணர்ந்த முனிவரர் அருளிய ஆகமத்தின் வழிநின்று, வீடுபெற முயல்வோர்க்கு உரியனவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறுபாடு. இவ்வெட்டும் தவஞ்செய்வதற்கு உரியன என்றும், தவஞ்செய்து யோகம் செய்வோர்க்கு உரியன என்றும் இருவகைப்படும். அவற்றுள் தவஞ்செய்வோர்க்கு உரிய எட்டாவன: ஊண் நசையின்மை; நீர்நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என்பன. இவற்றிற்கு உணவிலும் நீரிலும் சென்ற மனத்தைத் தடுத்தல், ஐந்தீ நாப்பணும் நீர்நிலையிலும் நிற்றல், கடலும் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றல், தாமரையும் ஆம்பலும் ஆமையுமாகிய ஆசனத்திருத்தல், உண்டற் காலை உரையாடாமை, வாய்வாளாமை எனப் பொருள்''.

''இனி யோகஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன: இயமம், நியமம், ஆசனம், வளிநிலை (பிராணாயாமம்), தொகைநிலை (பிரத்தியாகாரம்), பொறைநிலை (தாரணை), நினைதல் (தியானம்), சமாதி என்பன. இவற்றின் இயல்புகளையெல்லாம்,

''பொய்கொலை களவே காமம் பொருள்நசை
இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்'' (1)

''பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பயன் ஆசாற் களித்தலொடு
நயனுடை மரபின் நியமம் ஐந்தே'' (2)

''நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் என்று
ஒத்த நான்கின் ஒல்கா நிலைமையொடு
இன்பம் பயக்கும் கமலம் முதலிய
அந்தமில் சிறப்பின் ஆசனம் ஆகும்'' (3)

''உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்
தந்தம் இயக்கம் தடுப்பது வளிநிலை'' (4)

''பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல்
ஒருவழிப் படுப்பது தொகைநிலை யாகும்'' (5)

''மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை'' (6)

''நிறுத்தின அம்மனம் நிலைதிரி யாமல்
குறித்த பொருளோடு கொளுத்துதல் நினைவே'' (7)

''ஆங்கனம் குறித்த ஆய்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி'' (8)

என்னும் உரைச் சூத்திரங்களால் உணர்க'' என்று விரிவாக விளக்கியுள்ளார். இவற்றால் தொல்காப்பியர் காலத்திற்கும் எத்துணையோ பலநூற்றாண்டுகள் - ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தவஞ்செய்வாரும், தவஞ்செய்து யோகம் செய்வாரும் தமிழகத்தில் இருந்தனர் என்பது தெரிகின்றது.

**சிவஞானசித்தியார்:**

தமிழகத்திற்குத் தனிச்சிறப்பாக உரிய தத்துவக்கொள்கை சைவசித்தாந்தம் ஆகும். அக்கொள்கையினை விளக்கும் சைவசித்தாந்த நூல்கள் பல. அவற்றுள் ஒன்று, சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த அருள்நந்தி சிவாசாரியர் இயற்றிய சிவஞான சித்தியார். அந்நூல் இறைவனை அடைதற்

(B) "The Yoga has developed a system of physiology which relates to nadis, or infinitely small nerves, which traverse the body, more than 700 million in number, psychic centres or cakras, a hidden energy known as kundalini, said to reside at the base of the spine, which when aroused, stimulates the cakras to activity..."

—*Sri John Woodroffe*,
The Serpent Power

குரிய நெறிகளாகச் சற்புத்திரமார்க்கம், தாச மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு நெறிகளைக் கூறுகின்றது. அவற்றுள் சகமார்க்கம் எனப்படும் தோழமைநெறி, யோக நெறியேயாகும்.

''சகமார்க்கம் புலன்ஒடுக்கித், தடுத்துவளி இரண்டும்,
சலிப்பற்று, முச்சதுர முதல்ஆதா ரங்கள்
அகமார்க்கம் அறிந்துஅவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து, அங்கு
அணைந்துபோய் மேல்ஏறி, அலர்மதிமண்டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி,
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக, வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும்
உழத்தல்உழந்தவர், சிவன்றன் உருவத்தைப் பெறுவர்''

என்று, சிவஞானசித்தியார் என்னும் சைவசித்தாந்த தத்துவ ஞானநூலில், யோகத்தின் இயல்புகள் அனைத்தும் சுருக்கமாகத் தொகுத்து விளக்கப்பெற்றுள்ளன.

**யோகம் பற்றிய நூல்கள்:**

பதஞ்சலிமுனிவரின் யோகசூத்திரம், வியாசரின் யோகசூத்திரபாடியம், வாசஸ்பதி மிசிரரின் தத்துவ வைசாரதி, போஜரின் இராஜ மார்த்தாண்டம், விஞ்ஞான பிட்சுவின் யோக வார்த்திகம், யோகசங்கிரகம் என்பவைகள் யோகநெறியைப் பற்றி விளக்கும் நூல்களாகும். நாகேசபட்டர், நாராயணபிட்சு, மகாதேவர் முதலியவர்களும் யோகம் பற்றிய நூல்களை எழுதியுள்ளனர். மைத்திராயணம், சாண்டில்யம், யோகதத்துவம், தியானபிந்து, அம்சம், நாதபிந்து என்னும் பிற்காலத்து உபநிடதங்களும், யோகநெறியின் முதன்மையையும், சிறப்பையும் வலியுறுத்துகின்றன.

## (5) மீமாம்சை:

'மீமாம்சை' என்னும் சொல்லுக்கு: ஆராய்தல் என்பது பொருள். வேதத்தின் முற்பகுதி கருமகாண்டம் எனவும், பிற்பகுதி ஞானகாண்டம் எனவும் வழங்கும். வேதத்தின் முற்பகுதியாகிய கருமகாண்டத்தை ஆராயும் ஆராய்ச்சியே மீமாம்சை என வழங்கப்படுகின்றது. மீமாம்சைத் தரிசனம், வேதகாலத்திலிருந்தே தொடங்குகின்றது. வைதிக தருமங்களைச் செய்வதில் ஏற்படும் ஐயங்கள் விவாதங்கள் விதிமுறைகள் கொள்கைகள் ஆகியவற்றை, மீமாம்சை நூல் ஆராய்ந்து விளக்குகின்றது. மீமாம்சையானது, வேள்விகளைச் செய்யும் முறைகளைக் கூறுவதனால், வேள்விநூல் என்றும்; வேதத்திற்குப் பொருள்கொள்ளும் முறைமைகளை விவரிப்பதனால் பொருள் விளக்க நூல் என்றும்; தத்துவக் கொள்கைகளை ஆராய்வதனால் தத்துவநூல் என்றும்; மீமாம்சையினைக் குறிப்பிடுதல் பொருந்தும். பௌத்தர்களைப் போல உலகத்தை இல்பொருள் என்று கருதாமல், உலகம் ஓர் உள்பொருளே என்று, மீமாம்சை உடன்படுகின்றது. வேள்விகளையும், அவற்றிற்குரிய பல அதிதேவதைகளையும் குறிப்பிடுவதனால், மீமாம்சை பல தெய்வ நோக்குடையதாகத் (Polytheistic) தோன்றுகிறது; ஆயினும் ஒரு வினையைச் செய்பவனுக்கு அவ்வினையே பயனைத் தர வல்லதாகும், கடவுள் வேண்டுவதில்லை என்று மறுத்துரைப்பதனால், மீமாம்சையானது கடவுளின்மைக் கொள்கையை உடையதாகவே (Atheistic) காணப்படுகின்றது.

மீமாம்சைத் தத்துவமும் நூலும், இந்து சமயத்திற்குப் பெரிதும் முதன்மை உடையனவாக விளங்குகின்றன. இந்து சமய மக்களின் அன்றாடக் கடமைகளை விவரிக்கின்ற தரும சாத்திரங்கள், மீமாம்சை விதிகளின் படியே பொருள்கொள்ளப்பட வேண்டி யிருக்கின்றன. தற்போதைய இந்துச் சட்டத்தில் மீமாம்சைத் தத்துவத்தின் சாயல்களையும் செல்வாக்கையும் பெரிதும் காணலாம். (C)

**மீமாம்சைச் சூத்திரம்:**

கி.மு.5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் எனக் கருதப்பெறும் சைமினிமுனிவர், மீமாம்சைத் தரிசனத்தை விளக்கி ஒரு சூத்திர நூல் இயற்றினார். அது மீமாம்சைச்சூத்திரம் எனவும், சைமினி சூத்திரம் எனவும் வழங்கும். இந்நூல் 2621 சூத்திரங்களும், 600 அதிகரணங்களும், 60 பாதங்களும், 12 அத்தியாயங்களும் கொண்டது. பொதுவாக ஒவ்வொரு அத்தியாயமும் 4 பிரிவுகள் கொண்டது. ஆனால் 3, 6, 10 என்னும் அத்தியாயங்கள் மட்டும், 8 பிரிவுகளைக் கொண்டுள்ளன. இந்நூல் பிரமாணஇயல், கருமபேதஇயல், அங்கஅங்கி இயல், பிரயோக இயல், முறைமைப்பாட்டியல், மாட்டேறு, மாட்டேற்றியல், ஊகஇயல், விலக்கியல், தந்திர இயல், பிரசங்கஇயல் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டிருப்பதனால், இதற்குத் துவாதசலட்சணி என்னும் பெயர் வழங்கும்.

ஆனால், இவற்றுடன் வேறு 4 அத்தியாயங்களும், 600 சூத்திரங்களும், 350 அதிகரணங்களும், 16 அத்தியாயங்களும் கொண்ட மற்றொரு பகுதியும், இம் மீமாம்சைச் சூத்திரத்திற்கு உள்ளது. இது பலவகைப்பட்ட பொருள்களையும் கலந்து தொகுத்துக் கூறுவதனால், சங்கர்ஷ காண்டம் எனவும்; 16 பிரிவுகளைக் கொண்டிருப்பதனால் சோடசலட்சணி எனவும் பெயர்பெறும். சபரர், குமாரிலர், பிரபாகரர் என்னும் பேராசிரியர்கள், இப் பகுதியைப் புறக்கணித்துள்ளனராயினும், இப்பகுதி மேற்

(C)" The importance of Mimamsa is testified by its present-day effect, for no part of the daily life of the Hindu is without the influence of the teachings of Mimamsa. All rituals and ceremonies depend upon it; all moral conduct is guided by it; all Hindu law is founded upon it. Mimamsa breathes life into the very super-structure of Indian Culture"

*Theos Bernard,*
Hindu Philosophy, p.124
—*Dr. S. Radhakrishnan,*
Indian Philosophy, II p.376

குறிப்பிட்ட நூலின் தொடர்ச்சியே யாகு மென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வேதம் ஒருவரால் செய்யப்பட்டது (பவுரு டேயம்) அன்று; அது தானே தோன்றியது (சுயம்பு). ஆதலின் வேதமே மிக மேலான சிறந்த பிரமாண நூலாகும் என்பர் மீமாம்சகர்.

**மீமாம்சையின் கொள்கைகள்:**

வேதவாக்கியங்கள் விதி (Commands) நிஷேதம் (Prohibitions), மந்திரம் (Hymns) நாமதேயம் (Substantives), அருத்தவாதம் (Explanations) எனப் பொதுவாக ஐந்து வகைப்படும். விதிக்கப்படும் வினைகளைச் செய்வதனால் புண்ணியமும், விலக்கப்படும் வினைகளைச் செய்தலால் பாவமும் உண்டாகும். புண்ணியத்தைச் செய்தவர்கள் இன்பத்தையும், பாவத்தைச் செய்தவர்கள் துன்பத்தையும் அடைவர்.

கருமம் அல்லது வினையைச் செய்தவர்களுக்கு, அவ்வினையே சுவர்க்கம் முதலிய பயன்களை அளிக்கும். வினையின் பயனைத் தருவதற்குக் கடவுள் என்ற ஒரு பொருள் வேண்டுவதில்லை. ஏதேனும் ஒன்றை அடைவதற்கு விரும்பிச் செய்யப்படும் செயல், காமிய கன்மம் எனப்படும். காமியகன்மங்கள், அவரவர் விரும்பிய பயன்களை அளிக்கும். எதனையும் விரும்பாமல் வேதத்தில் விலக்கப்பட்ட செயல்களை ஒழித்து, விதிக்கப்பட்ட வேள்விகளைச் செய்யின், அதனால் முத்திநிலையை அடையலாம்.

வேதம் 'ஆன்மாவை அறிக' என விதித்திருப்பதால், ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்ப், பிறந்திறந்து வினைகளைச் செய்து, வினைப் பயன்களை நுகர்ந்து வரும் என்பது பெறப்படும். இவ்வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒன்று உண்டு என்பதும், உலகம் தோன்றியழியும் என்பதும் பொய். இவ்வுலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும் என்பது, மீமாம்சகரின் கொள்கை.

**குமாரிலபட்டர்:**

சைமினி முனிவரின் மீமாம்சைச் சூத்திரத்திற்குச் சபரமுனிவர் என்பவர், பாடியம் இயற்றினார். அவர் கி.மு. முதல் நூற்றாண்டுக்கு முற்பட்டவர். அவருக்கும் முன்னரே பர்த்துருமித்திரர், பவதாசர், அரி, உபவர்ஷர் என்பவர்களும், உரைகள் இயற்றியுள்ளனர். ஆனால் அவைகள் இப்பொழுது நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. பிற்காலத்திய மீமாம்சை நூல்களுக்கெல்லாம், சபரமுனிவரின் பாடியமாகிய பேருரையே அடிப்படையாகும். சபரமுனிவருக்குப் பின்னர்க் குமாரில பட்டர் என்பவர் (கி.பி. 590-650), சைமினியின் மீமாம்சைச் சூத்திரத்திற்கும், சபரபாடியத்திற்கும் விரிவுரை இயற்றினார். குமாரிலபட்டர், சங்கரருக்கு (கி.பி. 788-820) முற்பட்டவர்.

**பிரபாகரர்:**

குமாரிலபட்டர், சைமினிசூத்திர நூலுக்கும், சபரபாடியத்திற்கும் இடையே, சிறு பான்மை வேறுபாடு கொண்டு, சைமினிசூத்திர மதம் தழுவி, வழிநூல் செய்தார். அவரது மாணாக்கராகிய பிரபாகரர் என்பவர், சபர முனிவரின் பாடியத்தைப் பின்பற்றி வழிநூல் செய்தார். குமாரிலபட்டர் கன்மமே பயன் கொடுக்கும் என்றும், நையாயிகர்கள் கூறுவது போல முக்திநிலையில் ஆனந்தம் உண்டு என்றும் கூறுகின்றார். பிரபாகரர், ஒருவர் செய்த கன்மம் அழிந்துபடுதலால், கன்மமே பயன் தராது; அக் கன்மத்தின் அழிவில் அபூர்வம் என்ற ஒன்று தோன்றிநின்று பயன்கொடுக்கும் என்றும்; வைசேடிகர் கூறுவதுபோல ஆன்மாவானது பாடாணம் (கல்) போல அசைவற்றுக் கிடப்பதே முத்திநிலை என்றும் கூறுவர். பொருள்களின் தன்மை பற்றிய விளக்கங்களிலும், சிறுபான்மை குமாரிலபட்டர்க்கும், பிரபாகரர்க்கும் இடையே சிறு சிறு கருத்துவேறுபாடுகள் உண்டு. இவ்வாற்றால் மீமாம்சை மதமானது, பட்டாசாரியர்மதம் என்றும், பிரபாகரர்மதம் என்றும் இருவகைப்படும்.

**பயன்மிக்க பகுதிகள்:**

நையாயிகநூலிற் கூறப்படும் தருக்கம் போல, மீமாம்சை நூலிற் கூறப்பெறும் செய்திகள் பல, பொதுவாக எல்லா நூல்களுக்குமே உரியனவாகவும், உறுதுணை புரிவனவாகவும் அமைந்துள்ளன. (1) ஒவ்வொரு நூலுக்கும் உரிய உட்பிரிவாகிய அதிகரணம் என்பது தன்னால் கூறப்படும் பொருள் (விஷயம்), அதன்கண் ஐயப்பாடு (சம்சயம்), அதற்குப் பிறர்கூறும் பக்கம் (பூர்வபட்சம்), அதனை மறுத்துக் கூறும் கொள்கைமுடிவு (சித்தாந்தம்), ஒன்றற்கொன்றுள்ள இயைபு (சங்கதி) என்னும் ஐந்து கூறுகளை உடையதாக இருத்தல் வேண்டும். இந்த ஐந்து கூறுகளின் நிலைக்களமே அதிகரணம் எனப்படும்.

(2) ஓர் அதிகரணத்திற்கும், மற்றோர் அதிகரணத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு ஆறுவகைப்படும். அவையாவன: ஆட்சேபம், திருட்டாந்தம், பிரதிதிருட்டாந்தம், பிரசங்க சங்கதி, உற்பத்திசங்கதி, அபவாதசங்கதி என்பனவாகும்.

(3) ஒரு நூலின்கண் விதிக்கப்படும் விதியானது, எய்தாதன எய்துவித்தல் (அபூர்வ விதி), எய்தியதனை இகந்துபடாமற் காத்தல் (நியமவிதி), எய்தியதனை ஒருமருங்கு மறுத்தல் (பரிசங்கியா விதி) என்று மூன்றுவகைப்படும். இங்ஙனம் மீமாம்சைநூல் கூறும் இலக்கணங்கள் பலவும், எல்லா நூல்களுக்கும் பொருந்துவனவாகும்.

**நியாயங்கள்:**

இவைகள் மட்டுமேயன்றி, மீமாம்சைத் தத்துவநூல்களில் இடையிடையே எடுத்துக் காட்டப்பெறும் நியாயங்கள் என்பனவும், எல்லா நூல்களின் பொருள்விளக்கத்திற்கும்,

சுவைநுகர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவனவாக உள்ளன. மீமாம்சை நூல்களில் வரும் அந்தகச நியாயம், அசகளநியாயம், பங்கசநியாயம், பிரமரகீடநியாயம், தாலிபுலாக நியாயம், சாக பசுநியாயம், சாகாசந்திரநியாயம், சுந்தோப சுந்தநியாயம், தூலாருந்ததிநியாயம், கைமுதிக நியாயம், சியாலசாரமேயநியாயம், கூபமண்டூக நியாயம், கெதானுகெதிகநியாயம், கட்டகுடிப் பிரபாதநியாயம், மயூரநிருத்தனநியாயம், காக தாலியநியாயம், தண்டாபூபிகநியாயம், சூசி கடாகநியாயம், இராசபுரப்பிரவேசநியாயம், ஆலிகஜம்புகநியாயம், மர்க்கட மார்ச்சால கிசோர நியாயம், நகிநிந்தாநியாயம், பகவிருத்தி நியாயம், அர்த்த வைசச நியாயம், காகாட்ச கோள நியாயம், துஷ்யது துர்ச்சன நியாயம், குணாட்சரநியாயம், லூதாதந்துநியாயம், பங்கு அந்த நியாயம், களேகபோதநியாயம், கபிஞ்சல நியாயம் என்பன போலவரும் நியாயங்கள், எல்லா நூல்களின் பொருள் விளக்கத்திற்கும் பெரிதும் துணைபுரிவனவாக, விளங்குவதுடன்; தற்காலச் சட்டங்களின் விளக்க முறைகளிலும் இவற்றிற்கு இணையான விதிகள் உள்ளன.(D)

**மீமாம்சை நூல்கள்:**

சைமினியின் மீமாம்ச சூத்திரம்; சபரரின் மீமாம்சசூத்திர பாஷ்யம்; பிரபாகரரின் பிருகதி, சாலிகநாதரின் ருச்விமாலா, பிரகரணபஞ்சிகா, பரிசிஷ்டா; பாவநாதரின் நயவிவேகம்; குமாரிலபட்டரின் சைமினிசூத்திர பாஷ்ய வார்த்திகம்; சுசரிதமிசிரரின் காசிகா; சோமசேசுவர பட்டரின் நியாயசுதா, தந்திரவார்த்திகம்; வேங்கடதீட்சிதரின் வார்த்திகாபரணம்; பார்த்தசாரதி மிசிரரின் நியாயரத்னாகரம்; தந்திர ரத்னம்; மண்டனமிச்ரரின் விதிவிவேகம், மீமாம்சா னுக்கிரமணி; வாசஸ்பதியின் நியாயகணிகம்; மாதவரின் சைமினீய நியாயமாலா விஸ்தாரம்; அப்பைய தீட்சிதரின் விதிரசாயனம்; ஆபதேவரின் மீமாம்ச நியாயப் பிரகாசம்; உலூகாட்சி பாஸ்கரரின் அர்த்தசங்கிரகம்; காண்டதேவரின் பட்டதீபிகை, மீமாம்ச கவுஸ்துகம்; இராகவானந்தரின் மீமாம்ச சூத்திராதிதிட்டி; இராமேசுவர சிவயோகியின் சுபோதினி; விசுவேசுவரபட்டரின் பட்டசிந்தாமணி; வேதாந்த தேசிகரின் சேஸ்வரமீமாம்சை முதலிய நூல்கள், மீமாம்சைத் தத்துவத்தை விளக்கும் அரிய பெரிய நூல்களாகும்.

## (6) வேதாந்தம்:

வேதமானது கருமகாண்டம் எனவும், ஞானகாண்டம் எனவும், இருதிறப்படும். இவற்றுள் கருமகாண்டம் பூர்வமீமாம்சம் எனவும், ஞானகாண்டம் உத்தர மீமாம்சை அல்லது வேதாந்தம் எனவும், பெயர்பெறும். வேதத்தின் முடிவுப் பகுதிகளாகிய உபநிடதங்களினின்று பெறப்படும் தத்துவக் கருத்துக்களை ஆராய்ச்சி செய்து விளக்குவது, வேதாந்தமாகும். வேதத்தின் அந்தமாக விளங்கும் உபநிடதங்களைத் தழுவிய எல்லாத் தத்துவக் கொள்கைகளுமே, 'வேதாந்தம்' என்று வழங்கப்படுவதற்கு உரிமையுடையன எனினும், கேவலாத்வைதம்—ஏகான்மவாதம்—மாயாவாதம்—பிரச்சின்ன பவுத்தம் என்றெல்லாம் பிறரால் சுட்டப்பெறும் சங்கரரின் அத்வைதக் கொள்கைக்கே, வேதாந்தம் என்னும் பெயர் பெரும்பாலும் வழங்கப்பெற்று வருகின்றது.

ஒவ்வொரு தத்துவ நெறிக்கும் ஓர் அடிப்படைச் சூத்திர நூல் அமைந்துள்ளது. சூத்திர நூல்கள், ஒவ்வொரு குறிப்பிட்ட தத்துவத்தின் கொள்கைகளைத் தொகுத்து வரிசைப்படுத்தித் தெளிவான முறையில் விளக்குகின்றன. அம் முறையில் வேதாந்த சூத்திரம் என்பது, பாதராயணர் எனப்படும் வியாசர் இயற்றியதாகும். ஒவ்வொரு துவாபர யுகத்திலும், திருமால் வியாசராகத் தோன்றி, வேதங்களைத் தொகுத்து வகைப்படுத்துகின்றார் எனப் பெரியோர்கள் கூறுவர். வியாசர் என்னும் சொல், தொகுத்தவர் - ஒழுங்குபடுத்தியவர் எனப் பொருள்படும். வேதங்களைத் தொகுத்து ஒழுங்குபடுத்தியதனால், பாதராயணருக்கு வேதவியாசர் எனப் பெயர் ஏற்பட்டது. இந்த யுகத்தின் வியாசருக்குக் கிருஷ்ணத்துவைபாயனர் என்பது பெயர். வியாசர், பராசர முனிவருக்கும், சத்தியவதிதேவிக்கும் தோன்றிய மைந்தராவர். அவர் கருமை நிறம் வாய்ந்தவராகவும், ஒரு தீவில் பிறந்தவராகவும் இருப்பதனால், அவருக்குக் கிருஷ்ணத்துவைபாயனர் என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது. அவர் நெடுங்காலம் பதரிகாசிரமத்தில் வாழ்ந்ததனால், அவருக்குப் பாதராயணர் என்னும் காரணப் பெயர் வழங்குவதாயிற்று. அசுவத்தாமர், மகாபலி, அனுமன், விபீடணர், கிருபர் பரசுராமர் என்பவர்களுடன், இவரும் ஒரு சிரஞ்சீவி (நெடுங்காலம் வாழ்பவர்) என்று கருதப்பெறுகின்றார்.

வியாசர் வேதங்களை நான்காகப் பகுத்தார். அவைகள் முறையே இருக்கு எசுர் சாமம் அதர்வணம் எனப்படும். வியாசர் இந்த நான்கு வேதங்களையும் முறையே பயிலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்னும் நான்கு முனிவர்களுக்குக் கற்பித்தார். வேதங்களைத் தொகுத்து வகுத்தது மட்டுமின்றி, மகாபாரதம் என்னும் இதிகாசத்தினையும் வியாசர் இயற்றினார். அது ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகின்றது. இவைகளை மட்டுமேயன்றி வியாசர் பதினெண் புராணங்களையும் கூட, இயற்றியருளினார். வேதம் தலைவனின் கட்டளை (பிரபுசம்மிதை) போன்றது; இதிகாசம் நண்பனின் நயவுரைகள் (சஇருத்சம்மிதை) போன்றது; புராணங்கள் காதலியின் கனிவுரைகள்(காந்தாசம்மிதை) போன்றவை. இதிகாசங்களு ம் புராணங்களும், வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் உரிய விளக்கவுரைகள் போல்வனவாகும். அவைகள், எளிய பொதுமக்கள்

---

(2) "These and a host of other principles of inter-relation, formulated and indicated by Jaimini, are absolutely necessary for an accurate understanding of Dharmasastras. These rules have parallels in the modern legal interpretation".

—*Porf. G.V. Devasthali*, Founders of Philosophy, p.66.

வேதத்தின் அரிய கடினமான பொருள்களை விளங்கிக் கொள்ளத் துணைபுரிகின்றன.

**வேதாந்த சூத்திரம்:**

வியாசர் இயற்றிய வேதாந்த சூத்திரம், பிரமசூத்திரம் எனவும் வழங்கப்பெறும். உபநிடதங்கள், பகவத்கீதை, பிரமசூத்திரம் என்னும் மூன்றும், பிரஸ்தானத்திரயம் எனவழங்கப்பெறும். இவைகள் வேதாந்த தத்துவக் கொள்கையின் அடிப்படை நூல்களாகும். உபநிடதங்கள் சுருதிப் பிரஸ்தானம் எனவும், பகவத்கீதை ஸ்மிருதிப்பிரஸ்தானம் எனவும், வேதாந்த சூத்திரம் நியாயப்பிரஸ்தானம் எனவும் கூறப்பெறும். பிரமசூத்திரத்திற்குச் சாரீரக சூத்திரம், பிட்சுசூத்திரம், உத்தரமீமாம்சசூத்திரம் எனவும், வேறுபெயர்கள் வழங்கும். வேதாந்த சூத்திரம் நான்கு அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வோர் அத்தியாயமும், நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாதமும், பல அதிகரணங்களை உட்கொண்டது. ஒவ்வொரு அதிகரணமும், ஒன்று அல்லது பல சூத்திரங்களால் அமைந்தது. வேதாந்த சூத்திரம் 192 அதிகரணங்களைக் கொண்டது. அதன் மொத்தச் சூத்திரங்கள் 555 ஆகும்.

**(1) சமன்வயம்**

வேதாந்த சூத்திரத்தின் நான்கு அத்தியாயங்களும், சமன்வயம் அவிரோதம் சாதனம் பலன் என்பனவற்றை முறையே விவரிக்கின்றன. சமன்வயம் என்னும் முதல் அத்தியாயம், பிரமப்பொருளைப் பற்றி விவரிக்கின்றது. பிரமம் அல்லது ஆத்மாவைப் பற்றிக்கூறும் சூத்திரங்களின் பொருளை உணர்வதில், எத்தகைய சிக்கலும் நேர்வதில்லை. ஆனால் உபநிடதங்களின் பல பகுதிகள், பிரமம் ஆத்மா என்பனவற்றை மட்டும் குறிப்பிடவில்லை. 'ஆகாசம்' என்னும் சொல், வெறும்வானத்தைக் குறிக்காமல், பல இடங்களில் பரம்பொருளைக் குறித்து வருகின்றது. ஏனெனில் எல்லாப் பொருள்களும் அதிலிருந்தே தோன்றி, அதிலேயே ஒடுங்குகின்றன. இவ்வாறே 'பிராணன்' என்று சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் சொல், பிராணவாயுவைக் குறிக்காமல், எல்லாப் பொருள்களும் சென்று ஒன்றுகின்ற பிரமத்தைக் குறிக்கின்றது. இங்ஙனமே அதே உபநிடதத்தில் வரும் 'மனம்' அல்லது 'மனோமயம்' என்பதும், மனத்தைக்குறிக்காமல் மனத்தால் தியானிக்கப்படும் பொருளைக் குறிக்கின்றது. அது பிரமப்பொருளாக இருக்க முடியுமேயன்றி, தனிப்பட்ட ஆத்மாவாக இருக்க இயலாது. இத்தகைய எல்லா இடங்களிலும், ஒரு சொல்லின் பொருளை உணர்த்துவன, அது வழங்கப்பெற்றுள்ள இடமும் குறிப்புமேயாகும். ஆதலின் உபநிடதங்கள் ஆகிய வேதாந்தத்தின் உண்மைக் கருத்துக்களைச் சிக்கறுத்துத் தெளிவுபடுத்துதற் பொருட்டே, வியாசர் வேதாந்த சூத்திரம் இயற்றியருளினார். இத்தகைய பெயர்களால் குறிப்பிடப்பெறும் பொருள் தான், பிரமம். உலகம் தோன்றுவதற்கு மூல காரணம் எதுவோ, அதுவே பிரமம் எனப்படுகின்றது. அது சத்து சித்து ஆனந்தம் என்னும் மூவியல்புகளுடையதாகத் திகழ்கின்றது. அதுவே தியானத்திற்குரிய பொருள். அதுதான் ஆன்மிக விடுதலை பெற்ற முக்தர்களால் அடையப்படும் அநுபூதிப் பொருளாகும். என்றெல்லாம், வேதாந்த சூத்திரம் பிரமத்தின் இயல்புகளை விளக்கிக் கூறுவதனால், அதற்குப் பிரம சூத்திரம் என்றும் ஒருபெயர் வழங்குவதாயிற்று.

சாங்கிய தத்துவம், உலகமானது மூலப் பிரகிருதியினின்று தோன்றுகின்றது என்று கூறுகின்றது. ஆனால் பாதராயணர் என்னும் வியாசர், இக்கொள்கையைத் தம்முடைய வேதாந்த சூத்திரத்தின் முதல் அத்தியாயத்தில் விரிவாக மறுக்கின்றார். சாங்கிய தத்துவக் கொள்கை, உபநிடதங்களின் கருத்துக்களுக்கு மாறாக உள்ளது என்பது, சங்கரரின் விளக்கம். 'அவ்வியக்தம்', 'மகத்' என்று உபநிடதங்களில் வரும் சொற்கள், சாங்கிய தத்துவம் கூறும் தத்துவக் கூறுகளைக் குறிக்கவில்லை. சுவேதாசுவதர உபநிடதம், செம்மை வெண்மை கருமை நிறங்களையுடையதாகக் குறிப்பிடும் அஜம் என்பது கூட, சாங்கிய தத்துவம் கூறும் மூலப் பிரகிருதியைக் குறிப்பதன்று. உபநிடதங்களின் கூற்றுப்படி உலகத்திற்கு மூலகாரணம், அறிவுப் பொருள் ஆகிய சேதனம் ஆதலின், சாங்கியம் கூறும் அறிவற்ற அசேதனம் ஆகிய பிரதானம் என்பது, உலகிற்கு மூலகாரணம் ஆகாது. சாங்கிய தத்துவ நூல் கூறும் பிரதானம் என்பது, கைவிடுதற்குரியது; உபநிடதங்கள் கூறும் உலக மூலகாரணம் ஆகிய பிரமம், அடைதற்குரியது. ஆதலின் உலகிற்கு மூலகாரணம், பிரதானம் என்பது அன்று. உபநிடதங்கள் கூறும் பிரமாத்மானாகிய பரம்பொருளே, உலகத்தின் தோற்றத்திற்கு மூல அடிப்படைக் காரணம் என்று, இப்பகுதியில் பாதராயணார் விளக்க முயல்கின்றார்.

**(2) அவிரோதம்:**

வேதாந்த சூத்திரத்தின் இரண்டாவது அத்தியாயம், அவிரோதம் என்பது என்று முன்னர்க் கண்டோம். இதன்கண், வேதாந்தக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துக்களையும், தடைகளையும், பாதராயணர் மறுத்துரைக்கின்றார். இவ்வத்தியாயத்தில், மேற்கூறிய சாங்கியக் கொள்கையே பெரிதும் மறுக்கப்படுகின்றது. ஏனெனில் அதுதான் ஏனைய கொள்கைகளிலும், முதன்மையும் சிறப்பும் உடையதாக விளங்குகின்றது. அதனை மறுத்துவிட்டால், அதனைச் சார்ந்துள்ள பிற கொள்கைகள் எல்லாம், எளிதில் தாமாகவே மறுக்கப்பட்டுவிடும். உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமாகச் சாங்கியம் கூறும் பிரதானம் என்பது, அறிவற்ற சடப்பொருள். ஆனால் இவ்வுலகமோ, அறிவினால் இயக்கப்பெறும் ஒருவகை வடிவமும் ஒழுங்கும் இயக்கமும் உடையதாகத் திகழ்கிறது. ஆதலின் உலகமானது அறிவற்ற அசேதனப்பொருளால் தோற்றுவிக்கப்பட்டது ஆகாது. உலகம் எங்ஙனம் இயங்கத் தொடங்குகின்றது? எவ்வாறு இயங்காமல் நின்று விடுகின்றது? என்பதனை விவரித்தல் இயலாது.

(தொடர்ச்சி 33-ம் பக்கம்)

# திருக்குறளும் வைணவ சமயத்து உறுதிப் பொருள்களும்

"பேராசிரியர்"

திரு. டாக்டர் ந. சுப்புரெட்டியார், M. A., Ph. D.

—(முற்றொடர்ச்சி)

**சித்து :**

ஞானத்திற்கு இடமான ஆன்மாவின் தொகுதி சித்து எனப்படும். ஆன்மா அணு அளவினதாகச் சொல்லப்பெறும். இது என்றும் நிலைபெற்றிருப்பது. கண் முதலிய இந்திரியத்திற்குத் தோன்றாது. இது இறைவன் ஏவியபடி நடக்கும். அவனால் தரிக்கப்பெற்று அவனுக்கு அடிமையாக இருக்கும்.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு'' 32

என்ற குறளில் உயிரும் உடம்பும் பேசப்பெறுகின்றன. ''சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறாகலின் வினைவயத்தாற் கூடியதல்லது நட்பில வென்பது அறிக'' என்ற பரிமேலழகரின் உரையும் சிந்திக்கத் தக்கது. நட்பு என்பது, ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதலுணர்த்தி நின்றது; இது எதிர்மறை இலக்கணை. இந்தக் குறளினால் ஒவ்வொர் உயிர்க்கும் ஒவ்வோர் 'உயிர்' இருப்பது குறிப்பாகப் புலப்படுத்தி ஆன்மாக்கள் பல என்ற வைணவக் கருத்தைத் தெளிவாக்கி ஏகான்மவாதத்தை மறுப்பதுபோல் தோன்றுகிறது. ஏகான்மவாதம் உயிர்கள் பல என்பதை ஒப்புக் கொள்வதில்லை. இந்தச் 'சித்து' என்ற தத்துவத்தையே மேற்குறிப்பிட்ட திருவாய்மொழித் தனியன் 'மெய்யாம் உயிர்நிலை' என்று குறிப்பிடுகின்றது.

**அசித்து :**

வீடுபேறு அடையும் வழிகட்குத் தடைகளாக இருக்கும் விரோதிகள் பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கமும் அழுக்குடம்பும் ஆகும். ஆன்மா இல்லாத இடத்தில் ஆன்மா என்னும் மயக்கமும், இப் பொய்யான மயக்கத்தினால், பிறர் பொருள் முதலியவற்றைக் கவர்தலாகிற கொடிய ஒழுக்கமும், இவற்றுக்கெல்லாம் காரியமும் அடிப்படையுமான கீழ்த்தரமான உடம்பும் ஆகியவற்றைப் போக்கினால் தான் வீடுபேற்றிற்குரிய வழிகள் தென்படும். உடலை 'ஆன்மா' எனக் கருதுவது ஒரு வகை மயக்கம். இதைத்தான் பிள்ளை உலக ஆசிரியர் 'அவித்தை' (அவிச்சை) என்பர். அழுக்குடம்பு மான், அகங்காரம், பஞ்சபூதங்கள் ஆகியவற்றால் உண்டானமையின், மட்பாத்திரம் தன்னுள் உள்ள உயர்ந்த பொருளை மறைப்பதுபோன்று இதுவும் ஆன்மாவையும் பரமான்மாவையும் மறைத்துக் கெடுக்கின்றது. திருவள்ளுவரும்

மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை 33

என்று கூறுவர். பிறவி நோயைப் போக்குதலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகுதியாகும். அதாவது அவசியமானதன்று. அங்ஙனமிருக்கச் சம்பந்தமில்லாத சில பொருள்களும் விடாது தொடர்ந்து நிற்றல் தகுதியன்று என்பது அறியப்படும். உடம்பு என்பதில் உருஉடம்பும் அருஉடம்பும் அடங்கும். இதனைத்தான் பிள்ளை உலக ஆசிரியர் 'பிரகிருதி சம்பந்தம்' என்று குறிப்பர்.

அகப்பற்றும் புறப்பற்றும் அசித்தினைச் சார்ந்தவை. இவையும் வீடுபேறு எய்துவதற்குத் தடைகளாக இருப்பவை. திருவள்ளுவர்,

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்34

என்று இதனைக் கூறுவர். பரிமேலழகரும் ''தேசிகர்பாற் பெற்ற உறுதி மொழிகளானும் யோகப் பயிற்சியானும் அவை யான் எனது அன்மை தெளிந்து அவற்றின்கண் பற்றை விடுதல்'' என்று விளக்குவர். அதாவது உடம்பும் செல்வமும் முறையே யானும் எனதும் ஆகாமையை ஐயந் திரிபின்றி அறிந்து அவற்றிலுள்ள பற்றை விடுதல் ஆகும். வானோர்க்குயர்ந்த உலகம் என்பது தேவர்களும் அடையமுடியாத வீட்டுலகம். நம்மாழ்வாரும்,

நீர்நும தென்றிவை வேர்முதல் மாய்த்துஇறை
சேர்மின்; உயிர்க்கதன் நேர்நிறை யில்லே35

என்று இதனை விளக்குவர். ''அகங்கார மமகாரங்களாகிய இவற்றை ருசி36 வாசனை237 களாகின்ற பக்க வேரோடே முதலறுத்து இறையை அடையுங்கள். ஆன்மாவுக்கு அதனோடொத்த நிறைவு இல்லை'' என்பது இதன்

பொருள். இப்பாசுரத்தின் 'நீர் நுமது' என்பவை 'நாம் நமது' என்றிருக்க வேண்டும். அவற்றை வாயினாலும் சொல்லுவது தகாது என்ற கருத்தினால், அப்படிச் சொல்லாது மாற்றிச் சொன்னார் ஆழ்வார். ''நான் எனது என்று தன் வாக்காலே சொல்ல மாட்டாரே, நாக்கு வேம் என்று'' என்ற ஈட்டின் நயமும் ஈண்டு அனுபவிக்கத்தக்கது. வினைப்பயன்களைக் கூறுமிடத்து வள்ளுவர்,

*வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி*
*தொகுத்தார்க்குந் துய்த்த லரிது38*

என்பர். முயற்சி மாத்திரத்தால் செல்வம் சம்பாதித்தல் மாத்திரம் ஒருகால் கூடினும் கூடும்; அதனை அனுபவித்தலோ ஊழாலன்றிக் கூடாது என்பது கருத்து. ஒருயிர் செய்த வினைப்பயன் பிறிதோருயிரின்கண் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின் 'வகுத்தான்' என்றார். இஃது இறைவன் ஆணையாகும். நம்பிள்ளை இதனை 'வகுத்த சேஷி' என்று குறிப்பிடுவர்.

வள்ளுவர் கருத்தும் வைணவ தத்துவக் கருத்தும் ஒன்றுபோல் அமைந்துள்ளன. இந்தத் தடையினையே மேற்குறிப்பிட்ட திருவாய்மொழித் தனியன் 'ஊழ்வினை' என்று குறிப்பிடுகின்றது.

## முத்தி நெறி :

வைணவ தத்துவப்படி இறைவனை அடையக்கூடிய வழி பக்தி, பிரபத்தி (சரணாகதி) ஆகிய இரண்டாகும். ஆழ்வார் பெருமக்கள் சரணாகதி தத்துவத்தையே அதிகமாக வற்புறுத்துகின்றனர்.

*நிகர்இல் அமரர் முனிக்கணங்கள்*
*விரும்பும் திருவேங் கடத்தானே*
*புகல்ஒன்று இல்லா அடியேன்உன்*
*அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே39*

என்ற பாசுரத்தில் திருவேங்கடத்தானின் திருவடிவில் சரணம் அடைகின்றார் ஆழ்வார். சைவத்திலும் இறைவனிடம் அடைக்கலம் புகுதல் என்ற சம்பிரதாயம் உண்டு. மாணிக்கவாசகரின் 'அடைக்கலப் பத்து' 40 இதனை வலியுறுத்தும். எனினும், வைணவத்தில் இஃது இன்றியமையாத ஒன்று. இக்கருத்தினையே திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரத்தில் 'நற்றாள் தொழுதல்'41 'மாணடி சேர்தல்'42 'அடிசேர்தல்'43 'தாள்சேர்தல்'44 'தாளை வணங்குதல்'45 என்பதனால் வீடுபேறு அடையும் வழிகளாகக் கூறப்பெற்றிருத்தல் காண்க. இதனை முமுட்சுப்படி மிக அழகாகக் கூறுகின்றது.

சேஷிபக்கல் சேஷ பூதனிழியுந்துறை,
ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப் போலே46

*(சேஷி-இறைவன்; சேஷபூதன்-சேதனன்).*

என்று. பாலுண்ணும் பச்சைக் குழவி எங்ஙனம் தாயினுடைய மற்ற அவயவங்கள் யாவையும் விட்டு, தான் உயிர் வாழ்தற்கிடனாய் உள்ள அவள் கொங்கையிலேயே வாய் வைக்கின்றதோ அங்ஙனமே சேஷியாகிய ஈசுவரனைப் பற்றப் புகும் சேஷ பூதனும் எம்பெருமானுடைய பல உறுப்புக்களையும் விட்டு, தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முந்திய செயல் எவ்வாறு குழந்தைக்கு இயற்கையோ, அவ்வாறே பிந்திய செயலும் சேதனன் சொரூபத்திற்கு இயல்பாய் அமைந்ததாகும். இங்ஙனம் இறைவனை அடையும் வழியினைத்தான் மேற்குறிப்பிட்ட திருவாய்மொழித் தனியன் 'தக்கநெறி' என்று சுட்டுகின்றது.

## வீடுபேறு :

வீடுபேறு என்பது பற்றிச் சமய நூல்கள் பலவகையாகப் பகரும். வைணவ சமயக் கருத்தின்படி 'வீடு' என்பது ஒரு தனி உலகம் ஆகும். நம்மாழ்வார் இதனை ''நலம் அந்தம் இல்லது ஓர் நாடு''47 என்று குறிப்பிடுவர். நாடும் அழிவில்லாதது; அதனை அடைந்தார்க்கு உண்டாகும் இன்பமும் அழிவில்லாதது. 'அந்தமில் இன்பத்து அழிவில்வீடு' எனும் பரிமேலழகரின் கருத்தும் ஈண்டு சிந்தித்தற்குரியது. மேலும் அவ் ஆழ்வார் வீட்டினை ''வைகுந்தம்''48 ''இலங்கு வான்''349 ''பொன்உலகு''50 என்றும் குறிப்பிடுவது அறியப்பெறும். திருவள்ளுவர் இந்த உலகை,

*தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு51*

*(வீழ்வார்-விரும்பப்படுபவர்)*

என்ற குறளில், ''தாமரைக் கண்ணான் உலகு'' என்று குறிப்பிடுவர். பரிமேலழகரும் ''ஐம்புல இன்பங்களையும் துறந்த தவ யோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்'' என்று விளக்குவர். மேலும் அவர்''இந்திரன் உலகு என்பாருமுளர். தாமரைக் கண்ணான் என்பது அவருக்குப் பெயரன்மையின் அஃது உரையன்மை அறிக'' என்று அறுதியிட்டும் உரைப்பர். 'நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இன்னையாதல் தகாது' என்ற பாங்கற்குத் தலைவன் 'கழற்றெதிர் மறை'யாகக் கூறியதாகும் இது.

மேலும், தெய்வப் புலவராகிய திருவள்ளுவர்,

*மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார் 52*

என்ற குறளில், 'நிலமிசை' (மிசைநிலம்) என்பதால், 'எல்லா உலகிற்கும் மேலாகிய வீட்டுலகு என்பதைப் பெறவைத்தார். ஈண்டு மோட்சத்தை நிலம் என்று கூறியது காண்க. இக்கருத்தினையே அப்பெருமான், ''வரன் என்னும் வைப்பு''53 -எல்லா உலகத்திலும் மேம்பட்ட வீட்டுலகம்; ''வானோர்க்கு உயர்ந்த உலகம்''54-வானோர்க்கு எய்தற்கரிய வீட்டுலகம்; ''வானம்''55-வீட்டுலகம் என்று மேலும் விளக்குவர். இறுதியில் கூறப்பெற்ற ''வானம்'' தத்துவ ஞானம் எய்தப் பெற்றவர் அடையும் இடமாகக் கூறப்பெற்றமையால் இங்கு,

'வானம்' என்பது வீட்டுலகத்தைக் குறித்தது. தத்துவஞானம் பெற்றவர்கட்கு இவ்வுலகத்தை விட, வீட்டுலகம் அண்மையில் இருப்பதாகத் தோன்றும். என்பதை இந்தக் குறளில் 'வையத்தின் வானம் நணிய துடைத்து 'என்றார். நம்மாழ்வாரும், ''பொன்னுலகு ஆளீரோ புவனி முழுது ஆளீரோ''56 என்பதனால் இதே குறிப்பினை வெளியிட்டுள்ளமை காண்க. இந்த வீடுபேற்றைத்தான் - பரமபுருஷார்த்தத்தைத் தான் மேற்குறிப்பிட்ட திருவாய்மொழித் தனியன் 'வாழ்வினை'என்று குறிப்பிடுகின்றது.

**இறுவாய் :**

இந்தக் கட்டுரையில் வைணவ சமயத்து உறுதிப் பொருள்களாகிய சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று உறுதிப் பொருள்களும், அர்த்த பஞ்சகத்தில் கூறப்பெற்ற பொருள்களும், வீடுபேறு பற்றிய கருத்துக்களும் பிறவும் திருக்குறளில் எவ்வாறு அமைந்து கிடக்கின்றன என்ற செய்திகள் ஒருவாறு விளக்கத்துடன் எடுத்துக்காட்டப்பெற்றன.

---

32. குறள்-338
33. குறள்-345
34. குறள்-346
35. திருவாய்.1.2:3
36. ருசி-பாவச் செயலையோ புண்ணியச் செயலையோ அறிந்தே செய்தற்குக் காரணமாயுள்ள சுவை.
37. வாசனை-இஃது அவித்தியாவாசனை, கர்ம வாசனை, என இருவகைப்படும். அவித்தியா வாசனை-அரவம் முதலியவற்றைக்காணுங்கால் அஞ்சுதல் முதலியவற்றிற்குக் காரணமான அஞ்ஞான வாசனை. கர்மவாசனை - துரும்பு முதலியவற்றைக் கிள்ளுதற்குக் காரணமாயுள்ள வாசனை.
38. குறள்-377
39. திருவாய்.6.10.10
40. திருவாசகம்-அடைக்கலப்பத்து.
41. குறள்-2
42. குறள்-3
43. குறள்-4,10
44. குறள்-7,8
45. குறள்-9.
46. முமுட்சுப்படி-147.
47. திருவாய்.2.8:4
48. திருவாய் 1.2:11; 2.5:11, 4.4:11 4.7:11, 5.10:11.
49. திருவாய் 3.8:11
50. திருவாய் 6.7:11
51. குறள்-1103
52. குறள்-3
53. குறள்-24
54. குறள்-346
55. குறள்-353
56. திருவாய்-6.8:1

---

## அறிவின் தொடக்கம் (The Beginning of Wisdom)

''உலகில் ஒரு தெளிவான, அறநெறிமுறை பிழறாத, உயரிய ஒழுக்க மேம்பாட்டினைப் பெறுவதற்கு விரும்புபவர்கள், முதலில் தங்களுடைய தேசிய வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்வர்; தேசிய வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ள விரும்புபவர்கள், முதலில் தங்கள் வீட்டு வாழ்க்கையைக் கட்டுப்பாடுடையதாகச் செய்து கொள்வர்; வீட்டு வாழ்க்கையைக் கட்டுப்பாடு உடையதாகச் செய்து கொள்ள விரும்புபவர்கள், முதலில் தங்களுடைய தனி வாழ்க்கையைச் சீராக்கிப் பண்படுத்திக் கொள்வார்கள்; தங்கள் தனிவாழ்க்கையைச் சீர்செய்து பண்படுத்திக் கொள்ள விரும்புபவர்கள், முதலில் தங்கள் உள்ளத்தைச் செம்மையான தூய நிலையில் அமைத்துக் கொள்வார்கள்; தங்கள் உள்ளத்தைச் செம்மையான தூய நிலையில் வைத்துக் கொள்ள விரும்புபவர்கள், முதலில் தங்களின் எண்ணங்களை உண்மை நேர்மையுடையனவாக ஆக்கிக் கொள்வார்கள். தங்கள் எண்ணங்களை உண்மை நேர்மை உடையனவாக ஆக்கிக் கொள்ள விரும்புபவர்கள், முதலில் எதனையும் உள்ளவாறு சரியாகப் புரிந்து கொள்ள முற்படுவார்கள்; எதனையும் உள்ளபடி சரியாகப் புரிந்து கொள்ளும் திறன், பொருள்களைப் பற்றிய சீரிய அறிவு ஆராய்ச்சி முயற்சிகளிலிருந்தே வந்து அடைக்கின்றது.

பொருள்களைப் பற்றிய அறிவாராய்ச்சியார்வம் பெற்றதும், பொருள்களைப் புரிந்து உணர்ந்து கொள்ளும் திறன் அடையப்பெறுகிறது; பொருள்களைப் புரிந்து கொள்ளும் திறன் அடையப்பெற்றதும், எண்ணங்கள் உண்மையும் நேர்மையும் உடையன வாகின்றன. எண்ணங்கள் உண்மையும் நேர்மையும் உடையனவாகும்போது, உள்ளம் செம்மையான தூய நிலையில் அமைகின்றது. உள்ளம் செம்மையாகவும் தூய்மையாகவும் அமையப்பெற்றதும், தனி வாழ்க்கை திருத்தமுற்றுப் பண்படுத்தப்படுகின்றது தனி வாழ்க்கை திருத்தம் எய்திப் பண்படுத்தப்பட்டதும், வீட்டு வாழ்க்கை நல்ல கட்டுப்பாடு உடையதாகின்றது. வீட்டுவாழ்க்கை நல்ல கட்டுப்பாடு பெற்றதும், தேசவாழ்க்கை சிறந்தமுறையில் ஒழுங்கடைந்து விடுகின்றது; தேசவாழ்க்கை சிறந்தமுறையில் ஒழுங்குபெற அமையும்போது, உலகில் மக்களிடையே பெரிதும் அமைதியும் இன்பமும் நிலவுகின்றன.

ஒரு பெரும் அரசனின் நிலையிலிருந்து, ஒரு சாதாரண மனிதன் வரையில், தனிவாழ்க்கையின் சிறந்துயர்ந்த பண்பாட்டு ஒழுக்க நலனே, எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைகின்றது. அடிப்படை ஒழுங்கற்றதாக இருக்கும்போது, அதன்மீது அமையும் உயர்நிலைக் கட்டிட அமைப்பு, ஒழுங்காக அமைதல் அரிது. உலகியற் பொருள்கள், ஒவ்வொன்றிலும் ஒரு காரணமும், அதனைச் சார்ந்து தொடரும் விளைவுகளும் அமைந்து கிடக்கின்றன. அதுபோலவே உலகில் மனிதனின் செயல்களிலும், ஒரு முதலும் முடிவும் அமைந்து விளங்குகின்றன. உலகியற் பொருள்களிலும் செயல்களிலும், அவற்றின் முற்படு தகுதிகளின் வரிசைமுறை ஆகிய ஒழுங்கமைப்பை அறிந்து கொள்வதுதான், அறிவின் தொடக்கத்தைப் பெறுதலாகும்''. (கன்ஃபூசியஸ்).

தமிழாக்கம் : ந. ரா. முருகவேள்

# ஆன்ம இலக்கணம்

டாக்டர் திரு. ச. கங்காதரன், M.A., M.Litt., Ph.D.,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-21.

''உளது,இலது என்றலின்; எனதுடல் என்றலின்,
ஐம்புலன், ஒடுக்கம் அறிதலின்; கண்படில்
உண்டிவினை இன்மையின்; உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா''

என்பது, மெய்கண்டதேவர் இயற்றிய சிவ ஞானபோதத்தின் மூன்றாம் சூத்திரம். இஃது ஆன்மா உண்டு என்பதற்குப் பிரமாணம் கூறு கின்றது.

**கொள்கைகள்:**

ஒருசிலர், கண்களாற் காணப்படாமை யினால் கடவுளில்லை என்று கூறுவதுபோன்று, கண்களாற் காணப்படாமையினால் ஆன்மா அல்லது உயிர் எனப்படுவதும் இல்லை என்று கூறுவர். இங்ஙனம் ஆன்மா என்பதொரு பொருள் இல்லை; அது வெறும் சூனியமே என்று கூறுவர், சூனியான்மவாதிகள்.

தேகமே ஆன்மா, தேகத்தின் வேறாக ஆன்மா என்பதொன்று காணப்படவில்லை என்பர், தேகான்மவாதிகள். மெய், வாய் கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களே ஆன்மா என்பர், இந்திரியான்ம வாதிகள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களே ஆன்மா என்று சொல்லு வர், அந்தக்கரணான்மவாதிகள்.

புரியட்ட தேகம் அல்லது நுண்ணுடல் ஆகிய சூக்கும தேகமே ஆன்மா என்று சொல்லு வர், சூக்கும தேகான்மவாதிகள். நம்மால் உள்ளே இழுத்தும் வெளியே விடுத்தும் உயிர்க் கப்பெறும் பிராணவாயுவே ஆன்மா என்று கூறு வர், பிராணான்மவாதிகள். எல்லாப் பொருள் களையும் இயக்கிநின்று தொழிற்படுத்தும் கட வுள் ஆகிய பிரமம்தான் ஆன்மா என்று புகல் வர், பிரமான்ம வாதிகள். அற்றன்று; தேகம் இந்திரியம் அந்தக் கரணம் சூக்குமதேகம் பிராணவாயு என்னும் இவையாவும் கலந்து நின்ற திரட்சியாகிய சமூகம்தான் ஆன்மா என உரைப்பர், சமூகான்மவாதிகள்.

ஆன்மாவானது பிரமப் பொருளின் பரி ணாமமாகத் தோன்றி, அறிவு இச்சை செயல் களை அடைந்து, தீயும் சூடும் போலப் பேதா பேதம் ஆகிய குணகுணித் தன்மைகளையுற்றுப் பல்வேறு வகைப்பட்டு நிற்கும் என்பர், பரி ணாமான்மவாதிகள். ஆன்மாவானது குணகுணித் தன்மை இல்லாமல் முழுவதும் அறிவு மாத்தி ரையாய் நிற்கும் என்பர், சாங்கிய நூலார்.

ஆன்மா என்பது அருவம் அன்று, உருவப் பொருளே என்பர், பௌராணிக மதத்தினர். ஆன்மா உருவப்பொருள் அன்று; ஒருவாற்றாற் காணப்படுதலும், ஒருவாற்றாற் காணப்படா மையும் உடைய அருவுருவப் பொருள் எனக் கட்டுரைப்பர், கவுள மதத்தினர்.

ஆன்மா என்பது ஆகாசம் போல அருவ மாய் அவிகாரமாய் இருக்கும் என்று பகர்வர், பாதஞ்சலர். ஆன்மா எனப்படுவது சடப்பொரு ளாய் நின்று அறியும் தன்மைபெறும் என இயம்புவர், வைசேடிகர். ஆன்மா சித்துப் பொருள்தான், சடப் பொருள் அன்று என்று மொழிவர், பட்டாசாரியர். ஆன்மாவானது, உடம்பினுள்ளே பரமாணு அளவிற்றாய் இருக் கும் என உரைப்பர், பாஞ்சராத்திரிகள். உடம் பினுள்ளே, புல் நுனியிற் பனித்துளிபோல ஏக தேசமாய் இதயத் தானத்தில் நின்று, தன் அறிவு விளக்கொளியைப் போல எங்கணும் வியாபித்துப் பரவியிருப்பது ஆன்மா என்பர், மிருதி நூலார். உடம்புமுழுவதும் நிறைந்து சிறிய உடம்பிற் சிறியதாயும், பெரிய உடம்பிற் பெரியதாயும், விளங்குவது ஆன்மா என விளம் புவர், சமணர்கள். இறைவனைப் போலவே எங்கணும் வியாபித்துப் பரவி நின்று அறிவது ஆன்மா என அறிவிப்பர், ஐக்கியவாதிகள்.

இத்தகைய பல்வேறு கொள்கைகளையும் தனித்தனியே ஆராய்ந்து, அவைகளின் பொருந் தாமையினை எடுத்துக்காட்டி மறுத்து, ஆன்ம இலக்கணத்தினை, ஞானாமிர்தம் சிவஞான போதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் முதலிய சைவசித்தாந்த நூல்கள் தகவுற விளக்குகின்றன.

**மறுப்புகள்:**

உயிரானது உள்பொருள், சூனியமன்று. உடல் அறிவற்ற சடமாதலின், பருவுடல் உயி ரன்று. கனவு நிலையில் இயங்கும் நுண்ணுட லும் உயிரன்று; ஏனெனில் அது நனவுநிலை யில் இயங்கக் காண்கிலம். ஐம்பொறிகள் உயிரன்று. ஏனெனில் அவை ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறிவதில்லை. அந்தக் கரணங் களும் உயிரெனல் அமையாது; எற்றுக்கு எனில், அவை தத்தமக்குரிய தொழிலைச் செய்யுமே யன்றி, 'யான் இதனைச் செய்தேன்' என்று உணர்தற்குரிய தன்மை அவற்றுள் ஒன்றற்கும் இல்லை. எனவே இவற்றினெல்லாம் வேறாக, உயிர் (ஆன்மா) என்பதொன்று, தனியே உள் ளது. இதனைப் பசு, ஆன்மா, சீவன் என்று

பலவகைகளில் நூல்கள் கூறும். ஒரு சிலர் ஓர் உயிரே உண்டு என்று ஏகான்மவாதம் (Monism) செய்வர். அது பொருந்தாது. ஒருவருக்குற்ற இன்பமோ கவலையோ பிணியோ பிறர்பால் செல்லாமையின், ஒவ்வோர் உடலிலும் தனித் தனியே ஒவ்வோர் உயிர் உள்ளது என்பது புலனாகும். எனவே, உயிர்கள் எண்ணற்றன வாக உள்ளன என்பது தெளிவு.

**இலக்கணம்:**

இத்தகைய உயிர்கள், அருவாய், நித்த மாய், வியாபகமாய் உள்ளன. அவைகள் ஆணவமலத்தால் பற்றப்பட்டு இருளில் அழுந்திக் கற்போலச் செயலற்றுக் கிடக்கின்றன. இந் நிலை புலம்பு (கேவலம்) எனப்படும். இறைவன் தன் பெருங் கருணையினால், இருளில் செல்வோருக்குத் துணையாகக் கைவிளக்கு அளிப் பதுபோல, மாயையினின்று உடல் கருவி உலகு நுகர்ச்சி (தனு கரண புவன போகம்) என்ப வற்றைப் படைத்து உதவுகின்றான். தம்பால் இயல்பாக அமைந்து கிடந்த மூலகன்மத்திற்கு ஏற்ப உயிர்கள், உடல் கருவி உலகு நுகர்ச்சி ஆகியவற்றைப் பெறுகின்றன. உடல் கருவி உலகு நுகர்ச்சிகளையும், இச்சை ஞானக் கிரி யைகளையும் பெற்றுப் புண்ணிய பாவங்களைச் செய்கின்றன. அவற்றிற்கு ஏற்பப் பலவேறு பிறவிகளையும், நனவு கனவு உறக்கம் பேருறக் கம் உயிர்ப்படக்கம் (சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்) என்னும் அவத் தைகளையும் அடைகின்றன. இந்நிலை புணர்வு (சகலம்) எனப்படும். இதன் பின்னர் இருவினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகிய வற்றை அடைந்து, குருவருளினால் சிவஞானம் கைவரப்பெற்று, மும்மலங்கள் நீங்கி, இறை வனின் திருவடிப்பேறு எய்துதல் புரிவு (சுத்தம்) எனப்படும்.

**நூல்கள்:**

இங்ஙனம் பிறர் கூறும் ஆன்ம இலக்கணங் களையெல்லாம் செவ்விதின் ஆராய்ந்து, ஒவ் வாதனவற்றையெல்லாம் மறுத்துரைத்து, சைவசித்தாந்த தத்துவம் தகவுற விளக்கிக் கூறும் ஆன்ம இலக்கணத்தினைப், பின்வரும் செய்யுள்கள் சுருக்கமாகத் தொகுத்து விளக்கு தல் காணலாம்.

''அசித்தரு வியாப கம்போல்
வியாபகம் அருவம் இன்றாய்,
வசித்திட வரும் வியாபி
எனும்வழக் குடையன் ஆகி,
நசித்திடா ஞானச் செய்தி
அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகிப்
பசுஎன நிற்கும் ஆன்மா'' (1)

''கேவல சகல சுத்தம்
என்றுமூன்று அவத்தை, ஆன்மா
மேவுவன்; கேவலம் தன்உண்மை;
மெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது
சகலன்ஆம்; மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம்
உடையன், உற்பவம் துடைத்தே'' (2)

—சிவஞானசித்தியார்

எண்ணரிதாய், நித்தமாய், இருள்மலத்தின் அழுந்தி,
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணல்அரு ளால்நண்ணி, அவையவராய், அதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்,
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்;
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால், அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப், பாதம்
உற்றிடும், நற் பசுவருக்கம் எனவுரைப்பர், உணர்ந்தோர்!

—சிவப்பிரகாசம்

## வடபழநி ஆண்டவர்!

சென்னைவட பழநியினில் திகழ்பழநி
ஆண்டவர்தம் சிறப்பை எல்லாம்,

நன்னர்மிக அளந்தாய்ந்து நவிலுதலும்
இயலுமோ? நல்ல அன்பர்

உன்னுவன எல்லாமும், உடன்ஒருங்கே
நிறைவேற்றி, உதவ வல்லார்

என்னில், அவர் கலியுகத்தும் கண்கண்ட
கடவுள்எனற்கு, ஐயம் என்னே?

—ந. ரா. முருகவேள்

# உயர் நலம்

திரு வை. கணபதி ஸ்தபதி, மாமல்லபுரம்

இவ்வுலக வாழ்க்கையில் நம்மைச் சுற்றிலும் பல்வேறு துறைகளைக் காண்கிறோம். கல்வித்துறை, கலைத்துறை, மொழித்துறை, தொழிற்றுறை, வாணிபத்துறை, ஆராய்ச்சித்துறை, விஞ்ஞானத்துறை, எனப் பல்வேறு துறைகள் இருப்பதைப் பார்க்கின்றோம். மக்களாய்ப் பிறந்தவர்கள் ஏதாவது ஒரு துறையினைப் பற்றிக் கொண்டு வாழ்வதையும் காணுகின்றோம்.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையும், அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்களால் உயர்வு பெறுகிறது. பெரும்பாலும் ஒரு துறையைச் சார்ந்தவர்களை இருவகையாகப் பிரித்துக் கூறலாம். முதல் வகையினர் ஒரு துறையைச் சார்ந்து, தக்க அறிவுபெற்று அத்துறையினால் பயன் அடைவார்கள். மற்றொரு வகையினர் அத்துறையின் மேம்பாட்டிற்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு புதியன படைத்து அத்துறையினை மேலும் மேலும் வளரச் செய்வார்கள். பொதுவாக ஒரு துறைக்கு இவ்விரு சாராரும் தேவையெனினும், ஒரு துறையின் மேம்பாட்டிற்கு ஆக்கம் அளிப்பவர்கள் இரண்டாவது வகையினரே ஆவர். இவர்கள் மரத்தின் வேர் போல, ஒரு துறையின் வளர்ச்சிக்கும், பயனுக்கும், வளம் ஏற்றுபவர் ஆவர். இத்தகையோரே ஒரு நாட்டுக்குப் புகழ் சேர்த்து, உலக அரங்கிலே அதனைப் பெருமையடையச் செய்வார்கள்.

நமது தமிழ்நாட்டுக்கும், பாரத நாட்டுக்கும், பெருமை சேர்த்திட்ட துறைகளில் கலைத்துறை, ஈடு-இணையற்று விளங்குகிறது. இசைக் கலையால், நாட்டியக் கலையால், ஓவியக்கலையால், சிற்பக்கலையால் நம்நாடு பெற்ற புகழ் மகத்தானது. இசை, நாட்டியம், சிற்பம் ஆகிய இம்மூன்றும் கலைத்தாய் ஈன்றெடுத்த சேய்கள். இலக்கணமும், இலக்கியமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் அமைந்த ஓரினக் கலைகள். அது மட்டுமல்ல, அவை தோற்றுவிக்கும் கலையின்பம் அல்லது சுவை இன்பம் ஒரே தன்மையது. இம்மூன்று கலைகளில் சிற்பக் கலை பெற்றிருக்கும் உயர் நலன்களை ஒரு சிறிது நோக்குவோம்.

தமிழ் இலக்கியத் துறையிலே சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றை ஐம்பெருங்காப்பியங்கள் என்று தமிழக மக்கள் கூறுவார்கள். அங்ஙனமே தமிழகச் சிற்பக்கலைத் துறையிலும் ஐம்பெருங்காப்பியங்கள் தோன்றியிருக்கின்றன.

1. 10-வது நூற்றாண்டில் முதலாம் இராசராச சோழன் செய்வித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில்.
2. 11-வது நூற்றாண்டில் முதலாம் இராசேந்திரசோழன் கட்டுவித்த கங்கை கொண்ட சோழீச்சுவரர் கோயில்.
3. மூன்றாம் குலோத்துங்கன் செய்வித்த திரிபுவன வீரேசுவரர்கோயில்
4. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்.
5. மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில்கள்.

வட மொழியில் வான்மீகி இராமாயணத்தை ஆதிகாவியம் என்பார்கள். அதுபோல மாமல்லபுரக் குடைவரைக் கோயில்கள் சிற்பக் கலைத் துறையைப் பொறுத்தவரையில் ஆதி காவியமாக விளங்குகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டையும் இணைத்து இரட்டைக் காப்பியம் என்று நாம் சொல்லுகிறோம். அதுபோல, தஞ்சைப் பெருவுடையார் விமானமும், கங்கைகொண்ட சோழபுரத்துச் சோழீசர் விமானமும், சிற்பக் கலைத் துறையில் இரட்டைக் காப்பியங்களாகத்திகழ்கின்றன. மீனாட்சியம்மன் திருக்கோயில், கம்ப ராமாயணத்தின் செழுமையும் சிறப்பும் கொண்ட பேரிலக்கியம் போன்றதாகும். காளிதாசனின் சாகுந்தலமாக விளங்குவது, திரிபுவன வீரேசுவரர் விமானம் ஆகும்.

சிற்பக் கலைத்துறையில் மிக மிகப் புகழ் வாய்ந்த கலைச் செல்வம், தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் வானுயர்ந்த விமானம் என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். தஞ்சைப் பெருவுடையார் விமானத்தைப் பார்த்திராதார் தமிழ்நாட்டில் மிகச் சிலரே இருப்பர். கண்படைத்தோர், கவிநயம் தெரிந்தோர், கலைச்சுவை நுகர்வோர், கண்டு இன்

புறும் மாபெரும் படைப்பு அஃதாம். எம் மொழி கொண்டும் அவ்விமானத்தின் எழுச்சி மிக்க தோற்றத்தை அதன் அழகை வருணித்திட இயலாது. முடியுமானால் அது கவிச் சக்கரவர்த்தி கம்பனால் மட்டுமே கண்டு சித்தரிக்கத் தகுந்த கவின்மிகு தோற்றம் உடையது. மகாகவி காளிதாசனின் உவமை பெரும் ஏற்றம் உடையது. இம்மாபெரும் கவிஞர்களே இக்கற்றளிக்கு இணையாக ஒரு சொற்றளியை எழுப்பிக் காட்டிட முடியும். அத்தகைய மாபெரும் படைப்பு அவ்விமானம் என்றால் மிகையன்று.

செவிவழிப் பாய்ந்து உள்ளத்தில் பெருக்கெடுத்து இன்பமூட்டும் இசைவெள்ளமானது, உறைந்து உருக்கொள்ளுமானால், அதுவே பெருவுடையார் விமானம் ஆகும் எனச் சொல்லத் தோன்றுகிறது. தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானத்தைக் ''குஞ்சர மல்லன் ராசராசப் பெருந்தச்சன்'' என்ற பெயருடைய மாபெரும் சிற்பி, சுமார் 1000 ஆண்டுகட்கு முன்பு இயற்றினான். சிற்பத்துறைப் படைப்புகளைச் செய்தான், என்று நாங்கள் சொல்வதில்லை. இயற்றினான்-இசைத்தான் என்ற சொற்களையே தொன்று தொட்டுச் சொல்லி வருகின்றோம். காரணம், சிற்பி தனது அனுபவத்தையல்லவா கல்லிலே வடித்தளிக்கின்றான்.

இன்று நமக்குக் கிடைக்கும் பெரும் கருவிகளோ, பொறியியல் சாதனங்களோ இல்லாத அக்காலத்தில், அவ்விமானத்தைச் சுமார் 200 (இருநூறு) அடி உயரம் கொண்டதாய் அமைத்திருக்கின்றான். முன்னதாகவே வரைபடங்கள் வரைந்து, அதன் உறுப்புக்களின் அமைதிகளை ஆராய்ந்து சீர்தூக்கிச் செம்மையாக அமைத்திட, இக்கால வசதிகள் ஏதுமில்லாத காலம் அக்காலம். மேலும் அதற்கு முன்னால் அதற்கு நிகரான வேறொரு விமானம் தோன்றிடாக் காலம். அடி முதல் முடிவரை முற்றிலும் கல்லாலேயே ஆன கற்றளி. அடி பெருத்து மேற்செல்லச் செல்லக் கரைந்து சிறுத்து அழகியதொரு சிகரத்தில் கவர்ச்சி மிகு தோற்றத்தில் முடிவுபெறும் விமானம். அதனை அலங்கரிக்கும் சிற்பங்களும், கருக்கணிகளும், பிற அமைப்புகளும் அகில உலகச் சிற்பிகள் வியந்து பாராட்டும் தன்மையன. அவ்விமான அமைப்பில் பெருந்தச்சன் கையாண்ட தொழில் நுட்பங்கள் அநேகம், அநேகம். அதன் வெளியமைப்பு கலை நுட்பத்தைக் காட்டுமானால், அதன் உள்ளமைப்பு வியப்பூட்டும் தொழில் நுட்பத்தைக் காட்டும். மொத்தத்தில் ஆண்மையும் அழகும் ஒருங்கே கொண்டதாய் இவ்விமானம் காட்சியளிக்கின்றது. இவ்விமானத்தைக் கலைமலை என்றோ அல்லது அழகுமலை என்றோ சொல்லத் தோன்றுகிறது.

இராசராசப் பெருந்தச்சனின் கலைநயத்திற்கு ஓர் உதாரணத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சோழப் பேரரசன் இராசராசன் சிவபெருமானிடம் அளவற்ற பக்தி கொண்டவன். உலகங்களைப் படைத்துக் காத்து ஒடுக்கும் பேராற்றல் வாய்ந்த தனது தலைவனின் பெருமைக்கு ஏற்றவாறு, தஞ்சைப் பெருவுடையார் கோவிலை அமைக்குமாறு பெருந்தச்சனிடம் பொறுப்பைக் கொடுக்கின்றான். பரம்பொருளான உலகப் பெருந்தச்சனுக்கு வானுயர்ந்த விமானத்தை இராசராசப் பெருந்தச்சன் எழுப்புகிறான். அதனுள் மாபெரும் சிவலிங்கத்தையும் நிறுவுகிறான். விமானமும், இலிங்கமும் மிகப் பெரியதாக எடுக்கப் பெற்றிருப்பினும், அப்பெரிய தோற்றம் இறைவனின் பெருமையை முழுமையாகக் காட்டியதாகச் சொல்லச் சிற்பியின் மனம் இடம் தரவில்லை. ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் ஒரு சிற்ப நயத்தின் மூலமாக அதனை உணர்த்துகின்றான்.

கோவிலின் வாயிலில் வாயிற்காப்போனின் சிலையைப் பெரியதாகச் செய்து நிறுத்துகிறான். ஒரே கல்லாலான மாபெரும் சிலை. இவனைப் பெரியோனாகக் காட்டி, இவன் மூலம் உள்ளிருக்கும் பெருவுடையானை (பிருகதீசுவரரை) அவனது பெருமையை-பேராற்றலை-பேருருவைக் குறிப்பால் உணர்த்த முற்படுகின்றான்.

வாயிற் காப்போன் படிமமோ மிகப் பெரியது. அவனுக்கோ நான்கு கைகள்; சிவச் சின்னங்களையெல்லாம் தரித்திருக்கின்றான். ஒரு காலை ஊன்றி ,மற்றொரு காலைக் கதையின் மீது மிதித்து நிற்கின்றான். ஒரு கையால் உள்ளிருக்கும் இறைவனைச் சுட்டியும் காட்டுகின்றான். மற்றொரு கையைக் கதையின் பிடி மீது பதித்துக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றான். அவனது தண்டத்தில் பாம்பு ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது. அப் பாம்பின் வாயிலிருந்து யானையொன்று இடையூறின்றி வெளியேறுகிறது. வாயிலோனின் முகத்தில் உக்கிரமான சிரிப்பு. உருண்டு திரண்ட கண்கள் முகத்திலிருந்து வெளியே தெறித்துக் கொண்டு நிற்கின்றன.

இனி, இச்சிற்ப வடிவத்தில் சிற்பி பெய்து வைத்திருக்கும் கற்பனை நயத்தையும், உட்கருத்தையும் பார்ப்போம். விலங்கினங்களில் யானை மிகப் பெரியது. அது பாம்பின் வாயிலிருந்து வருமாயின் அப்பாம்பு எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டும்? அவ்வளவு பெரிய பாம்பு ஒரு தடியைச் சுற்றிக் கொண்டிருக்குமெனில் அத்தடிதான் எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும்? அத்தடியோ வாயிற் காப்போனின் கைத்தலத்தில் அடங்குமானால் அவனது கை எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும். அத்தகைய கையை உடைய வாயிலோனின் உடல், அளப்பரியதன்றோ! இத்தகையோனை வாயிலோனாய்க் கொண்டு உள்ளே எழுந்தருளியிருக்கும் இறைவன் எத்தகையோன்? அவனே பெருவுடையான். உலகத்தை எல்லாம் உடைமையாக்கிக் கொண்டவன்.

சிற்பக்கலைத் துறையில் அறிவாற்றலும், கலையாற்றலும் சேர்ந்தே செயல்படுகின்றன. சிற்பியானவன் தானே பாடலை இயற்றித் தானே மெட்டமைத்துத் தானே பாடிடும் இயல்புடைய முழுமையான கலைஞன். பண்டைச் சிற்ப நூல்கள், ஒரு சிற்பிக்கு இருக்க

வேண்டிய தகுதிகளை எங்ஙனம் பேசுகின்றன என்பதைச் சிறிது நோக்குவோமானால், இவ் வுண்மை புலப்படும். ஒரு சிற்பியை மானகர் மக்ஞன் என்றும், சித்ரக்ஞன் என்றும், கணிதக் ஞன் என்றும், புராணக்ஞன் என்றும், சர்வ தேசக்ஞன் என்றும், சர்வசாஸ்திரக்ஞன் என் றும் அவை கூறுகின்றன. அது மட்டுமல்ல. அவனை வேதவித்து என்றும் கூறுகின்றன. எனவே ஒரு சிற்பியானவன் அறிவாற்றலும், கலையாற்றலும், ஒருங்கே நிரம்பியவனாக இருத்தல் வேண்டுமென்பது புரிகிறதல்லவா? எனவே தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானத்தைக் கட்டிய இராசராசப் பெருந் தச்சன் பேரறிவும், பேராற்றலும் ஒருசேர அமைந்த மேதையாக இருந்திருத்தல் வேண் டும்.

மேலும், அவ்விமானத்தை நேரே சென்று பார்க்கும் காலத்தில், பலப்பல வினாக்கள் நமது அகத்தில் எழுவதைக் காணலாம். இராச ராசப் பெருந்தச்சன் எங்ஙனம் தனது இதயத் தில் இதனை உருவகித்துக் கொண்டான். அவ் விமானத்தை இயற்றுங்கால் எத்தகையஆனந்த வெள்ளத்தில் அவன் மூழ்கி இருத்தல் வேண்டும்? அவனது உழைப்பின் அளவுதான் என்ன? அவ னது கனவிலும் நனவிலும், அதைத் தவிர வேறு காட்சியைக் கண்டிருக்க முடியுமா? அந்த விமானத்தின் இறுதித் தோற்றத்தை, அவனது புதிய படைப்பை அவனே கண்டு எவ்வளவு இன்புற்றிருப்பான்? அக்காலத்து அறிஞர்களும், கலைஞர்களும், அவனை எவ்வளவு பாராட்டி யிருக்க முடியும்? இன்பமயமான ஒரு கலைப் படைப்பைத் தோற்றுவித்த சிற்பியான அந்தக் கலைமலைக்கு என்ன பரிசுகள் அரசன் வழங்கி யிருக்க முடியும்? அப்பரிசுகள்தான், அவன் ஆற்றலுக்கு ஈடு செய்திருக்க முடியுமா? என் றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது.

கல்கத்தாவில் அரசினர் சிற்பக் கலைக் கல்லூரி முதல்வராய் இருந்த பெர்சிபிரவுன் (Percy Brown) என்ற பேராசிரியர், தஞ்சை விமா னத்தைப் பற்றிப் பேசுகிறார்.

> ''தஞ்சைப் பெருவுடையார் விமானம் திராவிடச் சிற்பிகளின் தனித்ததொரு கலைப்படைப்பு. பாரதப் பெருநாட்டின் கட்டிடக் கலையின் மேம்பாட்டினை அறிய, இஃது ஓர் உரைகல்''

என்று பேசுகிறார்.

> "Unquestionably the finest single creation of Dravidian craftsmen, the Tanjore Vimanam, is the touch-stone of Indian Architecture as a whole"

குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன் சிற்பக் கலைக்கு, சிற்பக்கலை மேம்பாட்டிற்குச் செய்த சேவை, அச்சேவையினால் தமிழகத் திற்கு ஏற்பட்டபுகழ் அளவிட முடியாதது. இது வரை சிற்பக் கலைத் துறைக்குப் பேரொளி யாய் விளங்கும் தஞ்சைப் பெருவுடையார் விமானத்தைப் பற்றியும், அதைப் படைத்த இராசரரசப் பெருந்தச்சனின் மேதையைப் பற்றியும் ஓரளவு ஆராய்ந்தோம்.

இனி சிறந்த ஒரு சிற்ப வடிவத்தைப் பற்றிச் சிறிது காண்போம். கண்ணால் பார்த்துச் சுவைத்து மகிழ்ந்த ஓர் உருவை அல்லது ஒத்த காட்சியைச் சொல்லால் வருணித்து, அரு வுருவை அல்லது காட்சியை ஒருவனது உள்ளத் தில் எழுப்பிக் காட்டுவது, கடினமான கலை. ஆனால் சுவைத்த அவ்வுருவத்திற்கு அல்லது காட்சிக்கு உருவம் தருவது, அதனினும் மிகக் கடினமான கலையாகும். இதுவே சிற்பக்கலை எனப்படும். மேலும் கண்ணால் பார்த்திராத ஒன்றை, அகக்கண்களால் கண்டு, அதனைச் சுவைத்துத் தான்சுவைத்த ஒன்றைப் பிறர் சுவைக்கும் பொருட்டுச் சொல்லால் உருவகித் துக்காட்டுதலோ, மிக மிகக்கடினம். ஆனால் அதைவிடக் கடினம் அவ்வொன்றுக்கு உருக் கொடுத்தல், அதனைக் கண்முன் நிறுத்திக் காட்டுதல் ஆகும். சிற்பியால் படைக்கப்பெற்ற இறைவனது திருவுருவங்களைத் தான் சொல் கிறேன். கடவுளின் திருவுருவத்தைக் கண்ட வர்கள் சொன்னதில்லை. சொன்னவர்களோ கண்டதில்லை என்பர். இயற்கையில் காணும் ஒவ்வொரு பொருளின் அமைதியிலும் அசைவி லும் கண்ணால் காணமுடியாத பேராற்றலின் அமைதியையும், அழகையும் கண்டு வியந்து சுவைத்து, அந்த ஒன்றுக்கு உருக் கொடுக்கும் சிற்பியின் ஆற்றல் எத்துணை மகத்தானது? சொல்ல முடியாத ஒன்றைச் சிற்பி அனுபவிக் கின்றான். அந்த அநுபவம் வெளிப்பட்டு உருத் தாங்கும்போது அது கலை வடிவமாகிறது. இதுவே படைப்புக் கலை எனப்படும். தெய் விகக் கலை என்றும் சொல்லப்படும். பாரத நாட்டுச் சிற்பக் கலையின் தனிச் சிறப்பே இதில்தான் அடங்கியிருக்கிறது.

இராம காதையின் கதாநாயகனான இரா மனை, இராமனின் பேரழகைச் சிறந்த சொற் களைக் கொண்டு வருணிக்க முற்படுகின்றான், கம்பன். மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ என மேனி அழகை வருணித்த கம்பன், அவன் உருவ அழகை ரசிகன் உள்ளத் தில் எழுப்பிக் காட்டிட முயலுகிறான். ஆனால் சொற்களின் ஆற்றற் குறைவை உணருகிறான். எனவே, ''மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ''என்று தொடங்கிய கம்பன், 'ஐயோ இவன் வடிவு' என்று சொல்லி, இராம னின் உருவ அழகை ஒரு வியப்புக் குறியால் காட்டி நின்றுவிடுகிறான். அதைப் பாடும் நாமும் அவ்வழகைக் கண்ணாரக் கண்டு பருகிய தாகவே எண்ணி மகிழ்கிறோம். உண்மையில் அவ்வழகு என்ன என்பதைச் சொல்லால் முழு மையாகக் காட்டிட முடியாது என்பதுதான். பொருள். ஏனெனில் இது ஒரு அனுபவ நிலை. இப்படிப்பட்ட அநுபவநிலையை வெளிப் படுத்திக்காட்டும் வாய்ப்பைப் பெற்றிருப்பது சிற்பக்கலை. கம்பன் சித்தரிக்க முற்பட்ட அப் பேரழகைத் தமிழ்நாட்டில் வடக்குப் பனையூர் என்ற ஊரில் கிடைத்த இராமனின் படிமத்தில் நாம் காண முடிகிறது. எழில்வாய்ந்த அவ் வடிவம் இப்போது சென்னை அரசினர் பொருட் காட்சிக் கூடத்தில் இருக்கிறது. வீரனுக்குரிய சிறந்த இடையும் ,அகன்று திரண்ட தோள் களும், பரந்த முகமும், மலரனைய விழிகளும், எடுப்பான தோற்றமும் கொண்டு, வில்லேந்திய வீரனாக இராமன் காட்சியளிக்கின்றான்.

இனி சிற்பக்கலைத் துறை மேன்மையுறவும், அதன் பயனாய், பிறந்த மண்ணிற்குப் புகழ் சேர்க்கவும் எத்தகைய பண்புகள்தேவை என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம். எந்தத் துறையில் மேம்பாடு அடையவேண்டுமென்று ஒருவன் விரும்பினாலும், அத்துறைமீது அளவிலாப் பற்று முதலில் ஏற்பட வேண்டும். ஒரு நாட்டின்மீது ஒருவனுக்குப் பற்று ஏற்பட வேண்டுமானால், அந்நாட்டின் பெருமையைப் பேசும் வரலாறு தெரிந்திருக்கவேண்டும் என்பர். சிற்பக்கலைத் துறைக்கு, வரலாற்று அறிவோடு சிற்பங்களையும், சிற்பக்கட்டிடங்களையும் நேரடியாகச் சென்று பார்த்து ரசித்து அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். இதனால் அத்துறையில் ஆர்வம் கொள்ள ஏதுவாகும்.

ஒரு துறையில் ஒருவன் உண்மையாகவே ஈடுபட்டுவிடுவானானால், அவனது சிந்தையும், பேச்சும், செயலும், அத்துறையைப் பற்றியதாகவே அமைந்துவிடும். இதை விடுத்து வேறு திசைகளில், வேறு பொருள்களில் அவன் மனம், அறவே நாட்டம் கொள்ளாது. இத்தகைய ஈடுபாடு கொண்டவர்கள்தான், ஒரு துறையிற் புதியன படைக்கவும், அத்துறைக்குப் புகழ் சேர்க்கவும் முடியும். அப்படிப்பட்ட ஈடுபாடு எப்படி இருக்கும், எத்தகையது என்பதை, ஒரு சிறு கதைமூலம் விளக்கிக் காட்டி என் கட்டுரையை முடிக்கின்றேன்.

ஒரு சிறுவன் சிறுவயதிலேயே கணிதத் துறையில் நாட்டம் கொள்கிறான். தன் வயதிற்கும் மிஞ்சிய ஆராய்ச்சியில் ஈடுபடுகிறான். ஆண்டுகள் பல உருண்டோடுகின்றன. மணப் பருவத்தை எட்டிய அவனுக்குத் தாய் தந்தையர் முறைப்படி திருமணம் செய்து வைக்கிறார்கள். கணவனும் மனைவியும் தனிமைப் படுத்தப்படுகிறார்கள். இருப்பினும் மணவாழ்க்கையின் இயல்பான இன்பங்களில் அவன்மனம் செல்லவில்லை. காலையினும், மாலையினும், இரவிலும் தனது ஆராய்ச்சியிலேயே அவன் மூழ்கிவிடுகிறான். அதிலேயே இன்பம் துய்க்கின்றான். அவன் மனைவியோ, அவனது காலைக் கடன்களை நிறைவேற்றுவதிலும், உணவளிப்பதிலும், உறங்கச் செய்வதிலும் களிப்படைந்து, அவளும் மணவாழ்க்கையின் இயல்பான இன்பங்களைத் துறந்து நிற்கின்றாள். இங்ஙனம் ஆண்டுகள் பல விரைகின்றன.

பல்லாண்டுகளுக்குப் பிறகு தனது ஆராய்ச்சியின் முடிவைச் சந்திக்கிறான், அச் சிந்தனையாளன். ஆனால் இத்தனை ஆண்டுகாலமாக ஆராய்ச்சிகள் செய்யும் காலை, தன் அருகிலேயே நின்று கொண்டிருந்த இல்லாளின் முகத்தை அவன் பார்த்து மகிழ்ந்ததில்லை. மாறாக, தனது ஆராய்ச்சியின் இறுதியிலே தான் மனைவியின் முகத்தை நோக்குகின்றான். பேரதிர்ச்சி கொள்கின்றான். மனம் குழம்புகின்றான். காரணம் மணக் கோலத்தில் பார்த்திட்ட தனது மனையாள் நரைத்துக் கிழக் கோலத்தில் நிற்பதைக் காணுகிறான். பேச முடியாமல் திக்கித் திணருகிறான். குறிப்பறிந்த மனைவி அருகே வந்து அமர்கிறாள். அவளுடைய திருமுகத்தில் பெருமிதமும், ஆனந்தமும் பொங்கி வழிகின்றன. தனது கணவன் கணிதத் துறையில் அடைந்த உயர்நலம் அல்லது மேம்பாடு, அவளை மிகவும் பெருமிதப்படுத்துகின்றது.

ஆனால், கணவன் கண்ணீர் மல்கப் பேசுகிறான். ''இல்லற வாழ்க்கையில் நீ துய்க்க வேண்டிய இன்பங்களை அனுபவிக்க விடாமல் உன் வாழ்க்கையைப் பாழடித்து விட்டேன். தலை நரைத்து, உடல் மெலிந்து, வயதுமுதிர்ந்தவளாய் இருக்கும் இக்கோலத்தில், உன்னைப் பார்க்க மிகவும் வருந்துகிறேன். இவ்வயதில் உன் பெயரைச் சொல்ல ஓர் ஆணோ அல்லது பெண்ணோ உனக்கு வாய்த்திருக்க வேண்டும். அப்பேற்றினை நீ இழந்துவிட்டாய் என்று சொல்லி முடிப்பதற்குள், அவள் பேசுகிறாள். சிறந்ததொரு துறையை மேற்கொண்டு,சிறந்த இலட்சியத்தையும் முன்னே வைத்து, ஒருதுறையின் மேம்பாட்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட ஒருவரைக் கணவனாகப் பெற்றதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அப்பணியில் குறுக்கிடாது அப்பணி நிறைவேறிடத் தங்கட்கு அன்றாடப் பணிகளைச் செய்து உடனிருக்கக் கொடுத்து வைத்தவளானேன். அதனால் கிடைத்த இன்பம், இல்லற இன்பத்தைக்காட்டிலும் மிக உயர்ந்ததெனக் கருதுகின்றேன். இதனை எனது பெரும்பேறாகவும் மதிக்கின்றேன் என்று பதிலுரைத்தாள்.

இதைக்கேட்ட அவன் கூறுகிறான். ''நான் செய்த தியாகத்தைக் காட்டிலும், நீ செய்த தியாகம் மகத்தானது. எனவே சந்திர, சூரியர் உள்ளளவும், உன் பெயர் விளங்கிட எனது ஆராய்ச்சி நூலுக்கு உன் பெயரையே சூட்டுகிறேன்'' என்று சொன்னான் என்பது கதை. ஒரு துறையினை மேன்மையடையச் செய்ய எத்தகைய தியாகத்தை ஒருவன் செய்யவேண்டியதிருக்கிறது என்பதை, இக்கதை நன்கு சித்தரிக்கிறதல்லவா? இத்தகைய செயலைத்தான் அர்ப்பணம் என்று சொல்லுவார்கள். ஒரு துறைக்குத் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்வோனே, அத்துறையினை மேன்மையுறச் செய்ய முடியும்.

# "மதியே! மதியே?"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

மாணிக்கவாசகர் பெரும் பக்தரும், ஞானியும் மட்டுமல்லர்; மிகச் சிறந்த ஒரு பெரும் புலவர், வியத்தகு பெருங் கவிஞர்! புலவர்களும் கவிஞர்களும், சொற்களை ஆளும் திறனிலும், பொருள்களை விளக்கும் திறனிலும், மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்வர். அம்முறையில் மாணிக்கவாசகப் பெருமானும் சொற்களைத் திறன் தெரிந்து கையாளுதலிலும், கருத்துக்களைக் கவினுற விளக்கி, அழகுறப் பாடுதலிலும் மிக வல்லவராவர். இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும் சான்றுகள் பலவற்றுள், ஈண்டு ஒன்றனை மட்டும் காண்போம்.

''நாகந் தொழவெழில் அம்பலம்
நண்ணி நடம்நவில்வோன்
நாக மிதுமதி யேமதியே
நவில் வேற்கையெங்கள்
நாகம் வரவெதிர் நாங்கொள்ளும்
நள்ளிருள் வாய்நறவார்
நாகம் மலிபொழில் வாயெழில்
வாய்த்தநின் நாயகமே''

இவ்வினிய திருப்பாடல், மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலின்கண் வருவதாகும். மாணிக்க வாசகரின் புலமை மாட்சிமைக்கும், கவிதைத் திறனின் கற்பனை மாட்சிமைக்கும், சொற்பொருள் ஆட்சியின் சுவைநல மாட்சிமைக்கும், இஃது ஓர் இனிய எடுத்துக்காட்டு எனலாம்.

அகப்பொருள் இலக்கணம்:

தமிழ்மொழி, பலப்பல சிறப்புக்களை உடையது. அவற்றுள் ஒன்று, வேறு மொழிகளில் காணப்படாத நிலையில், தமிழ்மொழியானது பொருளிலக்கணம் என்ற ஒன்றைப் பெற்றிருத்தலாகும். பொருளிலக்கணம் பெற்றிருத்தல், தமிழுக்குரிய தனிப்பெருஞ் சிறப்பு என்பது,

''தள்ளாப் பொருளியல்பில் தண்தமிழ் ஆய்வந் திலார்
கொள்ளார் இக்குன்று பயன்''

எனவரும் பரிபாடல் வரிகளால் உணரப்படும். தமிழின் பொருளிலக்கணத்தில், அகப்பொருள் இலக்கணம் மிக்க சிறப்பு வாய்ந்தது! அது களவு கற்பு என இருவகைப்படும். களவுத் திணையில் இரவுக்குறி இடையீடு என்பது, ஒரு பகுதி. அப்பகுதியில் தாய் துஞ்சாமை-நாய் துஞ்சாமை-ஊர் துஞ்சாமை-காவலர் கடுகுதல்-நிலவு வெளிப்படுதல்-கூகை குழறுதல்-கோழி குரல்காட்டுதல் என்னும் துறைகள் அமைந்திருக்கும். ''எளிதரகப் பெறப்படும் பரிசு எளிதாகவே மதிக்கப்பெறும்'' ("Too light winning makes the prize light"—Sh) என்பது போல் ஆகிவிடாமல், காதல் உணர்வைச் சிறப்புற வளர்த்து மிகுதிப்படுத்துவதற்கு, இவ் இடையூறுகள் ஏற்படுவதாகப் பாடுவது, ''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலநெறி வழக்கம்'' ஆகும்.

அகநானூறு:

மேலும், ''காதற் பாதை கரடுமுரடாகவே அமையும்'' ("The course of true love never does runs mooth"—Sh) என்பதனை வலியுறுத்துதற்கும், இவ் இடையூறுகள் நேர்வதாகப் பாடுவது, பண்டைச் சங்க காலக் கவிஞர்களின் மரபு.

''இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்
விழவு இன்றாயினும் துஞ்சா தாகும்;
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்;
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின் வைஎயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்;
அரவவாய் ஞமலி மகிழாது மடியில்
பகலுரு உறழ நிலவுக்கான்று, விசும்பின்
அகல்வாய் மதியம் நின்றுவிரி யும்மே;
திங்கள் கல்சேர்பு கனைஇருள் மடியின்
இல்எலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங்கு யாமத்து அழிதகக் குழறும்;
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்;
எல்லாம் மடிந்த காலை, ஒருநாள்
நில்லா நெஞ்சத்து அவர்வாரலரே, அதனால்
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மான்,
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட்டு அன்ன
பன்முட் டின்றால், தோழிநம் களவே!''

என்று அகநானூற்றில், மணிமிடைபவளம் என்னும் பகுதியில், பரணர் என்னும் சங்ககாலப் புலவர் பாடியதாக வரும் பாடல் (122), பண்டைச் சங்ககாலக் கவிதை மரபின் நெறி முறைமைகளை, இனிது உணர்த்தி வலியுறுத்துவதாகும்.

**நச்சினார்க்கினியர் :**

''இருவகைக் குறிபிழைப்பு ஆகிய இடத்தும்'' என்னும் தொல்காப்பியக் களவியல் நூற்பாவில், ''காணாவகையிற் பொழுதுநனி இகப்பினும்'' என்னும் பகுதியில், இப்பாடலை மேற்கோள் காட்டி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், ''ஊர்துஞ்சாமை-தாய்துஞ்சாமை - நாய்துஞ்சாமை-காவலர் கடுகுதல்-நிலவு வெளிப்படுதல்-கூகை குழறுதல்-கோழி குரல்காட்டுதல் போல்வனவற்றால், தலைவன் குறியின்கண் தலைவி வரப்பெறாமல் நீட்டித்தல்'' என்று விளக்கவுரை வரைந்துள்ளமையும், இங்குச் சிந்திக்கத் தக்கது. ஆசிரியர் நக்கீரனாரும், தமது இறையனார் களவியல் உரையில், இப்பாடலை முழுவதாக எடுத்து மேற்கோள் காட்டியிருக்கின்றார்.

**நிலவு வெளிப்படுதல்:**

இத்தகைய சங்ககாலப் புலநெறி வழக்கக் கவிதை நெறியின் மரபு முறைகளைத் தழுவி, அகப்பொருளுடன்அருட்பொருளையும்பிணைத் திணைத்தே, மணிவாசகப் பெருமான் தமது திருச்சிற்றம்பலக் கோவையார் நூலை இயற்றியருளினார். ஆதலின், ''நிலவு வெளிப்படுதல்'' என்னும் இரவுக்குறி இடையீட்டுத் துறையாக, மேற்குறித்த வியத்தகு பாடலைத்திருக்கோவையாரில் இயற்றியருளினார்.

தலைவன் களவொழுக்கத்தில் தலைவியைச் சந்திப்பதற்காக, இரவுக் குறியின்கண் வந்து நிற்கின்றான். அந்த நள்ளிரவில் நிலா வெளிப்பட்டு, எங்கும் தன் ஒளியை வீசிப் பரப்பிக் கொண்டிருக்கின்றது. அஃது இரவிற் பிறர் அறியாமல் தலைவி தலைவனைச் சென்று கூடுதற்கு, ஒரு பெருந் தடையாக அமைந்து விடுகின்றது. அந்நிலையில் தலைவியும் தோழியும் நிலவைப் பழித்து, வெறுத்துரைக்கும் முறையில், இப்பாடல் அமைந்து திகழ்கிறது. இதன் பொருள் வருமாறு:

**பாடலின் பொருள்:**

''சந்திரனே! இம் மலையானது, பதஞ்சலி முனிவராகிய பாம்பு தொழுது வணங்க, அழகிய பொன்னம்பலத்திற் பொருந்தி, நடனம் புரிபவராகிய சிவபெருமானுக்கு உரியது. இம் மலையில் வேற்படையைத் தாங்கி, இவ்விரவில் எங்களைச் சந்திப்பதற்காக, எங்கள் தலைவனாகிய களிறு வருகைதர, யானை போன்ற மிடுக்கும் வீரமும் பெருமிதமும் உடைய அந்தத் தலைவனை, நாங்கள் வரவேற்று மகிழ்கின்ற நள்ளிரவு நேரம் இது. அதற்காகவே இங்கு யானும் என் தோழியும், நாகமரங்கள் நிறைந்த இந்தச் சோலையினிடத்தில் வந்து காத்திருக்கின்றோம். அதற்கு ஒரு தடையாக, நீ நினது அழகிய ஒளியை எங்கணும் வீசிக் கொண்டு, நின் தலைமையைக் காட்டிக் கொண்டு விளங்குகின்றாய். எங்களுடைய காதலுக்கு ஒரு பெருந் தடையாக அமைவதுதான், உன்னுடைய அறிவுடைமையோ?'' என்று சந்திரனை நோக்கித் தலைவியும் தோழியும் வினவுவதாக, இச்செய்யுள் அமைந்துள்ளது.

**நெடுவெண் நிலவினார்:**

இங்ஙனம் தோழியும் தலைவியும், நிலவு வெளிப்படுதலைக் குறைகூறிப் பழித்து வெறுத்துரைப்பதாக, குறுந்தொகை என்னும் சங்க இலக்கியத்தில்,

> ''கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
> இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
> எல்லி வருநர் களவிற்கு
> நல்லை யல்லை நெடுவெண் ணிலவே''

என்னும் ஓர் இனிய பாடல்(47) வருகின்றது. அதன்கண் ''நல்லை அல்லை நெடுவெண்ணிலவே'' என நெடுவெண்ணிலவைப் பழித்து உரைத்துப்பாடியதனால், அந்தச் சங்க காலப் புலவருக்கு,''நெடுவெண்ணிலவினார்'' என்னும் சிறப்புப் பெயரே, புலவர்களால் அமைத்து வழங்கப்பெறுகின்றது. நெடுவெண்ணிலவினார் பாடிய பாடலின் கருத்தையே, மாணிக்கவாசகப் பெருமானும் இப்பாடலில் அமைத்துப் பாடியுள்ளார்.

**பாடலின் பொருட்சிறப்பு:**

(1) இப்பாடலில் 'மதியே! மதியே?' என அமைந்துள்ள தொடர், பெரிதும் வியந்து போற்றுதற்குரியதாகும். முதலில் வரும் மதி, சந்திரனை விளிக்கின்றது. இரண்டாவது வரும் மதி, நினக்கு அறிவுளதா? என்று வினவுகின்றது. இங்ஙனம் விளியும் வினாவுமாகப் பொருள் படுமாறு, மதியென்னும் ஒரு சொல்லையே மணிவாசகர் கையாண்டுள்ள திறம், பெரிதும் சிந்தித்து இன்புறுதற்குரியது.

(2) இதற்கும் மேலாக, 'நாகம்' என்ற ஒரு சொல்லையே, பல்வேறு பொருள்களில் மடக்கு அல்லது யமகம் என்னும் அணிநலம் அமைய, மணிவாசகர் பாடியருளியிருக்கின்றார். அவர்தம் அரும்பெரும் சொல்லாட்சித் திறன், ''நம்முடைய அழகான, குழைவான செந்தமிழ் மொழியின் விந்தை நலன் மிக்க இயல்பு, எத்துணைச் சிறப்புற்றுத் திகழ்கின்றது! அதன் சிறப்பு நலங்களெல்லாம் என்றும் குன்றாது நின்று நிலைபெற்று, வருங்காலத் தமிழ் மக்களுக்கும், அளப்பரும் வளப்பெருஞ் செல்வக் களஞ்சியங்களாக வளர்ந்தோங்கி விளங்குவனவாகுக!'' *என்று, நம்மைப் பெரிதும் விம்மிதமுற்று விரும்பி மகிழ்ந்து வாழ்த்தச் செய்கின்றதன்றோ?

---

* "Oh the magic of our beautiful and flexible English language! May the best of it remain as an everlasting treasury for the oncoming generations".

—Patience Strong,
A Joy Forever, Words in Amber, P. 63.

(3) தம்முடைய வழிபடு கடவுளாகிய நடராசப் பெருமானை, 'நாகம் தொழ எழில் அம்பலம் நண்ணி நடம் நவில்வோன்' என்று மணிவாசகர் குறிப்பிடுகின்றார். தில்லையம்பலத்தில் நடராசப்பெருமான், தம்முடைய ஐந்தொழில் இன்பத் திருநடத்தினைப் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதமுனிவர் என்னும் இருவரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒரு தைப்பூச நாளில் நிகழ்த்தியருளிக் காட்சி தந்தருளினர் என்பது வரலாறு. பதஞ்சலி முனிவர் ஆதிசேடனின் அவதாரமாகக் கருதப்பெறுபவர். ஆதலின் ''நாகம் (பாம்பு) தொழ நடம் நவில்வோன்'' என்றார்.

(4) உயிர்களின் உள்ளத்தினெல்லாம் புகுந்திருந்து நடனம்புரியும் பெருமானே, புறத்தே தில்லைப் பரவெளியிலும் நடனம் புரிகின்றான் ஆதலின், அத்திறம் விளங்க ''எழில் அம்பலம் நண்ணி நடம் நவில்வோன்'' என்றார்.

(5) நடம் புரிவோன், செய்வோன் என்னாமல், ''நடம் நவில்வோன்'' என்றது குறிக்கொள்ளத்தக்கது. ஆதியும் அந்தமும் இன்றி இடைவிடாது எப்போதும் நடனம் இயற்றுதல் பற்றி ''நவில்வோன்'' என்றார். நவில்தொறும் நூல்நயம் போலக் காண்தொறும் காண்போர்க்கு எல்லையில்லாப் பேரின்பம் விளைத்தலின் 'நவில்வோன்' என்றார் எனினும் பொருந்தும். திருவாசகத்திலும் இவர் ''நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான்'' என்றது, கருதி மகிழ்தற்குரியது.

(6) அகப்பொருளிலக்கணத்திற் களவொழுக்கம் நிகழும் இடம், மலையும் மலையைச் சார்ந்த இடமும் ஆகிய குறிஞ்சி நிலமாதலின், அதனைக் குறித்தற்கு ''நடம் நவில்வோன் நாகம் (மலை) இது'' என்றார்.

(7) களவொழுக்கத்தில் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் எதிர்பார்த்துக் காத்திருந்து நள்ளிரவில் சந்திப்பர். தலைவன் தலைவியைச் சேர்வதற்காக, இரவில் எத்தகைய இன்னல்களையும் ஒரு பொருட்படுத்தாமல், வலிமை மிக்க களிறு போல, இருளிற் சிறிதும் அஞ்சாமற் பீடுநடை நடந்து, பெருமிதத்துடன் வருவான். இரவில் இருளில் வருங்கால், தன் வீரத்திற்கு அறிகுறியாகவும், பாதுகாப்புக்காகவும் வேல் ஏந்தி வருவான். ஆதலின் தோழியின் கூற்றாக ''நவில்வேற்கை எங்கள் நாகம் (யானை) வர, நாம் எதிர்கொள்ளும் நள்ளிருள்வாய்'' என்றார்.

(8) இரவுக் குறியில் சந்திக்குங்கால் தலைவனும் தலைவியும், குறிஞ்சி நிலத்தில் தம் இல்லத்திற்கு அருகில் உள்ள ஒரு சோலையிலேயே சந்திப்பர். ஆதலின் அச்சோலையின் சிறப்பினை வியந்து ''நறவு ஆர் நாகம் மலி பொழில்'' என்றார். இங்கு நாகம் என்பது, நாக மரம் அல்லது புன்னாகமரம் என்னும் பொருளில் வந்தது. பொழிலின்கண் தலைவனும் தலைவியும் நுகர இருக்கும் இன்பத்தின் பெற்றியைக் குறிக்க; வறிதே பொழில் என்னாது ''நறவு (தேன்) ஆர்பொழில்'' என்று, பொழில் சிறப்பிக்கப்பெற்றது. இன்பம் நிறைந்த சோலை என்பது பொருள். ''நள்ளிருள்வாய்-பொழில்வாய் - எழில்வாய்'' என்ற சொல்லமைப்பு, இன்னோசையும் அழகும் வாய்ந்தது.

(9) தலைவனும் தலைவியுமாகிய தாம் சந்திப்பதற்கு இடையூறாக இருந்து வெளிப்பட்டு ஒளிவீசும் நிலவின் இயல்பை ''எழில் வாய்த்த நின் நாயகம்'' என்று புகழ்வதுபோற் கூறி, வெறுத்துக் குறிப்பால் இகழ்ந்துரைத்தாள். இது நினக்கு எழில் அன்று; மற்றும் நினக்குத் தலைமையோ பெருமையோ அன்று; அறிவின்மையாகிய மிக்க சிறுமையேயாகும் என்பது, 'மதியே?' என்னும் வினாஏகாரத்தாற் புலப்படுத்தப்பெற்றது.

(10) தங்களுக்கு அச்சத்தையும் தீங்கையும் விளைவித்து, நிலவு வீசி நிற்கும் சந்திரனைத் தாங்களும் ஒருவகையில் அச்சுறுத்தும் குறிப்பு அமைய, அவனுக்கு அச்சத்தை விளைவிக்கும் இராகு கேதுக்களாகிய பாம்புகளைக் குறிக்கும் நாகம் என்னும் சொல்லைப், பலகால் திரும்பத் திரும்பத் தோழியும் தலைவியும் குறிப்பிடுவதாக, இச்செய்யுளை மணிவாசகர் இனிது பாடியருளினார். ''நாகத்தான் விழுங்கப்படும் நீ, நாகம் தொழ அம்பலத்து நடம் பயில்வோனது, மலைக்கண் புகுந்து விளங்கி வீற்றிருத்தல், நினக்கு நன்மை பயவாது என்பது கருத்து'' என்று பேராசிரியர் தரும் உரை விளக்கம், இக்கருத்தை வலியுறுத்துவதாகும்.

## முடிவுரை:

தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணத்தின்படியும், சங்க கால இலக்கியங்களின்படியும், மணிவாசகப்பெருமான் பாடியருளிய இரவுக்குறி இடையீடு, இரவுக்குறிக் கூட்டம் என்பவற்றைப், பின்னர்ப் போந்த பெருங் கவிஞர்களும் தத்தம் நூல்களில் தழுவிப் பாடியுள்ளனர்.

''தாய்துயில் அறிந்து, தங்கள்
தமர்துயில் அறிந்து, துஞ்சா
நாய்துயில் அறிந்து, மற்றுஅந்
நகர் துயில் அறிந்து; வெய்ய
பேய்துயில் கொள்ளும் யாமப்
பெரும்பொழுது அதனில், பாங்கி
வாய்தலின் கதவை நீக்கி,
வள்ளியைக் கொடுசென் றுய்த்தாள்''
(1)

''அறுமுகவன் தன்னை,
ஆயிழை எதிர்ந்து தாழ்ந்து,
சிறுதொழில் எயினர் ஊரில்,
தீயனேன் பொருட்டால், இந்த
நறுமலர்ப் பாதம் கன்ற,
நள்ளிருள் யாமம் தன்னில்
இறைவ! நீர் நடப்பதே? என்று,
இரங்கியே தொழுது நின்றாள்''

எனக் கந்தபுராணத்தில், வள்ளியம்மை திருமணப் படலத்தில், கச்சியப்ப சிவாசாரியப் பெருந்தகை, கவினுறப் பாடியிருக்கும் கவிதைகள், இங்கு இயைபுடைமை பற்றி, நாம் எண்ணி இன்புறத்தக்கனவாகும். **

# பேதையும் மேதையுமான சீதை

''முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல்''
திரு புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை

(முற்றொடர்ச்சி)

தண்டகவனத்தில் சீதா ராம இலக்குமர் தங்கியிருக்கும் நாள், சீதா தேவியைக் கவர மாரீசனை மாயமான் ஆக்கி ஏவினான் இராவணன்; அம் மானைக் கண்டு காதலுற்றுப் பிடித்துத் தர வேண்டினர் சானகியார்; அதனை நம்பலாகாது எனத் தடுத்தனன் இலக்குவன் என்னும் முன்னுணர்வுள்ள ஏந்தல். அது கேளாது மானைப் பிடித்தே தரவேண்டும் என மணாளனை வேண்டினர் சானகியார். அண்ணல் அதனைத் தொடர்ந்து செல்வான், இளவலை நோக்கி, ''நீ சானகியைக் காத்திருக்கக் கடவை'' எனப் பணித்துச் சென்றனன். மான் நெடுந்தூரஞ் சென்ற பின்னர், அது மாயமே எனக் கருதி அடித்து வீழ்த்தினன் அண்ணல். அடியுண்டு வீழ்ந்த மாரீசன், பின்னும் ஒரு வஞ்சகத்தை மேற்கொண்டு இராமன்போல் குரலெடுத்து ''தம்பீ, இலட்சுமணா'' என அழைத்து அலறினான். அக்குரலைத் தனது கணவன் குரலாகவே கருதிக் கலங்கினர் சானகியார். அல்லஅல்ல என மறுத்த இலட்சுமணனுக்கு, இடங்கொடுக்காமலே உங்கள் அண்ணனைக் காத்தழைத்து வரச் செல்லவேண்டும், இல்லையேல் காட்டுத்தீயில் வீழ்ந்து இறப்பேன் என ஓடினர் சானகியார். அப்பெருங் கடுஞ் செயலுக்கு ஆற்றாது, அண்ணல் தனக்கிட்ட பணியாகிய அண்ணியாரைக் காத்தளிக்கும் பெரும்பணியை விட்டு, அண்ணியார் பணித்த அவசரப்பணிக்கு ஈடுபட நேர்ந்தது இளவலுக்கு. தனது காவல் நீக்கம் பகைவர்களின் ஆக்கத்திற்கும், அண்ணியாரொடு தங்கள் ஏக்கத்திற்கும் அடிகோலும் என்பதனை நன்கறிந்த செம்மல் இலக்குவனார் கலக்கமுற்று. ''வேகின்ற சிந்தை''யொடு விடைகொண்டு ஏக நேர்ந்தது.

தமக்குள்ள பெருங்காவலர் இருவரையும் மான்மேல் வைத்த ஆசையால் தாமே அகற்றி விட்டுத் தனியராகிவிட்டனர் சீதையார். திட்டமிட்டு இப்படியொரு பொழுது நேரவேண்டுமெனப் பாடுபட்ட இராவணன், இங்கு வெற்றியாளனாகி விட்டனன். அவன் பிரித்து வைப்பதில் வெற்றியுற்றனனெனினும், சானகியார் பால் தனது ஏற்றமான உருவத்தோடு செல்லும் ஆற்றலற்ற ஏழையாயினன். சிறுத்தைப் புலிகள் மனிதர்மேல் பாய்கின்றபொழுது அஞ்சாநெஞ்சங்கொண்டு வீரத்தொடு பாய்வதனைக் காண்கின்றோம். அவை, மாட்டை ஆட்டை மான்களைப் பிடிக்கப் பாய்கின்ற பொழுது பதுங்கியே பாய்கின்றன. ஏன்? மனிதரை அவை அடித்து வீழ்த்தும் உணர்வொடு முற்படுகின்றன. விலங்குகளைப் பிடித்துத் தின்னும் பேராசையுடன் அணுகுகின்றன. ஆற்றல் வெளிப் படுத்தும் உள்ளம் உயருகின்றது, ஆசையை வெளிப்படுத்தும் உள்ளம் பள்ளமாகின்றது. ''கள்ளத்தின் உணர்வெலாம் கருத்தில் ஆம் இருட் பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ?'' என்பதும் கம்பர் கருத்தே. மேலும் ''மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு'' என்றதனால், உள்ளம் கள்ளநெறியில் புகுங்கால் எவ்வலியோர் தோற்றத்தையும் அது எள்ளிச் சிதைத்துவிடுகின்றது.

இளமையும் கிளர்ச்சியும் மிகுந்த இராவணன், முதுமையும் தளர்ச்சியும் உள்ளவனானான். அவன் ஒரு கிழவேடம் பூண்பதில் மிகக் கெட்டிக்காரனாகக் காட்சியளித்தான். அவன் அடியெடுத்து வைப்பதில் ஒரு சிறு ஒலியும் வெளிவரவில்லையாம். நான்கைந்து வெண்கலச் சட்டிகளை ஒரு மூட்டையிலிட்டுக் கட்டினால், அது கட்டும் பொழுதும் ஒலிக்கும், அவிழ்க்கும்பொழுதும் அதைவிட ஒலிக்கும், எடுத்துச் செல்லும்பொழுதும் ஒலிக்கும். பத்துபடி முல்லையரும்பை ஒரு மூட்டையாகக் கட்டியெடுத்துச் சென்று அவிழ்த்து வைப்பதாயின் கட்டியபொழுதும் எடுத்துச் செல்லும்பொழுதும் ஒருசிறிதும் ஒலி செய்யாது. அதுவுமன்றி அப்பத்துப்படி அரும்பும் முப்பது படி மலராக மலர்ந்து மூட்டை மிக விம்மியெழுகின்ற மலர்ந்த பக்குவத்தில் அல்லவோ அவிழ்க்கப் படுகின்றது? அழுத்தப்பொருள் விடுபடுகின்ற பொழுது மிக ஒலிக்கவேண்டுமே, ஒலிக்குமா மலர்ப் பொதி? அப்படியிருந்ததாம் இராவணன் எடுத்த அடிவைப்புகள். அவன் தீயின்மேல் அடிவைப்பவனைப் போல் அஞ்சியஞ்சி அடியிடுகின்றனனாம். ஏன்? அவன் அவ்வளவு மென்மையுற்ற பாதத்தினனாக நடிக்கின்றனனாம். மேலும் ,நடக்கும் பொழுது அவனது கைகளும் கால்களும் மிகவும் நடுங்குகின்றனவாம். அவன்மேல் அருளுள்ளம் படைத்து யாரேனும் கட்டியணைத்துப் பிடித்தாலும், அவர்களையும் சேர்த்து ஆட்டிவிடும் தகையனவாம் அவனது கால்கள் கைகளின் நடுக்கங்கள்.

அப்படி அவன் கொண்ட கிழத்தனத்தைக்கண்டு உலகிலுள்ள கிழத்தனமெல்லாம் ஒரு கூட்டங் கூடி, இது மிகவும் அநியாய வேடம், நாங் களென்ன இவ்வளவு மோசமாகவா இருக்கின் றோம்? இந்த இராவணன் எங்களைக் கேலி செய்வது போல் நடிக்கின்றனன், இவனது செயலை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண் டிக்கின்றோம், எனக் கண்டனத் தீர்மானம் போடுமாம் கிழத்தன மாநாடு கூடி.

''பூப்பொதி யவிழ்த்தன்ன நடையன் பூதலம்
தீப்பொதிந் தாலென மிதிக்கும் செய்கையன்
காப்பரும் நடுக்குறு காலன் கையினன்
மூப்பெனும் படிவமும் முனிய முற்றினான்''

இங்குக்''காப்பரும் நடுக்குறு கையன் காலினன்'' என்னாமல், 'காலன் கையினன்' என்றதில் ஒரு நயம் காண்கின்றது. கற்பிற் சிறந்தோர் ஒருவரை அலக்கழிக்க நெஞ்சமிட்டெழும் இப்பொழுதே இவன் அழிவது உறுதியாகிவிட்டது. இவனது அழிவை யாராலும் தடுக்கமுடியாது, எனவே இனி இவனைக் காலன் கையிலிருந்து காக்க முடியாது என்ற கருத்துத் தோன்றக் ''காப்பஅரும் நடுக்குறு காலன் கையினன்'' என்றனர் கம்பர். இப்படியெல்லாம் சென்றான். தவசியென நினைத்துத் தவத்தர்களுக்கு உறையுளாக நிற்கும் சனகன் இல்லத்து வளர்ந்த ஆயிழையார், இவனையும் வரவேற்றனர். இந்த வஞ்சகத் தவசி உள்புகுந்து வைகிப் பலபல தனது பெருமைகளையெல்லாம் பேசினான். இவனால் புகழப்படும் இராவணன் என்பானை, அவ்வாரணங்கு, கெட்டவன் என வைதனள். அவ்வசவின் உச்ச நிலையில் இவன் பொறுமை யிழந்து பொங்கினான். மாயவேடம் விட்டது. பத்துத் தலையனானான். பித்த மொழிகள் பல பிதற்றினான். சானகியாரின் கற்பென்னுந் திண்மை, இவனை ஒரு சிறு துரும்பாக எள்ளியிகழ்ந்தது. வெள்கிய இராவணன் சீதையை எடுத்து ஓடத் தலைப்பட்டான். விடலையின் வீண்செயலில் அகப்பட்ட பெருமாட்டியார் பேதுற்று அலறுகின்றனர்.

மங்கையர்க்குக்கணவனோடுவாழ்வதினும், வேறு உயர்ந்த செல்வம் இல்லை. இச் சானகியாருக்கு நாட்டைவிட்டுக் காட்டில் இருக்க நேர்ந்தாலும், உரிய மணாளனொடு வாழும் மேம்பாட்டினராக இருந்தனராதலால், கருதுவதை முடிப்பேன் என்ற பெருமிதம் இருந்தது. இளவல் சொல் ஒருசிறிதும் பிடிப்பில்லாச் சொல்லாகக் கருதப்பெற்றது. இளவல், மான் தானே வேண்டும் நான் பிடித்து வருகின்றேன் என்றால், அதையும் ஒத்துக்கொள்ளவில்லை. அவர் பிடிக்கவேண்டாம், நீங்களே சென்று பிடிக்கவேண்டும் என்று ஒரு பிடிவாதமும் செய்தனர் சானகியார். இளையவன் வேண்டாமென் கின்றான். இல்லவள் வேண்டுமென்கின்றாள். என்னதான் செய்வது ஏந்தல்? தொழுதுரைக் கின்றனன் ஒரு துணைவன், அழுதுரைக்கின்ற ளன் அந்தத் துணைவி. தொழுவாரிடத்தில் கட்டளை செல்லும், அழுவாரிடத்தில் அது, அழுகையைத்தான் அதிகமாக்கும். அதற்காகவே தம்பிக்குச் சொல்லி, தையலுக்கு ஒத்து நடந்தனன் நாயகநம்பி. பெருமிதத்தில் பேதைமைப்பட்ட சானகியார் ,இப்போது வம்பனால் வாதனைப்பட நேர்ந்தது. ஒருவழி உணர்வு வந்தது, உண்மையைச் சொல்லி அல்லலுறுகின்றார். எப்போது? தமக்கு உற்ற பேதைமையைப் பெரிதுணர்ந்தாரப் பெருமாட்டியார்.

இராவணன் கொண்டுபோகின்றான். இவரது அல்லலுரை கேட்டுச் சடாயு இராவணனை எதிர்த்து இயன்றன பேசி, இயன்றனவெல்லாம் செய்து, அவனது வாளியால் இருசிறகும் எறியுண்டு, இடர்ப்பட்டு வீழ்ந்த நேரத்தில்தான் ''கேட்டினும் உண்டங்கோருறுதி'' என்றபடி தமக்கு அமைந்த உரியவர் மூவரும் ஒருவழி அகல நேர்ந்த பெருங்கெடுதலில் சானகியாருக் குப் பெருமித மயர்வினால் மறைந்த கண்கள், தெற்றெனத் தெரிகின்றன. ஆசை வெட்கமறியாது என்பது பழமொழி. தமக்கு மான்மேல் வந்த ஆசை தமக்கு இயல்பாகவுள்ள நாணத்தையும் மாற்றிவிட்டதென உணர்ந்தனர் அந் நங்கையார். புள்ளிமான் பொன்மான் கள்ள மான் வந்து தம் கருத்தைக் கொள்ளையிட, வள்ளலையும் இளவலையும் வாளாவருந்துறச் செய்த மாதினியார், தமது கள்ளமில் உள்ளக் கருத்து வெளிப்பட ஏங்குகின்றார், இடருறுகின்றார், என்செய்வார்.

நாணிலேன் உரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலை அறநெறி நின்றுளோர்க் கெலாம்
ஆணியை நுந்தையோர்க் கமைந்த அன்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள்

—சடாயுஉயிர்நீத்த படலம் 134

சீதையார் பின்னும் எண்ணுகின்றார். எனது கடமைகளுள் யான் எனது கற்பைக் காத்துக் கொள்வேன். ஆனால் எனது இறைவனது வில்லுக்கும் என்னை ஈன்றெடுத்த இல்லுக்கும் பழியைத் தேடிவிட்டேனே என இரங்கியழுதனர்.

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
வில்பழி யுண்டது வினையினேன் வந்த
இல்பழி யுண்டது என்றுஇரங்கி யேங்கினாள்

சிறகறுப்புண்ட செம்மல் ''எப்படியோ அவ்விரு செல்வர்களும் ஏந்திழையை நீங்கிச் சென்றிருக்கவேண்டும். அன்றேல் அவர்கள் முன் இவன் இச்செயலைச் செய்து உய்தி பெற்றிருக்க முடியாது, எனது சிறையிற்று யான் விழுந்தாலும், சானகியென்னும் அம் மடவரலின் கற்பின் சிறைக்கு எப்பழுதும் உறா, இவண் அவ்வாண்டகையர் வருமளவும் யான் உயிருடன் வைகி, நடந்ததை ஒப்புவிக்க வாய்த்தால் போதும்'' எனச் சிந்தை செய்து செயலற்று ஒய்வுற்று வணங்கி நின்றனன்.

''பொருஞ்சிறை யிற்றதே யெனினும் பூவை கற்பெனும்
இருஞ்சிறை யிறாதென இடருள் நீங்கி னான்''

சடாயுவின் நிலை இனையதாக, இராவணன் வஞ்சியைத் திருவுருத் தீண்ட அஞ்சினவனாய் சானகியின் இரக்கத்தை என்றேனும் எவ்வா

றேனும் தான் பெறமுடியும் என்ற உளப் பாங்குள்ளவனாய் இலங்கையில் தனது அரண்மனை அயலிலே ஒருவரும் அணுகொணாத ஒரு சோலையகத்திற் கொடுபோய்ச் சிறைப்படுத்தினன். அம்மருங்கு எண்ணம் என்பது இல்லாத, எண்ணிக்கையும் இல்லாத, அரக்கப் பெண்களைக் காவலிருக்கவும் செய்தனன்.

இங்கே தேவியாரால் ஏவப்பட்டுக் கடக்கவொண்ணாக் கடுஞ்சொற்களுக்கு ஆளாகி, அப்புறப்பட்ட அரிய இளவல், தன்னந்தனியராகத் தனது அண்ணியார் இருக்க நேர்ந்தது, எவ்வெத் துயரத்தை விளைக்கக் கூடும் என்பதனை நீளநினைக்க நேர்ந்தது. அந்நினைப்பு மேன்மேலுங் கவலையைத் தந்தது. ஆங்கு அவ் இளைய செம்மலார் பதைத்த பதைப்பு அந்த நந்திக் கிராமத்தில் தங்கிய பரதன்பட்டு வைகும் பதைப்பை யொத்ததாகவிருந்தது.

பரதன் பதினான்கு வருடங்கள் பதைத்த பதைப்பிற்குக் காரணம் யார் என்பது இங்கு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. தசரதனா? கைகேயியா? மந்தரையா? இவர் மூவருள்ளும் வினை விளைவிற்கு முன்னவள் மந்தரை. இரண்டாமவள் கைகேயி. மூன்றாவதாக நின்றவர் தசரதனார், என்றால் ஆம் ஆம் எனப் பெரும்பாலோர் ஒத்துக் கொள்ளுவார்கள்.

மந்தரை கலகமூட்டினாள். கைகேயி மனங் கலைந்து வரங் கேட்டுக் கணவனை மடக்கிவிட்டாள். தசரத மன்னனும் வாக்குத் தவற வழியின்றிப்பேதுற்று நின்று உயிர்கொடுத்தனன். இச்செய்திகள் ஒன்றுமே தெரியாது பிற்றை நாள் வந்து தெரிந்து பேதுற்றனன் பரதன். அழுதான் தொழுதான் அல்லலுற்றான், அன்னை செயலால் படாதன பட்டான், கடன்கள் முடிந்தன, அரச நெறியாளர்கள் பலரும் கூடினர். அரசைப் பரதனார் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள முன்வந்தனர். யார் கேட்பது? என்பது பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதிலும் பொல்லாத வேலையாகத் தெரிந்தது. எல்லா அமைச்சரும் சுமந்திரனைப் பார்த்தனர். அவர், வதிட்டரை நோக்கி வாளாவிருந்தனர். வதிட்டர் யாரை நோக்குவார்? அப்பெரும் பாரத்தை அவரேதான் எடுக்க நேர்ந்தது.

அவர் பரதனை நோக்கி உலகியலைப் பலவாறு கூறினார். மரங்களுக்கும் அரசுண்டு. மாக்களுக்கும் அரசுண்டு. பறவைகளுக்கும் அரசுண்டு. பசும்புல்லிற் கரசுண்டு என்றால் மனித உலகம் ஒரு ஆள்வாரின்றி நிற்க முடியுமா? எனச் சிறுகச் சிறுகச் செப்பலுற்றனர். அவர் முடிவாகச் சொல்ல வருவதை முன்னிய மன்னவன் மாமகன், ஐயோ கலிபிறந்துவிட்டதோ எனக் கலங்கினான்.

''குருபரரே'' என்ன சொல்ல வருகின்றீர்கள்? உலகில் ஒரு மனைமகளும் செய்யாத கொடுமையை என் அன்னை செய்தனள். அது யாராலும் அநுபவிக்க முடியாத கொடுமை. அதனை வலியுறுத்தி, ஒருவரும் செய்ய முடியாத தவச் செம்மலாக விளங்கும் நீங்களும் அவள் செயலை நிலைநிறுத்த ஊக்கங் காட்டுவீர்களானால், இந்நாள் நடைபெறுவது கிரேதாயுகம் என்பர், இனிவரவேண்டிய திரேதாயுகம் துவாபரம் இரண்டும் வராமலே கலியுகம் வந்து முறைகள் தலைதடுமாற நேர்ந்தது எனலாமா? எனக்கு ஒவ்வாத செயலை ஏன் உங்கள் வாக்கினால் சொல்ல ஒருப்படுகின்றீர்கள், என விம்மி விம்மி அழுது அழுது உரைத்தனன் அண்ணல் பரதன்.

''அடைவரும் கொடுமையென் அன்னை செய்கையை
நடைவரும் பெரியர்நீர் நன்றிது என்றிரேல்
இடைவரும் யுகம்அவை இரண்டும் நீங்கிப்போய்க்
கடைவருந் தீநெறிக் கலியின் காட்சியோ''

(அயோத், ஆற்றுப்.15)

ஆதலால் உங்கள் கருத்து எனக்கு ஒவ்வாது. அரசிற்கு உரிய பெருமகன் வருமாறு சென்று அழைத்து வந்து முறையாக மணிமுடி சூட்டிக் காணுங்கள். இல்லையேல் யானும் அப்பெருமகனொடு சென்றுவர முயல்கின்றேன். அன்றெனில் தந்தை பிரிய, தமையன் காடுற, வந்த என் பொல்லாப் பிறப்பினைப் போகவிட்டுப் புனிதனாகின்றேன் என்றனன். இப்படிப் பரதன் கொண்ட முடிவினைக் கருதி யாவரும் அன்புக் கடலில் மூழ்கினார்கள். அவ் அரச பரம்பரையில் அளத்தற்கரிய வேல்வேந்தர்களைக் கண்ட பெருமுனிவன் வதிட்டன். அப்பரம்பரையார் எத்தனையோ யாகங்களைச் செய்தார்கள். எத்தனையோ வகையில் சிக்கலான நேரங்களிலும் ஒரு சிறிதும் அறங்கோணாது மக்களுக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் அளித்தார்கள். அத்தனையுங் கண்டிருந்த பெருந்தகைக்கு ஒரு காலத்திலும் ஒரு அரசிலும் உண்டாகாத பெருமகிழ்வும் பெருவியப்பும் இப்பரதன் உளத்துத் தூய்மையைக் கண்ட பொழுது உண்டாயிற்று. உளம் பூரித்த வதிட்ட மாதவனுடன் மந்திரிமார் அனைவரும் சேர்ந்து வாழ்த்தினார்கள். அவர்கள், எவ்வகையால் வளர்த்த புகழும் உனது மெய்வகையான புகழுக்கு ஒவ்வாது, ஆதலால் உலகெலாம் ஒடுங்குங்காலத்தும் உனது பெரும்புகழ் ஒல்காது ஓங்குக என்று ஒருமுகமாக வாழ்த்தினர்.

''ஆழியை உருட்டியும் அறங்கள் போற்றியும்
வேள்வியை இயற்றியும் வளர்க்க வேண்டுமோ
ஏழினோடு ஏழெனும் உலகம் எஞ்சினும்
வாழிய நின்பெயர் என்று வாழ்த்தினார்''

இங்கே அயோத்திநகரம் இருமுறை அமைச்சரவையைக் கூட்டிற்று. ஒருமுறை கூட்டியவன் பேரரசர் பெருமான். மறுமுறை கூட்டியவர் வதிட்டமாமுனிவனும் மந்திரிகளுமே எனச் சொல்லலாம். அயோத்தி அரசு பல்லாயிரம் ஆண்டுகள் ஆண்டதொரு பேரரசு. அது இருமுறைனதானா அமைச்சரவையைக் கூட்டியிருக்கும் எனக் கேட்கலாம். எத்தனை ஆயிரம் தடவைகளில் அவைகள் சேர்ந்திருப்பினும், இப்பொழுது கூறும் இருமுறையும் அழியாப்புகழ் கொண்ட செயற்பாட்டினதாகும். மேலும் ஒரே ஒரு செயலைத்தான் மேற்கொண்ட முடிவினது இருமுறையும். அரசன் கூட்டக் கூடிய

அமைச்சியலும், தாமேகூடிய அமைச்சியலும் ஒரு செயலையே முடிவாகக் கொண்டவையா யின. அது யாது? இராமனுக்குத் திருமுடிசூட்ட வேண்டும் என்பதுதான். முன்னர்த் திருமுடிசூட் டக் கருதியவர் தந்தை தசரதனார். இன்று திருமுடி சூடக் கருதியவர் தம்பி பரதனார். தசரதனார் செய்த முடிவு ஒரு கணவன் கட்ட ளைக்குக் கீழ்ப்படவேண்டிய மனைவியின் அடங்காத் தனத்தினாலேயே சிதைந்துவிட்டது. இன்று பரதனார் செய்த முடிவு தடைபடாத தொரு முடிவாயிற்று. அன்று கணவன் முடி வைத் தகர்த்தெறிந்த கைகேயியே, இன்று தனக்குக் கட்டுப்படவேண்டிய தனயன் முடி விற்குத் தான் கட்டுப்படவேண்டிய நிலையின ளாயினள். அன்று முரண்டிக் கொண்டிருந்த தாய், இன்று மூச்சு விடவில்லை. பரதன் கட்ட ளைக்கு உடன்படாதார் யார், யாருமில்லை. கைகேயியுமா? ஆமாம் ஆமாம். அவளென்ன, அவளுக்குக் கலக மூட்டியவளுந்தான்.

இராமனுக்கே திருமுடிச்சிறப்பு, இரா மனை அழைத்துவர நகர மக்கள் யாவரும் புறப்படுக என முரசு அறையப்பட்டது. அனை வரும் புறப்பட்டார்கள். யாரார்? ''தாயரும் அருந்தவத்தவரும்''. தாயரும் என்றது கௌசலை சுமித்திரை இருவரையும் மாத்தி ரமா? கைகேயியையுந்தான் அல்லவா? அவ் வளவு கடுமையாக இருந்த கைகேயி, இவ்வளவு மென்மையளாக மாறிவிட்டனளே. ஆம், மாறியதோடல்ல, வழிச் செலவில், கங்கை கடப்பில், படகிடையில், தன்னைப் பற்றிக் குக னிடம் தனது மகன் பரதன் கூறிய உளங் கொதித்த உரைகளையெல்லாம் அமைதியுறக் கேட்டும் வைகினள் அக்கைகேயியே. ஆகவே தசரதன் முடிவுகளைத் தடுப்பார் இருந்தனர். பரதன் முடிவு தடையற்ற முடிவாக இலங் கிற்று. இப்படி ஒரு மதங்கொண்ட வேழத்தின் நடையை ஒப்ப வீறுநடையிட்ட விரதசீலனைப் பரத மாண்பனை அவனது தெளிந்துயர்ந்த கருத்துத் தடைபட எதிரிட்டவர்தான் யாவர்? இராமனென உலகம் போற்றும் ஏந்தலே.

முடிசூடலைத் தடுத்தவளும் அடுத்தவ ளும் ஊமைவாயராக அடங்கி ஒடுங்கி நொந்து மெலிந்தசிந்தையராய் மாசடைந்த முகத்தின ராய் உலகத்தின் இடிப்புரைகளை யெல்லாங் கேட்டுக் கேட்டுச் செவிடடைந்த செவியராய் நிற்கச் செய்துவிட்ட நிமலன், பரதன் வந்து கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கவும், ஒருசிறிதும் இடங்கொடாது ஒரு பதினான்குவருடங்கள் கழிந்துதான் திரும்புவோம் என்று ஒரே நிலை யில் நின்ற அண்ணல் இராமபிரானே. இரக்கமே உருவான ஏந்தல் ஏனோ ''நம் தந்தையின் கட்டளையை, தந்தையின் மனமொத்திடாத கட்டளையை நிறைவேற்ற, இந்த உளமொத்த உத்தமத் தம்பியைப் பரதனைப் பதினான்கு வருடங்கள் பரதவிக்க விடவேண்டுமா'' என அருள்கூராத் தன்மையே பரதனைப் பேதுறவு செய்கின்றது அங்கே, இங்கே?

காடு செல்கஎனச் சிற்றன்னை சொன்ன கட்டளையைச் சிரமேற்கொண்டு காட்டிற்குப் புறப்படுவான், மரவுரி உடுத்துப் புறப்பட்ட தலைமகன், தன்னை நினைத்துத் தனக்குச் சொல்லிப் புறப்பட நினைந்து தன் இல்லத் திற்கு வந்தனனே, இதுபோலத் தங்கள் அண்ண னுக்கு அரும்பணியாற்றப் புறப்படும் தம்பி தனது மனைவிக்கு ஒரு பேச்சு சொல்லியாவது புறப்படலாமெனச் சிந்தையிலும் சிந்திக்கவில் லையே. அவர் மனைவியொருத்தி உண்டென்ப தனையும் மறந்து, அண்ணார் அரும்பணி புரிந்து வருவது ஒரு நாளல்லவே, ஒரு திங்களல்லவே, பதினான்கு ஆண்டுகளல்லவோ. இவ்வளவு அன்புள்ள தம்பியை உள்ளம் நெகும்வண்ணம் நாம் பேசுகின்றோமே என ஒருசிறிதும் சிந்திக் காமல், அத் தலைமகள், அரசின் நிலைமகள், ஞானநூல்களும் தேர்ந்த கலைமகள் சானகி யார் இட்ட கடுங் கட்டளையால் நெஞ்சு புலர்ந்த நீர்மையன் ஆகின்றனன் இளவல் இலக்குவன், இங்கே என்கின்றனர் கம்பர். சானகியாரைப் பிரிந்து தனிவிட்டு என்ன நிகழுமோ என எண்ணியெண்ணி ஏங்கிஏங்கிச் செல்லும் இலக்குவனின் நிலை, நந்திக்கிராமத் தில் வைகும் பரதனின் நிலையை ஒத்தது என்றனர்.

ஒருமகள் தனிமையை உன்னி உள்ளுறும்
பருவரன் மீதிடப் பதைக்குஞ் சிந்தையான்
பெருமகன் தனைத்தனி பிரிந்து பேதுறும்
திருநகர் நீருமப் பரதன் சிந்தையான்

—தொடரும்

---

## மணலில், இரவில், தாமரை மலர்ந்தது!

பகலினிற் கமலம், இரவினிற் குமுதம்
பண்புற மலர்ந்திடும் நீரில்;
தகஇதே இயற்கை; ஆயினும் முன்னாள்
**தாமரை இரவினில் மணலில்**
**புகழ்மிக மலர்ந்து பொலிந்தது;** தியாகர்
பரவையாற் சுந்தரர் பொருட்டால்,
செகதலத் தோங்கும் திருவாரூர்த் தெருவில்,
தூதுசென் றலைந்தருள் பொழுதே!

—ந. ரா. முருகவேள்.

**அறுவகைச் சமயங்கள்** (16-ம் பக்கத் தொடர்ச்சி)

அணுக்களும், அதிர்ஷ்டம் என்னும் காண முடியாத ஓர் ஆற்றலும், உலகின் படைப்பிற்குக் காரணம் என்று வைசேடிகம் கூறுகிறது. இதுவும் ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. காணப்படாத ஆற்றல் என்பது, அணுக்களிலோ அல்லது உயிர்களிலோ அமைந்திருப்பதாகக் கொள்ளினும், அணுக்களின் இயக்கம் எவ்வாறு நிகழ்கிறது? என்று அறிய இயலவில்லை. அணுக்கள் அறிவற்றவை. காணப்படாத ஆற்றல் என்பதும் அத்தகையதே. இவைகள் எவ்வாறு உலகின் படைப்பிற்குக் காரணமாதல் கூடும்? அணுக்கள் அவயவப் பகுப்புடையன. அநித்தியமாக இருப்பன. அவைகளால் உலகம் தோன்றியது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

பௌத்தர்கள், உலகப் படைப்பிற்கு ஒன்றோடொன்று இணைந்து, சங்கிலி போன்ற ஒருவகைத் தொடர்பு காரணம் என்கின்றனர். அதனை ஒத்துக் கொண்டாலும், இக்காரண காரிய முறைக்கு அவர்கள் கூறும் கணபங்க வாதம் முரண்படுகின்றது.

சமணர்கள், ஒன்றற்கொன்று முரண்பட்ட ஒற்றுமையிலும் வேற்றுமையிலும், நித்தியத்திலும் அநித்தியத்திலும், நம்பிக்கை கொள்கின்றனர். ஆனால், ஒரே பொருளில் இத்தகைய இயற்கைக்கு மாறுபட்ட பண்புகள் எங்ஙனம் அமைந்திருத்தல் கூடும்? மேலும், சமணர்கள், உயிருக்குப் பெருமை சிறுமை முதலிய அளவுகளைக் கூறுகின்றனர். இதுவும் பொருத்தமாகத் தோன்றவில்லை. அளவுடைய பொருள்களெல்லாம் சடப்பொருள்கள் ஆகும். அழிந்துபடும். அவைகள் ஒருபோதும் அறிவுடைய பொருள்கள் ஆகா. இத்தகைய பல முரண்பாடுகள் காணப்படுவதனால், சமணர்களின் கொள்கையும் ஏற்கத் தகுந்தனவாக இல்லை.

இக்கொள்கைகளெல்லாம் பொருந்தாமையினால், வேதாந்தமானது பிரமம்தான் முடிவான பரம்பொருள், அதுதான் உலகின் நிலைக்களம் என்று கருதுகிறது. சில கொள்கையாளர்கள், கடவுள் உலகத்திற்கு நிமித்தகாரணர் ( Efficient cause ) ஆக மட்டும் விளங்குகின்றார் என்கின்றனர். அது தக்க பொருத்தமான கருத்தாகத் தோன்றவில்லை. ஏனெனில், அங்ஙனம் கொண்டால், கடவுள் என்பவர் ஒரு வரையறைப்பட்ட, குறைபாடுடைய பொருளாய் முடிவர். கடவுளிலிருந்தே எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றன. இவ்வுலகின் படைப்பு, கடவுளால் முயன்று வருந்திச் செய்யப்படுவதன்று. உலகப்படைப்பு கடவுளுக்கு ஒரு விளையாட்டுப் போன்ற எளிய செயலேயாகும். பாலானது தானாகவே தயிராகப் பரிணமித்தல் போல, பிரமமானது தானாகவே உலகமாகப் பரிணமிக்கின்றது. படைப்பு என்பது, புதியதாகத் தோற்றுவிக்கப்படுவதொன்றன்று. ஓர் ஆடை மடிக்கப்படுவதும் விரிக்கப்படுவதும் போலவே, இவ்வுலகமும் ஒடுங்குகின்றது. வெளிப்படுகின்றது. உண்மையில், உலகமானது பிரமத்திற்குத் தனியே இருக்கவில்லை; உலகம் பிரமத்திற்கு வேறானதன்று; காரியம் என்பது காரணத்தின் வேறுபட்டதன்று. வேறுவகையாகச் சொல்லவேண்டுமாயின், காரணம் ஒன்று மட்டுமே உண்மையானது. அக்காரணமாகிய பிரமமே உலகமாகின்றது.

உலகமானது பிரமத்தின் தோற்றமே எனின், தனிப்பட்ட சீவனுக்கும் பிரமத்திற்கும் உள்ள உறவும் தொடர்பும் யாவை? சீவனும் கூட ஒரு படைக்கப்பட்ட பொருளா? அல்லது பரிணாமமா? சீவன் கடவுளிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது என்பது, பாஞ்சராத்திரக் கொள்கை. வாசுதேவரிடமிருந்து சங்கர்ஷணர் தோன்றினார் எனப் பாஞ்சராத்திரம் கூறுகின்றது. பாதராயணர் இக்கொள்கையை மறுக்கின்றார். ஆன்மாவுக்குத் தோற்றம் என்பது இருத்தல் இயலாது. ஒரு பொருளும் அதன் நிழலும் போல, ஆன்மாவானது பிரமத்தோடு தொடர்புடையது. பிரமம்தான் தொழிற்படுகின்றது, அநுபவிக்கின்றது, பல பிறவிகளை எடுக்கின்றது, முத்தி பெற முயற்சிக்கின்றது, முத்தியை அடைகின்றது.

### (3) சாதனம்:

வேதாந்த சூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயம், சாதனத்தைப் பற்றியது. இஃது, ஆன்மாவானது உடல் அழிந்த பிறகு எந்தெந்த வழிகளில் பயணம் புரிகின்றது என்பது பற்றி ஆராய்கிறது. உடம்பின் வேறாக உயிர் என்பது ஒன்றில்லை, என்று கூறும் சார்வாகர்களின் கொள்கை ஏற்புடையதன்று; ஏனெனில் இறந்துபோன உடலின்கண், அறிவின் அறிகுறிகள் காணப்படுவதில்லை. உடல் அழிந்த பிறகு ஆன்மாவானது, தேவயானம் எனப்படும் தேவர்களின் பாதையிலோ, அல்லது பிதிர்யானம் எனப்படும் இறந்த முன்னோர்களின் பாதையிலோ, செல்லக் கூடும். இங்ஙனம் செல்லுங்கால், ஆன்மாவானது தன்னோடு இருந்த இந்திரியங்களையும், அந்தக்கரணங்களையும், நுண்ணிய நிலையில் உடன் கொண்டு செல்லுகின்றது. இப்பிறவியில் செய்த தியானத்தின் பயனாகத் தேவயானத்தின் மூலம் பிரம்மலோகத்திற்கும், வேள்வியின் பயனாகப் பிதிர்லோகத்திற்கும் ஆன்மா செல்லுகின்றது. இவ்விரண்டிலும் செல்லாத உயிர்கள், பிறந்தும் இறந்தும் உழலுகின்றன. தேவலோகம் சென்ற உயிர்கள், தமது நல்வினைப் பயன்களை நுகர்ந்து முடித்தபின், இவ்வுலகிற்கு மீளவும் வந்து பிறக்கின்றன. ஆன்மாவானது எவ்வாறு இவ்வுலகத்திற்கு வருகின்றது? எவ்வாறுதாயின் கருப்பையில் நுழைகின்றது? எவ்வாறு புதிய உடலைப் பெற்று அதனுள் இயங்குகின்றது? என்பவைகளை, இப்பகுதியின் சூத்திரங்கள் கூறுகின்றன. ஒரு பிறவியில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதுகூட, ஆன்மாவானது சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி (நனவு கனவு உறக்கம்) என்னும் வெவ்வேறு நிலைகளை அடைகின்றது. வெவ்வேறான இந்நிலைகளிலெல்லாம், ஓர் உயிரே தொடர்ந்து நின்று விளங்குகின்றது. பிரமத்துடன் அத்துவிதமாகக் கலக்கும்போதே உயிரின் பிறப்பு இறப்புகள் ஆகிய நிலைகள் முடிவுறுகின்றன.

பிரமப் பொருள், தன்னிலையில் உருவமும் குணமும் அற்றது. உபநிடதங்களில் சில இடங்களில் பிரமத்திற்குக் குணங்கள் கூறப்படுகின்றன. அங்ஙனம் கூறப்படுதல், உபாசனை ஆகிய தியானம் செய்வதின் பொருட்டேயாகும். ஒளிக்கு உருவம் இல்லாதது போலப் பிரமத்திற்கும் உருவம் இல்லை. பிரமம் என்பது அறிவே வடிவமான சுத்த சைதன்யப் பொருள் ஆகும். சூரியன் ஒன்றே பல நீர்க்கலங்களில் பிரதிபலிப்பது போல, பிரமமும் பல சீவர்களைப் போலக் காட்சியளிக்கின்றது. பிரமத்தின் இயல்பினை இத்தகையதென்று வரையறுத்து ஆராய்ந்து கூறுதல் இயலாது. அதனாலேயே தத்துவசாத்திர நூல்கள் பிரமத்தினை ''அல்லைஈது, அல்லைஈது'', ''நேதி நேதி'' என்று குறிப்பிடுகின்றன.

சீவனின் அவிச்சை அல்லது அறியாமை அழிகின்றபோது, பிரமத்துடன் தான் அத்துவிதமாகக் கலந்திருத்தலைச் சீவன் அறிகின்றது. இந்தப் பிரம அத்துவிதக் கலப்பினை உணர்ந்து கொள்ளும் உபாயங்களாகவே, வித்தைகள் எனப்படும் பல்வேறு தியானமுறைகள், நூல்களிற் கூறப்பட்டுள்ளன. வித்தைகள் பலவேறு வகைப்பட்டிருப்பினும் அவைகளெல்லாம் ஒரே பயனையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஒரு வித்தையின் இயல்பு, அதனைச் செய்யும் முறை ஆகியவை, அது கூறப்படும் இடம் குறிப்பு என்பவற்றைக் கொண்டே, முடிவு செய்யப்பெறுதல் வேண்டும். ஒருவர் எல்லா வித்தைகளையும் செய்ய மேற்கொள்ளவேண்டும் என்பது இல்லை. ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செய்தலே போதுமானது. வித்தைகளெல்லாம் சகுணப் பிரம்ம உபாசனையாகும். சகுண உபாசனை செய்பவர்கள், இறப்பிற்குப் பின் தேவயானத்தில் செல்வார்கள். நிர்க்குணப் பிரம்ம உபாசனை செய்பவர்கள், இவ்வுலகிலேயே பிரம்ம நிலையை அடைவார்கள். சந்நியாச ஆச்சிரம நிலையில் உள்ளவர்கள், ஞானம் பெறுதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர். அவர்கள் எத்தகைய சடங்குகளும் செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏனையவர்களுக்கே கிரியைகள் ஆகிய சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏனைய நிலையில் உள்ளவர்கள், தத்தமக்கு விதிக்கப்பட்ட கிரியைகள் ஆகிய சடங்குகளைச் செய்தற்கு உரியவராவர். அவைகள் மன அழுக்குகளைப் போக்கி, மனத் தூய்மை பெறுதற்குத் துணைபுரிகின்றன. ஞானநெறியைப் பின்பற்றுபவர்கள், இறுதியில் முத்திநிலையை அடைகின்றார்கள். முத்தி நிலையை இறந்தபின்பே அல்லாமல், இவ்வுலக வாழ்க்கையிலேயே கூடப் பெறலாம். முத்திநிலையில் உயர்வு தாழ்வுகளோ, வேறுபாடுகளோ இல்லை. முத்திநிலை என்பது பிரமநிலையே யாகும்.

### (4) பலன்

வேதாந்த சூத்திரத்தின் நான்காவது பகுதி, 'பல அத்தியாயம்' என்பது. அது பிரம ஞானத்தினால் எய்தும் பலன்களைப் பற்றி முதன்மையாக விவரித்துரைக்கின்றது. இடையிடையே வேறு பல துணைச் செய்திகளும்கூட, அதன்கண் விளக்கப் பெறும். சகுண உபாசனை புரிவோர் தேவயானத்தில் செல்வதும், அப்பயணத்தின் பல்வேறு நிலைகளும், பருவுடல் அழிந்தபின் ஆன்மா நுண்ணுடல் கொண்டு செல்வதும், இருதய வட்டத்தினின்று சுழுமுனை நாடி வழியாக ஆன்மா சூரியனின் கதிர்களைத் தொடர்ந்து பிரமலோகம் செல்வதும், அங்கங்கே அதுவதற்குரிய தேவதைகள் ஆன்மாவை வழிநடத்திச் செல்வதும் போன்ற பல செய்திகள், இப்பகுதியில் கூறப்படுகின்றன. பிரமத்தை உணர்வதன்மூலம் எல்லாப் பாவங்களும் நீங்குகின்றன. பிறப்பு இறப்புகள் ஒழிகின்றன. இவ்வுலகில் சீவித்துக் கொண்டிருக்கும்போதே பிரமத்தை உணர்ந்த சீவன்முக்தனின் உடல், பிராரத்த கன்மம் நீங்கும்வரையில் உள்ளது. பிராரத்த கன்மம் நீங்கியதும், உடலை விடுத்துச் சீவன்முக்தன் பிரமநிலையினை அடைகின்றான்.

### வேதாந்த நூல்கள்:

இவ்வாறு வேதாந்த சூத்திரம், பல்வேறு செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் சிறப்புற விளக்குகின்றது. பாதராயணர் என்னும் வேத வியாசருக்கு முன்னரே வேதாந்தத்தை விளக்கியவர்கள் பலர் இருந்திருத்தல் வேண்டும். அஸ்மராத்தியர், ஆதுலோமி, கார்ஷ்ணாஜினி, காசகிருஷ்ணர் என்பவர்களின் பெயர்களைப் பாதராயணர் ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். ஆயினும் அவர்களின் நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. பாதராயணரின் வேதாந்த சூத்திரத்திற்குச் சங்கரர் உரை வகுத்துள்ளார். மற்றும் பாஸ்கரர், யாதவப்பிரகாசர், இராமாநுசர், கேசவர், நீலகண்டர், மத்துவர், பலதேவர், வல்லபர், விக்ஞானபிட்சு என்னும் பற்பலர் பேருரைகள் இயற்றியுள்ளனர். இப்பேருரைகளுக்கு, மற்றும் துணைவிளக்க வுரைகள் பலப்பல எழுதப்பெற்றுள்ளன. சங்கரரின் சம்பிரதாயத்திலேயே, சங்கரபாஷ்யத்திற்கு வாசஸ்பதி என்பவர், பாமதி என்னும் விளக்க வுரை இயற்றியுள்ளார். அதனைத் தொடர்ந்து கல்பதரு, பரிமளம் என்னும் உரைகள் எழுந்துள்ளன. பத்மபாதர் சங்கரபாஷ்யம் குறித்து, பஞ்சபாதிகம் என்னும் விளக்கவுரை எழுதியுள்ளார். அதற்கு விவரணம் என்றும், தத்துவதீபனம் என்றும் விளக்கவுரைகள் தோன்றியுள்ளன. இங்ஙனமே வேதாந்தம் பற்றிய ஒவ்வொரு சம்பிரதாயத்திலும் பற்பல பேருரைகளும், துணைவிளக்க உரைகளும் ஏராளமாக இயற்றப்பட்டுள்ளன. தமிழில் தத்துவராயர் அருளிய பாடல்களும், தாண்டவராயசுவாமிகள் இயற்றிய கைவல்யநவநீதம் என்னும் நூலும் பிறவும், வேதாந்தக் கருத்துக்களை விளக்குவனவாகும்.

### முடிவுரை:

இங்ஙனம் மேல்விளக்கிப் போந்த, நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் அறுவகைச் சமயங்கள் பற்றிய தத்துவக் கொள்கைகளும், அவற்றினை விளக்கும் ஏராளமான நூற்றொகுதிகளும் பிற

வும் எல்லாம், பழமையும் பெருமையும் மிக்கதாய், விழுமியதாய் விளங்கும் நமது இந்து சமயத்தின் பலதிறச் சிறப்புக்களுள் ஒன்றாகும். அதனாலேயே இந்து சமயத்தின் பெருமையினை விதந்து வியந்து, மேலை நாட்டறிஞர்கள் பலரும் போற்றியிருக்கக் காண்கின்றோம்.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெரு மதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து மதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக் கூடியதும், ஆகிய சிறந்த மதம்,வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். அதனை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளுகின்றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்''(E)

என்று, இங்கிலாந்தில் தோன்றியவரும், உலகப் புகழ்பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட்ஷா, சார்லஸ் ராட்லா முதலியவர்களின் பெருமதிப்பையும் நட்புரிமையும் பெற்றுப் பிறங்கிய பெருநாவலரும், சிறந்த பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய **அன்னை வசந்தை** அம்மையார் கூறியிருப்பது, இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

''இந்திய நாட்டின் கவிதை, இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றைஆராயும்பொழுது, அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள், மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலங்களை நம்முடைய ஐரோப்பிய அறிவு நலனுடன் ஒருங்குவைத்து ஆராயும்போது, நாம் அவற்றின்முன் மண்டியிட்டு வணங்கிப் பணியவேண்டிய நிலையில் இருக்கின்றோம்''(F)

என்று, **விக்டர்கசின்** என்னும் பிரஞ்சுநாட்டுப் பேரறிஞர் குறிப்பிட்டிருப்பதும், நம்மனோர் உளங்கொண்டு போற்றி உவகை கொள்ளுதற்கு உரியதாகும்.

(E) "After a study of some forty years and more, of great religions of the world, I find none so perfect, none so scientific, none so philosophical and none so spiritual, as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it, the more you try to understand it, the more deeply you will value it".

—*Dr. Annie Besant,*

(F) "When we read with attention, the poetical and philosophical movements of the East. above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the measures, or the results at which the European genius has sometimes stopped that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race the native land of the highest pihlosophy.''

—*Victor Cousin*

## மனக்கவலை மாற்றும் வழி

''செல்வச் செழிப்பிலும், வசதிப் பெருக்கத்திலும் திளைத்து நிற்பினும், அமெரிக்க நாட்டுமக்கள், மனக்கவலைகள் மிகுந்து உறக்கம் இழந்து, மனஅமைதியினைத் தேடி அலைந்து திரிந்து அல்லலுற்று வருந்துகின்றனர். அவர்கள் தங்கள் கவலைகளை மறக்க, வேறு வழி காணாமல், தூக்க மாத்திரைகளையே நாடி நிற்கின்றனராம்.'' ஒவ்வோர் இரவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 60 லட்சத்திற்கு மேற்பட்ட தூக்க மாத்திரைகள், அமெரிக்க மக்களைத் தூங்க வைப்பதற்குத் தேவைப்படுகின்றன என்று சொல்லப்படுகின்றது. உண்மையில், இஃது ஒரு கணிப்புக் குறைவான கூற்றேயாகும். ஒரு நாளைக்கு 120 லட்சம் தூக்க மாத்திரைகள் அமெரிக்க மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 700 கோடி மாத்திரைகள் அவர்களால் விழுங்கப்படுகின்றன. அதாவது வாராத தூக்கித்தினை வருவித்துக் கொள்ளுதற்காக, ஓர் இரவில் மட்டும் சுமார் 190 லட்சம் தூக்க மாத்திரைகளை அமெரிக்க மக்கள் உட்கொள்ளுகின்றனர்''. என்று நார்மன் வின்செண்ட் பீல் (Norman Vincent Peale, The Power of Positive Thinking, p. 238) என்னும் அறிஞர், குறிப்பிடுகின்றார்.

மனிதன் என்பவன் மனமுடையவன். மனம் இருக்கும் வரையிலும், மனிதனுக்கு ஆசைகளும், கவலைகளும், அளவற்ற துன்ப உணர்வுகளும், இடையறாமல் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கும். அவற்றைத் தூக்க மாத்திரைகளை விழுங்கியோ, மயக்கம் தரும் போதை மருந்துகளை உண்டோ, தற்கொலை முயற்சிகளை மேற்கொண்டோ, குறைத்துக் கொள்ளுதல் ஒருபோதும் இயலாது. இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற உணர்வு உடையவர்களாய், அவனது திருவடிகளை உண்மை அன்புடன் தொழுது வழிபட்டு, ஒழுக்கம் மிக்க நல்வாழ்க்கை நடத்துவது ஒன்றின் மூலம்தான், நாம் நம் கவலைகளையும் துன்பங்களையும் போக்கிக் கொள்ளுதல் இயலும். வேறு எதனாலும் நம் கவலைகளையும், துன்பங்களையும் போக்கிக் கொள்ளுதல், ஒருபோதும் இயலாது.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார் அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என்று, நமது தெய்வப்புலவர் திருவள்ளுவர் பெருமான் அறிவுறுத்தி அருள்கின்றார். உலகப் பெருங் கவிஞரும் ஞானியுமாகிய நமது திருவள்ளுவர் பெருந்தகை அறிவுறுத்தியருளியபடி, தனக்குவமை இல்லாதவனாகிய இறைவனின் திருவடிகளைப் புகலடைந்து, உண்மை அன்புசெய்து வழிபடும் நல்லொழுக்க வாழ்க்கையின் மூலம்தான், நாம் நம் கவலைகளையும் துன்பங்களையும் நீக்கிக்கொண்டு, மகிழ்ச்சியும் இன்பமும் பெற்று வாழ்தல் இயலும்.

துன்பம் இன்றித், துயர்இன்றி, என்றும்நீர்
இன்பம் வேண்டில், இராப்பகல் ஏத்துமின்;
என்பொன் ஈசன் இறைவன்என்று உள்குவார்க்கு,
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே!

—திருநாவுக்கரசர்.

# வைணவத் திவ்விய தேசங்களும், பெருமாள்—தாயார் திருப்பெயர்களும்

(தொகுத்தவர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

| வ. எண் | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள்திருப்பெயர் | தாயார்திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| | | **(சோழநாட்டுத் திருப்பதிகள்—40)** | | |
| 1. | திருவரங்கம் | திருவரங்கநாதன், | திருவரங்கநாச்சியார் | கோயில், பெரியகோயில், பூலோகவைகுந்தம், போகமண்டபம் என்னும் பெயர்களை உடையது. இங்கு ஏழு பிராகாரங்களும் 15 கோபுரங்களும் உள்ளன. மேலும் ஒரு கோபுரம் இப்போது கட்டப்படுகின்றது. |
| 2 | உறையூர் | அழகியமணவாளன் | வாசலட்சுமி, உறையூர்வல்லி | திருப்பாணாழ்வார் அவதாரத்தலம். |
| 3 | தஞ்சைமாமணிக்கோயில் | நீலமேகப்பெருமாள், தஞ்சைமாமணி, மணிக்குன்றப்பெருமாள் | செங்கமலவல்லி | மூன்று சந்நிதிகளும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்றவை. |
| 4 | திருஅன்பில் | திருவடிவழகியநம்பி | அழகியவல்லிநாச்சியார் | ——— |
| 5 | திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்) | புருடோத்தமன் | பூர்வாதேவி | இத்தலத்தின் பிராகாரத்திற்குள்ளாகவே பிட்சாண்டார் என்னும் சிவலிங்கம் உள்ள ஒரு சிவ சந்நிதி, பெருமாள்கோயிலின் மூலத்தானத்தின் பக்கத்திலேயே மேற்கில் உள்ளது. பெருமாளைப் பிரதட்சணம் செய்வதாயின் இச்சிவ சந்நிதியையும் சேர்த்தே செய்தல் வேண்டும். இதனால் பண்டைக்காலத்தில் சிவ-விஷ்ணுபேதம் இருந்திருக்கவில்லை என்று தெரிகின்றது. |
| 6 | திருவெள்ளறை | புண்டரிகாட்சன், தாமரைக்கண்ணான் | பங்கயச்செல்வி, சண்பகவல்லி. | உய்யக்கொண்டார் அவதாரத் தலம். |
| 7 | புள்ளம்பூதங்குடி | வல்வில்இராமன் | பொற்றாமரையாள் | இராமபிரான் சடாயுவைத் தகனம் செய்த தலம். திருமங்கையாழ்வாருக்கு இராமபிரான் சங்கு சக்கரம் ஏந்தியவடிவத்துடன் காட்சிதந்தருளினார். அதனால் இந்தத் தலத்தில் மட்டும் இராமபிரான் சங்குசக்கரத்துடன் காட்சி தருகின்றார். வேறு எங்கும் இவ்வாறு காணமுடியாது. இத்தலத்திற்கு ஒரு கல்தொலைவில் தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த திருமண்டங்குடி என்னும் தலம் உள்ளது. இது சுவாமிமலைக்கு அருகில் உள்ளது. |
| 8 | திருப்பேர்நகர் (கோயிலடி) | அப்பக்குடத்தான் | கமலவல்லி | திருச்சியிலிருந்து 15 கல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | திருஆதனூர் | ஆண்டுஅளக்கும் ஐயன் | திருவரங்கநாயகியார் | வடகலைச் சந்நிதி. பெருமாள் தன் பெயருக்கு ஏற்றபடி மரக்காலின்மீது தம் தலையை வைத்துக்கொண்டு பள்ளிகொண்டுள்ளார். திருமங்கையாழ்வாருக்குக் காட்சியளித்ததனால், மூலத்தானத்திலேயே திருமங்கையாழ்வாரின் திருவுருவம் அமைந்துள்ளது. புள்ளம்பூதங்குடிக்கு மிக அருகில் உள்ள தலம். |
| 10 | திருஅழுந்தூர் (தேரழுந்தூர்) | ஆமருவியப்பன் | செங்கமலவல்லி | உபரிசரவசு என்னும் அரசன் நடுநிலை தவறித் தீர்ப்பு வழங்கியதனால்,அவனது தேர் மண்ணில் புதைந்து அழுந்திய தலம். இராமாயணம் பாடிய கம்பர் இங்கு அவதரித்தார் என்பர். |
| 11 | சிறுபுலியூர் | அருமாகடல்அமுதன்,<br>கிருபாசமுத்திரம்<br>(உற்சவரின் பெயர்) | திருமாமகள்நாச்சியார்<br>தயாநாயகி | மாயூரம்-திருவாரூர்க் கிளைப் பாதையில், கொல்லுமாங்குடி நிலையத்திற்கு அருகில் உள்ளது. |
| 12 | திருச்சேறை<br>(சாரக்ஷேத்திரம்) | சாரநாதன் | சாரநாயகி | கும்பகோணத்திலிருந்து திருவாரூர் போகும் வழியில் உள்ளது. இத்தலத்தில் பெருமாள் நாச்சியார் விமானம் தீர்த்தம் நிலம் என்ற ஐந்து சாரம் உள்ள பொருள்கள் அமைந்திருப்பதால் இதனைப் 'பஞ்ச சாரத்தலம்' என்பர். இத்தலத்தில் ஐந்து நாச்சியார்கள் எழுந்தருளியுள்ளனர். |
| 13 | தலைச்சங்கநாண்மதியம்<br>(தலைச்சங்காடு) | நாண்மதியப்பெருமாள்,<br>வெண்சுடர்ப்பெருமாள், | தலைச்சங்கநாச்சியார்<br>செங்கமலவல்லித்தாயார் | மாயூரம்—தரங்கம்பாடிப் பாதையில் ஆக்கூர், செம்பனார்கோயில் நிலையங்களுக்கு அருகில் உள்ள தலம். |
| 14 | திருக்குடந்தை<br>(கும்பகோணம்) | சாரங்கபாணிப்பெருமாள்,<br>ஆராவமுதப்பெருமாள் | கோமளவல்லி | ''குடந்தைக் கிடந்தவாறு எழுந்திருந்து பேசு வாழி கேசவனே'' என்று திருமழிசைஆழ்வார் பாடியதற்கேற்பப் பெருமாள் கிடந்தவாறு எழுந்திருந்து சேவை தருகின்றார். அதனால் பெருமாளுக்கு உத்தானசாயி என்ற பெயர் வழங்கும். நம்மாழ்வார் ''ஆராஅமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே'' என்று அருளிச் செய்ததனால், பெருமாளுக்கு ஆராவமுதர் என்ற பெயர் ஏற்பட்டது. நாதமுனிகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைப் பெற்று உலகில் பரப்புவதற்குக் காரணமாக அமைந்த பதிகம் பெற்ற சிறந்த தலம். |
| 15 | திருக்கண்டியூர் | அரன்சாபம்தீர்த்தபெருமாள், | கமலவல்லிநாச்சியார் | தஞ்சை-திருவையாற்றுப் பாதையில் உள்ளது. |
| 16 | திருவிண்ணகர் | ஒப்பிலியப்பன்சந்நிதி | பூமிதேவிநாச்சியார் | கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. மூலத்தானத்தில் உள்ள பெருமாள்,திருவேங்கடமுடையானைப் போன்ற திருவுருவம் உள்ளவர். அதனால் மூலவருக்கு வேங்கடாசலபதி என்றும், |

| வ. எண். | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள் திருப்பெயர் | தாயார் திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| | | | | உற்சவருக்குச் சீநிவாசப்பெருமாள் என்றும் பெயர். சிறந்த பிரார்த்தனைத் தலம். ஒப்பிலியப்பன் என்னும் திருப்பெயர், உப்பிலியப்பன் என மருவி வழங்குகின்றது. அதற்கு ஏற்பப் பெருமாளுக்கு உப்பில்லாத பிரசாதங்களே தினமும் நிவேதனம் ஆகின்றன. |
| 17 | திருக்கண்ணபுரம் (கண்வபுரம்) | சௌரிராசப்பெருமாள் | கண்ணபுரநாயகி | மாயூரம் - திருவாரூர் இருப்புப் பாதையில் நன்னிலம், திருப்புகலூருக்கு அருகில் உள்ளது. திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன் கவித்தலம், திருக்கோவிலூர், திருக்கண்ணபுரம் என்னும் ஐந்தும் பஞ்சகிருஷ்ணத் தலங்கள் எனக்கூறப் பெறும். |
| 18 | திருவாலித்திருநகரி | வயலாலிமணவாளன் | அமிர்தகடவல்லி | சீர்காழிக்கு அருகில் உள்ள தலம். பெருமாளைத் திருமகள் தழுவி அணைத்து, ஆலிங்கனம் செய்து கொண்ட தலமாதல் பற்றி, இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. திருமங்கையாழ்வார் பெருமாளினிடம் திருவெட்டெழுத்து மந்திரம் உபதேசிக்கப் பெற்ற தலம். |
| 19 | திருநாகை (நாகப்பட்டினம்) | சௌந்தரராசர் | சௌந்தரவல்லி | — |
| 20 | திருநறையூர் | நம்பிநாதர் | நம்பிக்கைநாச்சியார் | கும்பகோணம்-திருவாரூர்ப் பேருந்துப் பாதையில் உள்ளது. நறுமணம் மிக்க தலம் ஆதலால் திருநறையூர் (சுகந்தகிரி)எனப் பெயர்பெற்றது. பெருமாளினும் இங்கு நாச்சியாருக்கு முதன்மை அளிக்கப்பெற்றதனால், இதற்கு நாச்சியார் கோயில் என்னும் காரணப்பெயர் ஏற்பட்டது. பெருமாள் திருமங்கையாழ்வார்க்குத் திருஇலச்சினை அருளிய தலம். அதனால் ஆசாரிய நிலையில், இங்குப் பெருமாள் இரண்டு திருக்கைகளுடன் மட்டும் விளங்குகின்றார். வேறு எங்கும் இல்லாதவகையில் கருடனின் திருவுருவம் கருங்கற்சிலையில் அமைந்துள்ளது. திருவிழாக்களில் இது திருவீதிவுலா செய்யப்படுகின்றது. |
| 21 | திருநந்திபுரவிண்ணகரம் (நாதன்கோயில்) | விண்ணகரப்பெருமாள்<br>ஜகந்நாதர்<br>நாதநாதப்பெருமாள் | சண்பகவல்லி | கும்பகோணத்திற்கு 3 கல். நந்திதேவருக்குக் காட்சி அளித்த தலம். ஆதலால் இப்பெயர் பெற்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | திருஇந்தளூர் | சுகந்தவன நாதர்<br>பரிமள ரங்கநாதர்<br>மருவினிய மைந்தர் | சந்திரசாப விமோசனவல்லி<br>புண்டரீகவல்லி | மாயூரத்திற்கு அருகில் உள்ளது. இந்து-சந்திரன். சந்திரன் சாபம் நீங்கிய தலம், இந்தளூர் ஆயிற்று. மூலவருக்குப் பரிமளரங்கநாதர் என்பது பெயர். திருவரங்கத்தை ஆதிரங்கம் என்றும், திருக்குடந்தையை மத்தியரங்கம் என்றும், திருஇந்தளூரை அந்தியரங்கம் என்றும் கூறுவர். |
| 23 | திருச்சித்திரகூடம்,<br>(தில்லைத் திருச்சித்திரக் கூடம், சிதம்பரம்) | கோவிந்தராசர் | புண்டரீகவல்லி | இராமபிரான் வனவாசம் செய்கையில் சித்திரகூட பருவதத்தில் எழுந்தருளியிருந்த கோலத்தில், உற்சவமூர்த்தி விளங்குகின்றார். மூலவர் திருப்பாற்கடலிற் போலப் பள்ளிகொண்டநிலையில் எழுந்தருளியுள்ளார். இத்தலத்திற்கு 16 கல் தொலைவில் நாதமுனிகள் அவதரித்த காட்டு மன்னார்கோயில் உள்ளது. |
| 24 | காழிச்சீராமவிண்ணகரம்<br>(தாடாளன் சந்நிதி) | தாடாளன்<br>திரிவிக்கிரமமூர்த்தி | மட்டவிழும்குழலி | சீர்காழியில் இருப்பதனாலும், இராமபிரான் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதனாலும், இப்பெயர் பெற்றது. |
| 25 | கூடலூர் (ஆடுதுறைப் பெருமாள் கோயில்) | வையங்காத்தபெருமாள் | பத்மாசனவல்லி | திருவையாற்றுக்கு அருகில் உள்ள தலம். தேவர்கள் கூட்டமாகக் கூடிவந்து பெருமாளைச் சேவிப்பதனால், கூடலூர் எனப் பெயர்பெற்றது. |
| 26 | திருக்கண்ணங்குடி | சியாமளமேனிப் பெருமாள் | அரவிந்தவல்லி நாச்சியார் | திருவாரூர்-நாகப்பட்டினம் பாதையில் கீழ்வேளூருக்கு அருகில் உள்ளது. கண்ணபிரான் குடியிருக்கும் இடம் என்பது தலப்பெயரின் பொருள். மூலவர் உலகநாதன். தாயார் உலகநாயகி. உற்சவர் தாமோதர நாராயணன். இத்தலத்தைக் குறித்து ''உறங்காப்புளி, ஊறாக்கிணறு, காயாவகுளம், தோராவழக்கு, திருக்கண்ணங்குடி'' என்று பழமொழி வழங்குகிறது. |
| 27 | திருக்கண்ணமங்கை | பக்தவத்சலப்பெருமாள் | அபிடேகவல்லி | திருவாரூருக்கு அருகில் உள்ளது. தாயார் சந்நிதியில் தேன்கூடு ஒன்று இருக்கின்றது. அதற்கு நாள்தோறும் பூசை நடக்கிறது. |
| 28 | கவித்தலம் | கஜேந்திரவரதர் | இரமாமணிவல்லி,<br>பொற்றாமரையாள் | கும்பகோணம்-பாபநாசத்திற்கு அருகில் உள்ளது. கவி-குரங்கு, அனுமான், அனுமனுக்குக் காட்சி அளித்த தலம் ஆதலால், கவித்தலம் என்று பெயர் பெற்றது. |
| 29 | திருவெள்ளியங்குடி | கோலவல்இராமன் | மரகதவல்லிநாச்சியார் | கும்பகோணத்திற்கு 10 கல் தொலைவில் உள்ளது. வெள்ளி-சுக்கிரன். சுக்கிராசாரியனுக்குக்காட்சி அளித்த தலம். ஆதலால் இப்பெயர்பெற்றது. பெரியவாச்சான்பிள்ளை அவதரித்த சேங்கநல்லூர் (திருச்சேய்ஞலூர்)இதற்கு அருகில்உள்ளது. திருவெள்ளியங்குடிச் சந்நிதியில் இருக்கும் கருடன், தன் கைகளில் சங்கு சக்கரம் ஏந்தியுள்ளார். அதனால் தனிச் சிறப்புடைய தலம். |

| வ. எண். | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள் திருப்பெயர் | தாயார் திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 30 | திருமணிமாடக்கோயில் (திருநாங்கூர்) | நந்தாவிளக்குப்பெருமாள் நரநாராயணன் | புண்டரீகவல்லித்தாயார் | வைத்தீசுவரன்கோயிலுக்கு அருகில் உள்ளது. |
| 31 | திருவைகுண்டவிண்ணகரம் (திருநாங்கூர்) | வைகுண்டநாதன், தாமரைக்கண்ணுடையபிரான் | வைகுண்டவல்லித்தாயார் | பெருமாள் வைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பது போலக் காட்சிதருகின்றார். |
| 32 | திருஅரிமேயவிண்ணகரம் (திருநாங்கூர்) | குடமாடுகூத்தர் | அமிர்தகடவல்லி | ——— |
| 33 | திருத்தேவனார்தொகை (கிழச்சாலை) | தெய்வநாயகப்பெருமாள் | கடல்மகள்நாச்சியார் | தேவர்கள் சபை கூடின இடம். திருவாலியிலிருந்து அரைகல் தொலைவில் உள்ளது. |
| 34 | திருவண்புருடோத்தமம் (திருநாங்கூர்) | புருடோத்தமன் | புருடோத்தமநாயகி | ——— |
| 35 | திருச்செம்பொன்செய்கோயில் (திருநாங்கூர்) | பேரருளாளர் | அல்லிமாமலர்நாச்சியார் | ——— |
| 36 | திருத்தெற்றிஅம்பலம் (திருநாங்கூர்) | செங்கண்மால் | செங்கமலவல்லி | திருமணிமாடக்கோயில், திருவைகுந்தவிண்ணகரம், திருஅரிமேயவிண்ணகரம், திருவண்புருடோத்தமம், திருச்செம்பொன்செய்கோயில், திருத்தெற்றிஅம்பலம் என்னும் ஆறு தலங்களும், திருநாங்கூர் என வழங்கும் ஊரின் நான்கு திருவீதிப் பிராகாரங்களில் உள்ளன. |
| 37 | திருமணிக்கூடம் | மணிக்கூடநாயகன் | திருமாமகள்நாச்சியார் | திருநாங்கூருக்கு அருகில், கிழக்கில் உள்ளது. |
| 38 | திருக்காவளம்பாடி | கோபாலகிருஷ்ணன் | மடவரல்மங்கை | திருமணிக்கூடத்திலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது. திருமங்கையாழ்வாரின் அவதாரத் தலமாகிய குறையலூர், இச்சந்நிதிக்குக் கிழக்கே சுமார் ஒரு கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தின் மேற்குத் திசையில் மிக அருகில் திருமங்கையாழ்வார் ததியாராதனைக் கைங்கரியம் நடத்திய இடமாகிய மங்கைமடம் என்ற கிராமம் உள்ளது. |
| 39 | திருவெள்ளக்குளம் | கண்ணன்நாராயணன் | பூவார்திருமகள்நாச்சியார் | வைத்தீசுவரன்கோயில் நிலையத்திற்குக் கிழக்கே 7 கல் தொலைவில் உள்ளது. இதனைத் தென் திருப்பதியாகப் பக்தர்கள் போற்றுகின்றனர். பிரார்த்தனைத் தலம். |
| 40 | திருப்பார்த்தன்பள்ளி | தாமரையாள்கேள்வன் | தாமரைநாயகி | சீர்காழி நிலையத்திற்குத் தென்கிழக்கே 7 கல் தொலைவில் உள்ளது. பார்த்தன் என்னும் அர்ச்சுனனுக்கு அருள்புரிந்த தலமாதலால் இப்பெயர்பெற்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | திருமாலிருஞ்சோலை (கள்ளழகர் சந்நிதி) | அழகர், மாலலங்காரர் | சுந்தரவல்லிநாச்சியார் | மதுரைக்கு வடக்கே 12 கல் தொலைவில் உள்ளது. மலையின் அடிவாரத்தில் உள்ள சந்நிதி. நூபுர கங்கை என்னும் சிலம்பாறு, நீராடுதற்கு உரியது |
| 42 | திருக்கோட்டியூர் | சௌமியநாராயணன் | திருமகள்நாச்சியார் | காரைக்குடி-திருப்புத்தூருக்கு அருகில் உள்ளது. பெருமாள், நின்றும் இருந்தும், நடந்தும் கிடந்தும் கூத்தாடியும்நின்ற திருக்கோலம். இரணியனின் கொடுமையை ஒழித்தற்காகத் தேவர்கள் கோட்டியாகக் கூடி ஆலோசனை புரிந்த இடம். ஆதலால் இப்பெயர் பெற்றது. கோட்டி-கூட்டம். திருக்கோட்டியூர்நம்பிகள் அவதாரத்தலம். இராமாநுசர், திருக்கோட்டியூர் நம்பிகள் உபதேசித்த நாராயண மந்திரத்தை அனைவருக்கும் கோபுரத்தின்மீது ஏறி உரத்துக்கூறிப் பரப்பியருளிய தலம். அவரது பரந்த உள்ளத்தை வியந்து திருக்கோட்டியூர் நம்பிகள், இராமாநுசருக்கு எம்பெருமானார் என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளிய தலம். |
| 43 | திருமெய்யம் (திருமயம்) | மெய்யப்பன், சத்தியமூர்த்தி உய்யவந்தான், சத்தியநெறிநாதன் | உய்யவந்தநாச்சியார் | திருச்சி-மானாமதுரை இருப்புப் பாதையில் ஒரு நிலையம். சத்தியதேவதைகள் திருமாலை நோக்கித் தவஞ் செய்த தலம். அதனால் இதற்குத் திருமெய்யமலை என்றும், சத்தியகிரி என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இச் சந்நிதியில் பாம்பணையில் பள்ளிகொண்ட மற்றுமொரு பெருமாள் கோயிலும் உள்ளது. |
| 44 | திருப்புல்லாணி (தர்ப்பசயனம், திருப்புல்லணை) | கலியாணசகந்நாதர் தெய்வச்சிலையார் | கல்யாணவல்லி | இராமநாதபுரத்திற்கு ஆறு கல் தொலைவில்உள்ளது. இங்கிருந்துதான் இலங்கைக்கு இராமபிரான் சேது அணை கட்டினார் என்பர். சேது அணை கட்டுவதற்கு முன்பு, இராமபிரான் வருணனை வேண்டித் தருப்பைப்புல்லில் சயனித்து ஏழுநாள் அளவும் பிரார்த்தனை புரிந்த தலம். அதனால் இதற்குத் திருப்புல்லணை (திருப்புல்லாணி) என்றும், தருப்பசயனம் என்றும் பெயரமைந்தது. இச் சந்நிதியில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்று திருமுடி சூடிய இராமன் சந்நிதி. மற்றொன்று தர்ப்பசயன இராமன் சந்நிதி. இங்கு மிகப்பழைய அரசமரம் ஒன்று உள்ளது. மக்கட்பேறு இல்லாதவர் இங்கு நாகப்பிரதிட்டை செய்வர். |
| 45 | திருத்தண்கால் | அப்பன், தண்காலப்பன் | அன்னநாயகி, அனந்தநாயகி | சிவகாசிக்கு அருகில் உள்ளது. இச்சந்நிதியில் நாச்சியார்கள் நால்வர் உள்ளனர். மற்றும் இச்சந்நியில் கருடாழ்வார், அரவமும், அமிர்தகலசமும் ஏந்திய கைகளுடன் விளங்குகின்றார். |

| வ.எண். | திவ்வியதேசங்களின் திருப்பெயர்கள் | பெருமாள்திருப்பெயர் | தாயார்திருப்பெயர் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 46 | திருமோகூர் | காளமேகப்பெருமாள் | மோகூர்வல்லி, மோகவல்லிநாச்சியார் | மதுரைக்குக் கிழக்கில் 7 கல் தொலைவில் உள்ளது. ''தாள தாமரை தடமலி வயல் திருமோகூர், காள மேகத்தை யன்றி மற்று ஒன்றிலம் கதியே'' என்பது நம்மாழ்வார் பாசுரம். அதனால் காளமேகப் பெருமாள் என்ற பெயர் ஏற்பட்டது. பாம்பணைப் பள்ளியிலிருக்கும் பெருமாளின் சந்நிதி வலப்புறம் உள்ளது. சந்நிதியின் வடபுறத்திலுள்ள தாமரைக் குளம் மிக்க அழகுவாய்ந்தது. |
| 47 | திருக்கூடல் (தென்மதுரை) | கூடலழகர் | வகுளவல்லிநாச்சியார், மரகதவல்லிநாச்சியார் வரகுணவல்லி, மதுரைவல்லி, | மதுரை நிலையத்திற்கு அருகில் உள்ள கோயில். இக் கோயிலின் அட்டாங்க விமானத்தில் இரண்டு மாடிகள் உள்ளன. முதல்மாடியில் பாம்பணைப் பள்ளியில், அரங்கநாதரும், இரண்டாவது மேல் மாடியில் நின்ற திருக்கோலத்தில் சூரியநாராயணப் பெருமாளும் உள்ளனர். சிவாலயங்களில் மட்டுமே காணப்படும் நவக்கிரகங்களின் சந்நிதி, இங்குப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. |
| 48 | திருவில்லிபுத்தூர் | வட பத்திரசயனர் ஆலிலைப்பள்ளிகொண்டார் அரங்கமன்னார் | ஆண்டாள், கோதைநாச்சியார் | விருதுநகர்-தென்காசி இருப்புப் பாதையில் உள்ள நிலையம். பெரியாழ்வார், ஆண்டாள் அவதாரத் தலம். கோயிலின் தென்புறத்தில் வெளிமதிலுக்குப் பக்கத்தில் உள்ள துளசித்தோட்டத்திலேயே பெரியாழ்வார். வாழ்ந்திருந்தார் என்றும், இத்துளசித் தோட்டத்திலேயே ஆண்டாள் அவதரித்தாள் என்றும் கூறுவர். இத்தோட்டத்தில் பெரியாழ்வார் சந்நிதி உள்ளது. ஆடிப்பூரத்தன்று ஆண்டாளுக்குத் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். |
| 49 | திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி) | ஆதிநாதப்பெருமாள் பொலிந்துநின்றபிரான் | ஆதிநாதவல்லி | திருநெல்வேலி—திருச்செந்தூர் இருப்புப் பாதையில் ஒரு நிலையம். நம்மாழ்வார், மணவாளமாமுனிகள், அவதாரத்தலம். நம்மாழ்வார் வீற்றிருந்த உறங்காப்புளி என்னும் ஒரு பெரிய புளியமரம் இங்கு உள்ளது. சந்நிதிக்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் நம்மாழ்வாரின் தந்தையாகிய காரிமாறர் சந்நிதி உள்ளது. இதனை அப்பன் சந்நிதி என்பர். நம்மாழ்வாருக்கும் மதுரகவிகளுக்கும் பெருமாள் காட்சிஅளித்த தலம். |
| 50 | தொலைவில்லிமங்கலம் (இரட்டைத் திருப்பதி) | தேவபிரான் அரவிந்தலோசனன் தாமரைக்கண்ணன் | கருந்தடங்கண்ணி | ஆழ்வார் திருநகரிக்குக்கிழக்கில், ஆற்றின் வடகரையின் அருகில் உள்ளது. சீநிவாசன் சந்நிதி, செந்தாதாமரைக் கண்ணன் சந்நிதி என்று இரண்டு சந்நிதிகள் இருப்பதனால், இது இரட்டைத் திருப் திருப்பதி என வழங்கி வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | சிரீவரமங்கலம் (வானமாமலை, நாங்குநேரி) | வானமாமலைப்பெருமாள்<br>தெய்வநாயகன்<br>தோத்தாத்திரிப்பெருமாள் | சிரீவரமங்கைநாச்சியார் | திருநெல்வேலி-நாகர்கோயில் பேருந்துப் பாதையில் உள்ள தலம். வானமாமலை என்பதனை வடமொழியில் தோத்தாத்திரி என்பர். இத்தலம், பதரிநாராயணன், முத்திநாராயணம், நைமிசாரண்யம், புஷ்கரம், திருவேங்கடம், திருமுட்டம், திருவரங்கம் என்னும் எட்டு சுயம்புத் தலங்களில் ஒன்று. இங்கேயே வானமாமலைஜீயர் மடம், சந்நிதிக்குப் பக்கத்தில் உள்ளது. இங்கு ஆழ்வாருக்குத் தனிச்சந்நிதி இல்லை. ஆனால் ஆழ்வாரின் உருவம் பெருமாளின் சடாரியில் உள்ளது. |
| 52 | திருப்புளிங்குடி | காய்சினவேந்தன் | மலர்மகள்நாச்சியார்<br>புளிங்குடிவல்லி | திருவைகுண்டம் என்னும் தலத்திற்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. |
| 53 | திருப்பேரை | மகரநெடுங்குழைக்காதர்<br>நிகரில்முகில்வண்ணன் | குழைக்காதுவல்லிநாச்சியார் | ஆழ்வார்திருநகரிக்குத் தென்கிழக்கில் மூன்று கல் தொலைவில் உள்ளது. |
| 54 | சீர்வைகுண்டம் | கள்ளப்பிரான்<br>வைகுண்டநாதன் | வைகுண்டவல்லித்தாயார் | திருநெல்வேலி-திருச்செந்தூர்ப்பாதையில் ஒரு நிலையம். இதற்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் வரகுணமங்கை உள்ளது. பெரிய கோயில். அழகிய சிற்பங்கள் உள்ளன. |
| 55 | சீர்வரகுணமங்கை | விசயஆசனர் | வரகுணவல்லி | சீர்வைகுண்டத்திற்குக் கிழக்கில் உள்ளது. |
| 56 | திருக்குளந்தை (பெருங்குளம்) | மாயக்கூத்தன் | குளந்தைவல்லி | சீர்வைகுண்டத்திற்கும்-ஈரல் என்ற ஊருக்கும் இடையில் உள்ள தலம். இதற்கு அருகில் தாமிரபரணி நதி ஓடுகிறது. |
| 57 | திருக்குறுங்குடி<br>இராமாநுசர் இத்தலத்திற்கு வந்தபோது அவரிடம் பெருமாள் திருமந்திர நுண்பொருள்களைக்கேட்டு மகிழ்ந்ததனால், பெருமாளுக்கு வைணவ நம்பி என்னும் ஓர் சிறப்புப் பெயர் ஏற்பட்டது. தலத்தின் மேல்புறம் காணுகின்ற மலையில் மலைமேல்நம்பி சந்நிதி உள்ளது. தாமிரபரணி ஆற்றின் கரையில் திருப்பாற்கடல் நம்பி சந்நிதி உள்ளது. ஆற்றுக்கு அருகில் இராமாநுசர் அமர்ந்திருந்த பாறை திருப்பரிவட்டப் பாறை என வழங்கிவருகின்றது. திருநெல்வேலி-தென்காசி கிளைப் பாதையில் சேரன்மாதேவி நிலையத்திலிருந்து 18 கல் தொலைவில் இத்தலம் உள்ளது. வானமாமலையிலிருந்து மேற்கில் எட்டு கல் தொலைவு. | வைணவநம்பி,<br>மலைமேல்நம்பி<br>நின்றநம்பி<br>இருந்தநம்பி<br>கிடந்தநம்பி<br>திருப்பாற்கடல்நம்பி | குறுங்குடிவல்லி | குறுகிய வடிவமுள்ள வாமனனது தலமாதலால் இப்பெயர் ஏற்பட்டது. நம்மாழ்வாரின் அவதாரத்திற்குக் காரணமாயிருந்தவர் இத்தலத்து நம்பியேயாவர். திருமங்கையாழ்வார். இத்தலத்திலேயே திருநாட்டுக்கு எழுந்தருளினார் இது மிகவும் பெரிய திருக்கோயில். முன்கோபுரத்தில் உள்ள கருங்கற்சிற்பங்கள் பெரிதும் வியக்கத்தக்கவை. நின்றநம்பி, கிடந்தநம்பி சந்நிதிகளுக்கு இடையில் சிவன் கோயில் உள்ளது. சந்நிதியை வலம் செய்யும்போது சிவபிரானையும் சேர்த்தே வலஞ் செய்தல் வேண்டும். |

—(தொடரும்)

# பாரதநூற் பண்போவியங்கள்

கவிஞர் திரு. மனசை. ப. கீரன், B.A.,B.T.,

(முற்றொடர்ச்சி)

**அரக்கு மாளிகையும், இடும்பவனமும் :**

திருதராட்டிரனுக்குப் பார்வை இல்லாததால், பாண்டுவை அரசனாக்கினார்கள். பாண்டு இறந்தபின் ஊர்மக்கள் பாண்டுவின் பிள்ளைகள் தருமரையும் அவரது சகோதரர்களையும் பாராட்டிப் பேசிக் கொண்டார்கள். சகோதரர்களிடையில் பீமனைப் போன்ற உடல் வலிமை உள்ளவனும், அர்ச்சுனனைப் போல வில்வித்தையில் சிறந்தவனும் வேறு யாரும் இல்லை. இதையெல்லாம் பார்க்கப் பார்க்கத் துரியோதனனுக்குப் பொறாமை அதிகமானது. பொறாமைத் தீயில் தத்தளித்த துரியோதனனால் இரவில் தூங்கவே முடியவில்லை. ஓர் இரவு அவன் தன் தந்தை திருதராட்டிரனிடம் சென்று "தருமன் அரசனாக இருந்தால் பிறகு என் பரம்பரையே தலைதூக்க முடியாது. அதனால் பாண்டுவின் சந்ததிகளைப் பூண்டோடு அழித்திட வேண்டும்" என்றான்.

"தருமனும் சகோதரர்களும் நமக்கு நல்லதையே செய்து வருகிறார்கள். பண்பாடுள்ள நம் குலத்தை அழிக்கக் கூடாது" என்று நல்ல அறிவுரைகளைப் புகட்டினான் திருதராட்டிரன்.

"அப்படியானால், பாண்டவர்களே வாழட்டும். நான் செத்தொழிகிறேன்", என்று புலம்பினான் துரியோதனன்.

புத்திர பாசத்தினால் திருதராட்டிரனின் மனம் உருகியது. துரியோதனனின் திட்டத்திற்குக் குறுக்கே அவனால் நிற்க முடியவில்லை. குந்திதேவி தன் பிள்ளைகளுடன் காசிக்குச் சென்று திருவிழாவைப் பார்ப்பதுடன், இறந்துவிட்ட பாண்டுவுக்குப் பிதிர்க் கருமங்களையும் செய்ய வேண்டும், எனக் கேட்டுக்கொண்டான். பெரியப்பாவின் சொல்லுக்குப் பாண்டவர்கள் இசைந்தார்கள். துரியோதனன் தன் திட்டத்தைத் தீவிரமாகச் செயற்படுத்தலானான். புரோசனன் என்ற அமைச்சரைக் கொண்டு காசிக்கு அருகில் விழல், மெழுகு, நெய், எண்ணெய், கொழுப்பு, அரக்கு, சணல், மரம், குங்குலியம் போன்ற எளிதில் தீப்பிடிக்கக் கூடிய பொருள்களைச் சேர்த்துப் பாண்டவர்கள் தங்குவதற்கான மாளிகைகளை அமைத்தான்.

விதுரன், "விழித்துக் கொண்டிருப்பவனைத் துன்பம் அணுகாது. காடு எரிந்தாலும் எலிகள் பிழைக்கும்" என்று குறிப்புப் பொருள்களுடன் பாண்டவர்க்கு அறிவுரை கூறி அனுப்பினான்.

விதுரனின் சொற்களால் எச்சரிக்கையுடன் சென்ற குந்திதேவியும் பாண்டவர்களும் அவர்களுக்காக இருந்த மாளிகையின் தன்மையைத் தெரிந்து கொண்டார்கள். என்றாலும், புரோசனன் சந்தேகிக்காத வகையில் நடந்துகொள்ள விரும்பினார்கள். தருமர், "இரவில் தேச விசாரணையும், பிரார்த்தனைகளும் நடத்த வேண்டும். அப்படித் தூங்காமல் இருக்கலாம்" என்றார்.

கனகன் என்ற சிற்பி, விதுரனின் சொல்படி தப்பிக்கக் கூடிய சுரங்கப்பாதை கட்டியுள்ளதையும், அதன் கதவுகளைத் திறந்து மூடும் வகைகளையும் கூறினான்.

ஒரு வேட்டுவச்சி தன் ஐந்து பிள்ளைகளுடன் புரோசனனின் ஏவலினால் அந்த மாளிகையில் தங்கிக் குந்தியிடம் அன்பானவள் போல் நடித்தாள். விதி வசத்தால் ஓர் இரவு புரோசனனும், வேட்டுவச்சி தன் பிள்ளைகளுடனும் உறங்கி விட்டார்கள். சமயம் எதிர்பார்த்திருந்த பீமன், தன் தாயையும் சகோதரர்களையும் சுரங்க வழியில் அனுப்பிவிட்டு மாளிகைக்குத் தீ வைத்து விட்டு அவனும் சுரங்கத்தின் கதவுகளை மூடிக் கொண்டு சுரங்க வழியாக விரைந்து ஓடினான்.

புரோசனனும் தீக்கு இரையானான். வேட்டுவச்சியோடு ஐந்து பிள்ளைகளும் கருகிய சடலங்களைப் பார்த்தவர்கள், குந்திதேவியும் பாண்டவர்களுமே கருகிவிட்டதாக நினைத்தார்கள். கௌரவர்கள் பாண்டவரை இப்படிச் செய்துவிட்டார்களே, என மக்கள் பழித்தார்கள். துரியோதனன் மகிழ்ந்தான். விதுரனோ பாண்டவரும் குந்திதேவியும் தப்பியிருக்கக்கூடுமென உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ளாமல் இருந்தான்.

பீமன் தாயைத் தோளிலும், சிறிய தம்பியரான நகுலனையும், சகாதேவனையும் இடுப்பிலும் சுமந்து கொண்டே தருமரையும் அர்ச்சுனனையும் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டே ஓடினான். கங்கைக் கரைக்கு வந்தபோது விதுரன் ஏற்பாடு செய்த ஓடக்காரன்

உதவியால் கங்கையைக் கடந்தனர். தொடர்ந்து ஒருநாள் முழுவதும் வேகமாக நடந்துகொண்டே இருந்தார்கள். இரவு வந்தபோது எல்லோரும் களைத்துப் போனார்கள். தாமரை இலைத் தொன்னைகளிலும், துணியை நனைத்தும் தாயாருக்குத் தண்ணீரைத் தந்தான், பீமன். எல்லோரும் அயர்ந்து உறங்கப் பீமன் காவலிருந்தான்.

அவர்கள் இருந்த இடம், இடும்பன் என்ற அரக்கனுக்கு உரிய இடும்பவனம். இடும்பன் மனித மணம் வீசுவது கண்டு மகிழ்ந்து, தின்பதற்காகத் தங்கை இடும்பியை அனுப்பிப் பிடித்துவரச் சொன்னான். பீமனைக் கண்ட இடும்பி, தன்னை மணக்கத் தக்கவன் அவனே, என மகிழ்ந்தாள். இடும்பி நேரமாகியும் வராததால், இடும்பனே பீமனிடம் வந்து தாக்கினான். மலையும் மலையும் மோதுவது போல் நடந்த போரின் சத்தம் கேட்டுக் குந்திதேவியும் பாண்டவரும் எழுந்துவிட்டார்கள். இடும்பி குந்திதேவியை வணங்கித் தன்னை மருமகளாக ஏற்குமாறு வேண்டினாள். ''ஒரு குழந்தை பிறக்கும் வரை இரு. பின் பிரிந்து போய்விடு. நாங்கள் நாடு சேர்ந்தபின் மீள்வாய்'' எனக் குந்திதேவி அவளை மருமகளாக ஏற்றாள். இடும்பியும் பீமனும் அவர்களைச் சுமந்து கொண்டு சாலிகோத்திர முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார்கள். முனிவரும் அவர்களை நல்லுணவு தந்து உபசரித்தார்.

மறுநாள் வேதவியாசர் அவர்கள் முன் தோன்றினார். குந்திதேவி அழுதபோது, ஆறுதல் சொல்லி, ''முற்பிறவியில் நண்பர்களைப் பிரித்த வினையால்தான் இந்தத் துன்பம். இடும்பி கமலபாலிகை என்ற பேருள்ளவள். இவளது பிள்ளையால் நன்மை உண்டாகும்'' என்றார் வியாசர்.

இடும்பி கடோற்கஜனைப் பெற்றாள். குந்திக்குக் கொடுத்த வாக்கைப் போல் மகனுடன் பிரிந்து சென்றாள். நினைத்தால் வருவதாகச் சொல்லி விடைபெற்றாள்.

வேதவியாசர், ''நீங்கள் சிறிது காலம் அந்தணர் கோலத்தில், ஏகசக்கர நகரத்தில், ஓர் அந்தணரின் வீட்டில் மறைந்து வாழுங்கள்'', என்றார். பாண்டவர்களும் அவ்வாறே ஏகசக்கர நகரத்திற்குச் சென்று, அந்தணர் வீட்டில் தங்கினார்கள்.

தந்தையை இழந்த பாண்டவர்கள், பங்காளிகளின் பகையால் ஏற்பட்ட துன்பங்களினிடையில், தாயார் குந்திதேவியைக் கண்ணின் இமைகளைப் போலப் பாதுகாத்து வந்தார்கள். குழந்தைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமை அதுதானே!

**பகனும் பீமனும் :**

பாண்டவர்கள் தம்மை அழிக்கத் துரியோதனன் அவர்களை அரக்கு மாளிகையில் தங்க வைத்து எரித்துவிடச் செய்த சதியிலிருந்து தப்பித்து ஏக சக்கர நகரத்தில் ஓர் அந்தணர் வீட்டில் தங்கியிருந்தார்கள். பாண்டவர்கள் சாப்பாடு பிச்சை எடுத்துத் தாயிடம் தந்தார்கள். தாய் பங்கிட்டுக் கொடுக்க எல்லோரும் சாப்பிட்டார்கள். ஒருநாள் அப்படிப் பாண்டவர்கள் வெளியில் சென்றிருந்த பொழுது அந்த வீட்டு அந்தணனும் மனைவியும் அழுதபடி பேசிக்கொண்டிருந்தார்கள். குந்திதேவி அவர்களுக்கு ஆறுதல் கூற விரும்பினாள். ஆனால், அவர்கள் துயரத்தில் மூழ்கிப் பேசிக்கொண்டிருந்த நிலையில் அவர்களிடம் உடனே செல்ல முடியவில்லை.

கணவன் சொன்னான்: ''இந்த ஊரை விட்டுப் போகலாம், என்ற பொழுதெல்லாம் நீ ஒப்பவில்லை. பிறந்த ஊர் என்றால், உன் பெற்றோரும் உற்றாரும் இறந்த பிறகும் பிறந்த ஊர்ப்பாசம் உன்னை விடவில்லை. நீ எனக்குத் தாயாகவும், தோழியாகவும், மக்களைக் கொடுத்த மனைவியாகவும் எல்லாமாகவும் இருக்கிறாய். உன்னை எப்படி இழப்பேன்? இந்தச் சிறுமியைப் பிற்காலத்தில் அவள் கணவனிடம் ஒப்படைக்க ஆண்டவன் நம்மிடம் விட்டுள்ளான். அவளைப் பிரியக்கூடாது. மகன் தான் நம் முன்னோருக்கும் நமக்கும் இறுதிக் கடன்களைச் செய்யவேண்டும். அவனை அனுப்பிவிட்டு நாம் பிழைப்பதா? நான் பிரிந்தால் சிறுவனும் சிறுமியும் பிழைக்க முடியாதே? அதனால் நாம் எல்லோரும் சேர்ந்து சாவதே உத்தமம்'' என்றான்.

இப்படிச் சொன்ன கணவனின் வார்த்தைகளைக் கேட்டு மனைவி பெரிதாக அழுதாள். ஒருவாறாக அழுகையை அடக்கிக்கொண்டு அவள் சொன்னாள்: ''மனைவியால் கணவன் அடைய வேண்டியது என்ன? மக்களைப் பெறுவது. மகனையும் மகளையும் பெற்றுவிட்டேன். என் கடமையும் முடிந்தது'', என்றாள். பாரதத்திலேயே இந்த அந்தணனின் மனைவி இரண்டு குழந்தைகளைப் பெற்றதுடன் கடமை முடிந்தது என்ற உலகநீதியைச் சொன்னாள். இன்றைக்கு இரண்டுக்குமேல் வேண்டாம், என்றுதானே உலகமே சொல்லுகிறது?

அவள் தொடர்ந்து பேசினாள்: ''கணவனில்லாத பெண்ணை, வெளியில் போட்ட மாமிசத்தைத் தூக்கிப் போகப் பார்க்கும் பறவைகளைப்போலக் கவர்ந்துவிட எல்லாரும் விரும்புவார்கள். நெய்யில் நனைக்கப்பட்ட துணியை நாய்கள் நாலாபக்கமும் இழுப்பது போல, இழுப்பார்கள். கணவனின்றி மனைவி குழந்தையை வளர்ப்பதும் முடியாது. நீரில்லாக் குளத்து மீன்கள் அழிவதுபோல ஆகும். அதனால் அரக்கனுக்கு என்னைக் கொடுப்பதே மேல். உனக்குப் பணிவிடை செய்ததால் நான் புண்ணியலோகம் போவேன்'' என்று மீண்டும் அழுதாள். கணவனும் துயரம் தாளாமல் பெண்களைப்போலப் புலம்பினான்.

இவ்வளவு நேரமும் பெற்றோர்கள் வருந்திக்கொண்டு பேசியதைக் கேட்டுச் செய்வதறியாமல் விழித்த சிறுமி ஒருவாறு தெளிந்து பேசினாள். ''ஓடத்தைக் கொண்டு தண்ணீரைக் கடப்பதுபோல என்னைக்கொண்டு ஆபத்தைத்

தாண்டுங்கள். நீங்கள் இறந்தால் தம்பியும் சீக்கிரம் இறப்பான். நானும் அநாதையாய் அலைவேன். நான் செத்தால் நம்குலத்துக்கே விமோசனம். அதனால் என் பிறவியும் பயனுள்ளதாகும். என் நன்மைக்காகவே என்னை அரக்கனிடம் அனுப்பவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டாள். இதனால் எல்லாரும் சேர்ந்து அழுத அழுகைதான் அதிகமானது. மகளின் அறிவைக் கண்டு உச்சியில் முத்தமிட்டார்கள்.

இவ்வளவு நேரமும் தயங்கினான் சிறுவன். அக்கா பேசின தைரியத்தில் அனைவரின் துயரத்தின் மத்தியில் அவனுக்கும் துணிவு வந்தது. எல்லோரையும் அழவேண்டாம் , என்றான். ஒரு குச்சியை எடுத்தான். குழந்தைக்கு உரிய மழலைமொழியில் அவன் ''இதனால் அரக்கனைக் கொன்று போடுவேன்'' என்றான். இவ்வளவு நேரமும் அழுதவர்கள் எல்லோரும் பிள்ளையின் மழலை கேட்டுச் சிரித்துவிட்டார்கள்.

அயலாளாகிய குந்திதேவி துயரத்தின் இடையில் நடந்தது தெரியாமல் எப்படிக் கலந்துகொள்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்துகொண்டிருந்தாள். இதுதான் தருணம் என்று அவர்களை அணுகி, ''உங்கள் கவலை என்ன? என்னால் உதவ முடிந்தால் முடிந்ததைச் செய்கிறேன்'' என்றாள்.

''இந்த ஊருக்கருகே ஒரு குகை இருக்கிறது. அதில் பகன் என்னும் அசுரன் இருக்கிறான். கடந்த 13 ஆண்டுகளின் முன் ஊர்களில் புகுந்து ஆண், பெண், குழந்தைகள் யார் கிடைத்தாலும் பிடித்து அடித்துத் தின்ன ஆரம்பித்தான். ஊர் மக்களால் பொறுக்க முடியவில்லை. வாரம் ஒருமுறை மாமிசம், அன்னம், கள், தயிர் எல்லாம் வண்டியில் வைத்து இரு கறுப்புக் காளைகளுடன் ஒரு மனிதனையும் அனுப்புகிறோம். அவையெல்லாம் தின்றுவிடு, பிறரை வதைக்காதே' என வேண்டிக் கேட்டுக்கொண்டார்கள்.

அந்த முறைப்படி நடைபெறுகிறது. அவனை அடக்க யாராவது முனைந்தால் அவர்களைத் தீர்த்துக்கட்டிவிடுகிறான். மன்னன் வேத்திரகீய நகரத்தில் எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறான். சக்தியுள்ள மன்னன் இல்லாவிட்டால் இப்படித்தான். முதலில் சக்தியுள்ள அரசனைப் பெறவேண்டும். பிறகே மனைவி, மக்கள், செல்வங்களை அடையவேண்டும். சரியான மன்னன் இல்லாவிட்டால் மனைவி ஏது? செல்வம் ஏது? என்றான் வீட்டுத்தலைவன். அவன் கூறிய அரசியல் உண்மைகளைக் குந்திதேவி சிந்தித்தாள். அவை இன்றைக்கும் பொருந்தும்தானே.

அவன் தொடர்ந்து, ''இந்த வாரம் எங்கள் முறை. யாரையாவது விலைக்கு வாங்கி அனுப்பவும் வசதியில்லை. எங்களில் யாரும் தனியாகப் பகாசுரனுக்கு இரையாவதை எண்ணவும் முடியவில்லை. எல்லோரையும் அரக்கன் தின்னட்டும்.... இதையெல்லாம் நீ கேட்டதால் சொன்னேன். உனக்கு ஏனம்மா இந்தக் கவலை?'' என்று மீண்டும் வருத்தத்தில்தோய்ந்தான்.

குந்திதேவி பீமனை அனுப்புவதாகச் சொன்னாள். ''விருந்தாளியின் உயிரைப் போக்குவது முறையல்ல'' என்று அந்தணன் தீர்மானமாகக் கூறிவிட்டான்.

பீமனிடம் ''மந்திர சக்தி உண்டு. அதனால் பகனைக்கொன்று மீள்வான். ஆனால் யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். சக்தி போய்விடும்'' என்று எச்சரித்தாள். விளம்பரமானால் பாண்டவர் என்பதை ஊர் தெரிந்துகொள்ளுமே என்பது குந்திதேவியின் அச்சம்.

தாயிட்ட ஆணையைக் கேட்ட பீமன் மகிழ்ச்சிக் களிப்பால் முகமலர்ந்தான். என்றுமில்லாது பீமனின் மலர்ந்த முகம் கண்ட தருமர் அவன் ஏதோ சாதனை புரியப் போகிறான் என்பதை ஊகித்துக்கொண்டார். விவரம் அறிந்த தருமர், ''அரக்கு மாளிகையிலிருந்து காத்தவன், இடும்பனைக் கொன்றவன், பீமன். அவனால் அல்லவா நாட்டையும் மீட்க முடியும்? துயரத்தால் நொந்து புத்தியையும் இழந்துவிட்டாயே அம்மா'' என்றார்.

குந்திதேவி பொறுமையாக ''நமக்கு உதவிய இவர்களின் துயரத்தைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? உதவுவது நம் கடமை. பீமன் பகனை வென்று கொன்று மீள்வான்'' என்றாள்.

அப்படியே வண்டி தயாரானது. ஊர் மக்கள் திரண்டு மேள முழக்கங்களுடன் தொடர்ந்தார்கள். குறிப்பிட்ட இடம் வந்ததும் நின்றார்கள். பீமன் வண்டியைத் தொடர்ந்து ஓட்டிச் சென்றான். கை, கால், தலைகளும் எலும்பும் எங்கும் சிதறிக்கிடந்தன. மயிரும் இரத்தமும் கீழே கிடக்கக் கோரக் கழுகுகள் வட்டமிட்டன.

''பகனோடுபோரிடும்போது உணவு சிதறும். அவனைக் கொன்றபின் சாப்பிடுவதும் தகாது'' என்று அமர்ந்து பீமன் அவசர அவசரமாகத் தின்றான். தூரத்திலிருந்து வண்டியை எதிர் பார்த்திருந்த அரக்கன் நடப்பதைப் பார்த்து ஓடி வந்தான். பீமனின் பின்புறமாக வந்து, அவன் முதுகில் குத்தினான். ''உணவு நன்றாக இறங்கிற்று, நன்றி' என்று குடத்திலிருந்த தயிரை எடுத்துக் குடித்தான். வாயைத் துடைத்துக் கொண்டு பகனுடன் மோதினான். அவனைக் கீழே தள்ளினான். ''இளைப்பாறு'' என்றான். 'எழுந்திரு' என்று போருக்கு அழைத்தான். இப்படிப் பலமுறை தள்ளி எழுப்பி வதைத்தான். கடைசியில் அரக்கனைத் தள்ளி முதுகில் முழங்காலை வைத்து அழுத்தி எலும்புகளை முறித்தான். அசுரன் பெரிதாகக் கதறினான், இரத்தம் கக்கி இறந்தான். அவனது சடலத்தை இழுத்து ஏகசக்கர நகரத்தின் கோபுர வாயிலில் போட்டான். தாயாருக்கும் சகோதரருக்கும் நடந்தவைகளைச் சொல்லி மகிழ்ந்தான். ஊராரும் பீமனைப் பாராட்டிச் சிறப்புகளைச் செய்தார்கள்.

—தொடரும்

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

றேன். இந்தப் பிரகாரமே வடதேசத்திலும் இலங்கையிலும் ஊர்தோறும் வித்தியாசாலை தாபிக்கவும், தேவாலயந்தோறும் சைவப்பிர சங்கம் பண்ணுவிக்கவும் வேண்டும். இப்படிச் செய்யிற் கல்வியுஞ் சைவசமயமுந் தழைத் தோங்கும்!''

''வடதேசத்திலுள்ள பிரபுக்கள் பலர் தங்கள் தங்கள் ஸ்தலங்களிலே வித்தியாசாலைகள் தாபிக்கும்படி கேட்கின்றூர்கள்; அவைகளுக்குப் பொருளுதவி தாங்களே செய்ய உடன்பட்டிருக்கின்றூர்கள். மகிமைபொருந்திய சைவாதீனத்தார்கள் தங்கள் தங்களாலே நடத்தப்படுந் தேவாலயங்களிலே சைவப் பிரசாரகர்களை நியோகித்து வேதனங் கொடுத்துச் சைவப்பிரசங்கஞ் செய்விக்க உடன்பட்டிருக்கின்றூர்கள்; இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினுலே, நல்லொழுக்கமும் விவேகமுமுடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் நூற்றுவரைச் சேர்த்து, தனித்தனி இருபது பிள்ளைகளையுடைய வகுப்பு ஐந்தேனும் வகுத்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்துக் கல்வி கற்பித்தல் வேண்டும். வருஷந்தோறும் தேர்ச்சியடைந்த முதல் வகுப்புப் பிள்ளைகள் இருபதின்மரும் வித்தியாசாலையை விடுக்க, ஐந்தாம் வகுப்பின் பொருட்டு இருபது பிள்ளைகள் சேர்க்கப்பட்டு வரல் வேண்டும். இப்படிக் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகித்தல் வேண்டும்''.

''இதன்பொருட்டு ஏறக்குறைய மாதம் ஒன்றுக்குச் செலவு வருமாறு :—

| | |
|---|---|
| போசனம், விளக்கெண்ணெய், சௌரம், வஸ்திரம், புத்தகம், இவற்றின் பொருட்டுப் பிள்ளை 1-க்கு ரூ. 5 வீதம் பிள்ளைகள் 100-க்கு ரூபாய் ... | 500 |
| முதற்றமிழுபாத்தியாயர் வேதனம் ... | 50 |
| இரண்டாந்தமிழுபாத்தியாயர் வேதனம் ... | 30 |
| மூன்றுந்தமிழுபாத்தியாயர் வேதனம்... | 20 |
| சம்ஸ்கிருத உபாத்தியாயர் வேதனம்... | 20 |
| சிவாகமபண்டிதர் வேதனம் ... | 20 |
| ஓதுவார் வேதனம் ... | 10 |
| இலேககர் வேதனம் ... | 7 |
| கணக்கப்பிள்ளை வேதனம் ... | 5 |
| சேவகன் வேதனம் ... | 5 |
| தோட்டக்காரன் வேதனம் ... | 3 |
| புத்தகாதி சம்பாதனம் ... | 30 |
| ஆக ரூபாய் | 700 |

''இவ்வுத்தமோத்தம தருமத்தின்பொருட்டு எண்பதினுயிரம் ரூபா வேண்டும். எழுபதினுயிரம் ரூபாவைக் கொண்டு நீர்ப்பாய்ச்சலுள்ள நல்லகிராமம் வாங்கிவிடல் வேண்டும். பதினுயிரம் ரூபாவைக் கொண்டு வித்தியாசாலையும் மடமுங் கட்டுவித்தல் வேண்டும். நம்மவர்கள் பலர் சிறிது சிறிதாக உபகரிப்பினும், ''ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை'' என்றபடி இத்தொகை சேர்ந்துவிடும். இத்தொகை சேராதொழியினும், சேர்ந்த தொகைக்கிசையவாயினும் நடத்தலாமே!''

''இவ்வித்தியா சாலையிலே சேரும் பிள்ளைகள் உயர்வாகிய இலக்கண இலக்கியங்களை நன்ருகக் கற்றுக் கொள்வார்கள். அம்மட்டோ, சிவதீட்சை பெற்றுக் கொண்டு ஓரதிபதிக்கும், அவ்வதிபதியின் அதிகாரத்துட்பட்ட உபாத்தியாயர்களுக்கும்கீழ்ப்பட்டிருந்து, அநுட்டானம் பஞ்சாட்சர செபம், சிவபூசை சிவாலய தரிசனம், தேவார திருவாசகமோதுதல், சிவபுராணம் படித்தல், சிவசாத்திரம் படித்தல் முதலிய சிவபுண்ணியங்களை நாடோறும் அவ்வவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட நேரங்களிலே நியமப் பிரகாரம் செய்து கொண்டு வருவார்கள்; உற்சவ காலங்களிலே யாவருக்கும் சிவபத்தி செனிக்கும்படி பெருந்திருக்கூட்டமாகிச் சுவாமிக்குப் பின்னே தாளந்தட்டித் தேவாரம் பண்ணுடனே ஓதிக்கொண்டுவருவார்கள்; ஒழுக்கத்திலும் சமயானுட்டானங்களிலும் தவறும் பொழுதெல்லாம் அதிபதியினுலும் உபாத்தியாயர்களாலும் கண்டிக்கப்பட்டுத் திருத்தமடைவார்கள். வித்தியாசாலையை விடுக்கும்பொழுது உபாத்தியாயர்களாகவும், சைவ பிரசாரகர்களாகவும் நியோகிக்கப்பட்டு ஊர்தோறும் வித்தியாசாலைகளிலே கல்வி கற்பித்துக் கொண்டும், திருக்கோயில்களிலே சைவசமயத்தைப் பிரசங்கித்துக் கொண்டும் சீவிப்பார்கள். இப்படியே தங்களுக்கும் பிறர்க்கும் பயன்படும் நற்செய்கைகளைச் செய்யும் இயல்புடையவர்களுக்கு அன்ன தானம் முதலியவை செய்வது எவ்வளவு பெரும்புண்ணியம்!''

''மிக மேலாகிய இத்தருமத்தை நிறைவேற்றுவதற்கு அங்கங்கே சபைகூட்டிப் பிரசங்கஞ் செய்து பொருளுதவி பெறும் பொருட்டு ஊர்தோறும் சஞ்சரிக்கத் தொடங்கினேன். சைவசமயிகளே! சிவபெருமானுடைய திருநாமம் விளங்கும் பொருட்டு நான் எடுத்த முயற்சியை நீங்கள் அவமதியாது நன்கு மதித்து உதவி செய்வீர்களென்று நம்பியே உங்கள் ஊருக்கு வருகின்றேன். சிவபெருமானே மெய்க்கடவுளென்று விசுவசித்து அவருடைய சின்னமாகிய விபூதியைத் தரிக்கிறவர் ஒவ்வொருவரும், இல்லையென்னுது, சிறிதாயினும்பெரிதாயினும்தங்கள்தங்களால் இயன்றது உதவுவாராயின், நான் எடுத்த முயற்சி நிறைவேறிவிடும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.''

''நீங்கள் இத்தருமத்தின் பொருட்டு உங்களுங்களால் இயன்றமட்டும், நிலமாகவேனும், பணமாகவேனும், பனைமரம், பாலைமரம் முதலிய மரங்களாகவேனும் உபகரிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். உபகரிப்பவர்கள் தங்கள் தங்கள் பெயரையும், ஊர்ப்பெயரையும், தந்தையர் பெயரையும், தொழிற்பெயரையும் அறிவித்தல் வேண்டும். உபகாரகர்கள் பெயரும் அவரவர் உபகரித்த

பொருட்டொகையும் ஆவேதனத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

இங்ஙனம்
நல்லூர் க. ஆறுமுகநாவலர்

பிரமோதூத வருடம்
*(1870)*

**நாவலர் :**

இவ்வேண்டுகோள் அறிக்கைகளின் மூலமாகவே, நாவலர் பெருமானின் நல்ல சொல்வன்மையும், செயலாற்றுந்திறனும், நுண்மான் நுழைபுலமும், பன்மாண் குண நலங்களும், நமக்குப் பளிங்கென விளங்கும். தமிழிற் பேச்சுக் கலையை, சமய விரிவுரை முறையை, முதன்முதல் மிகமிகத் தூய உயரிய புனித நிலையில் வகுத்தமைத்துச் செயற்படுத்திக் காட்டி வளர்த்தளித்த பெருந்தகையாளர், நாவலர் அவர்களே யாவர்! அவர்களது நாநலமும் வன்மையும் கண்டு வியந்து மகிழ்ந்து அந்நாளிற் பிறர் எவருக்கும் வழங்கப் பெருத நிலையில், ''நாவலர்'' என்னும் சிறப்புப் பட்டத்தினைத் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர், திருவார்திரு அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் வழங்கிச் சிறப்பித் தருளினார்கள். தமிழ்கூறும் நல்லுலகில், இன்றும் ''நாவலர்'' என்று பொதுவாகக் குறிப்பிட்டால், காரண இடுகுறிச் சிறப்புப் பெயராக, அஃது ஆறுமுக நாவலர் அவர்களையே குறிப்பதாகும்.

**தகவாளர் புகழ்மொழிகள் :**

யாழ்ப்பாண நல்லூர்ச் சிவத்திரு ஆறுமுக நாவலர் அவர்களின் அரும்பெரும் சிறப்புக்களை நம்மால் அளவிட்டு ஆய்ந்துரைத்தல் இயலுமோ? ''கரையற்ற தொன்றைக் கரைகாணல் ஆகுமோ?' 'கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்?' நாவலர் அவர்களின் பெருமைக்கு ஓர் எல்லையே யில்லை.

நீதிபதி திரு சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள்,

''நாயனார், நாற்குரவர், நாவலர், தென் ஞாலம் உய்ய,
மேயினார் ஈசன்அருள் மேல்''

என்று குறிப்பிட்டதுபோல, இறைவன் அருளாலேயே நாவலர் அவர்கள், இவ்வுலகம் உய்யத் தோன்றியருளினார் எனலாம். சென்ற நூற்றாண்டிலிருந்த பெரும் புலவர்களும் கவிஞர்களும், சிவத்திரு ஆறுமுகநாவலரின் சிறப்பினைப் பின்வருமாறு பலவகையிற் பாராட்டிப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

''நல்லைநகர் வரும் சிந்தாமணி; கந்தவேள் தவவித்தின் வந்த விளைவு; சான்ற மதுரைச் சங்கம் மூன்றும் இங்கு ஒன்றாய்த் தலைப்பட்ட பெரிய சங்கம்; நைட்டிகம் தவறுறாப் பிரமசாரி; தமிழ் சமஸ்கிருத பாஷா வியாகரண சித்தாந்த தர்க்க வேதாந்த நிலையம்; தகையுறும் பதிபாச பசுலட்சணப் பிரபல சைவாகமப் பொக்கிஷம்; சகல சாத்திர சாகரம்; தண்டமிழ்ப் பரவையை முகந்து உயிர்ப் பயிர்களைத் தழைவித்த பருவ மேகம்; புலமை ஒளிபரப்பும் மாணிக்க தீபம்; தன் ஆணைவழியில் நிற்பச் சைவநாட்டை ஒரு தனிபுரந்திடும் மெய் அரசு; கமலவாணி நடனம் அகலா மகத்துவப் பிரதாப மன்றம்; சத் ஆசார தெய்வ சொரூபம்; மாதவ நன்மாணவர் நெஞ்சகக் கோயிலில் வளர்ந்திடும் சேம வைப்பு; மணிக்கவாசகர் முதற் குரவரோடு அறிஞர் வாழ்த்தி ஏத்திடும் மெய்க் குரு; மதுரப் பிரசங்க அமிர்தத்தினால் உலகத்தை வாழ்வித்த சற்பாத்திரம்; மாண்புபெற முற்றி உள்நெகிழ்ந்த இன்பமாம் மதுவழிந்திடும் பக்திக் கனி; வாலறிவினோர் அருட்பாடல் நறவு ஒழுகுறும் மணிவளப் பூரண கும்பம்; மண்டலமெலாம் பெரிதும் மேற்கொள மெல்கிக் குளிரும் மங்கள சுகந்த புஷ்பம்; கல்லூரி ஊர்தொறும் அமைத்துச் சிறார்க்கு இனிய கல்வி அமுதூட்டும் அன்னை; கற்பியல் வழா வகை நிரம்பிய விற்பனக் கவிஞர்க்கு இரு கண்மணி; மெய்க்கல்விக் கடற்கரைகள் கண்ட வங்கம்; கனியுடைச் செந்தமிழ்க் கலை தலையெடுத்துக் களிப்புறச் செய்த வழுதி; தேசாபிமானமும் சமயாபிமானமும் சிதையாமல் வாழ்ந்த வாழ்வு; சேர்ந்தவர் செய்யும்குறையை அன்றே மறந்திடும் சித்த சுத்தித் தயாளு ; தேற்றுறும் போதனா நியம சாமர்த்திய சிரேட்ட சன்மார்க்க பீடம்; திரிபுஅகல நூலுரைகள் பல, உலகு உவந்திடச் செய்த அதியூக சாரம்'' என்றெல்லாம், உடுப்பிட்டி திரு. ஆர். சிவசம்புப் புலவர் போன்றவர்கள், நாவலர் அவர்களின் பெருமையினை நனிமிக எடுத்துப் புகழ்ந்து பாராட்டி மகிழ்ந்திருக்கின்றனர்!

**சான்றோர் தலைவர் :**

தமிழ் மொழியின் வரலாற்றிலும், சைவ சமய வரலாற்றிலும், சிவத்திரு ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களுக்கு, என்றும் பொன்றாது நிலைபேறு வாய்ந்த ஒரு பெரும் தனிச் சிறப்பிடம் உண்டு. நாவலர் அவர்கள் திருஞானசம்பந்தர் போலத் தமிழும் சைவமும் வளர்த்தார்: திருநாவுக்கரசர் போலச் சிறந்த தொண்டுகள் பல புரிந்தார்; சுந்தர மூர்த்தி சுவாமிகள் போல 'சைவமுதல் திருத்தொண்டர்'—'மிக்க விழுத்தவ வேந்தர்'—'மேருமலையின் மேம்பட்ட தவத்தார்'—'நுணங்கிய கேள்வி மேலார்' என்றெல்லாம் போற்றத்தக்க நிலையில் விளங்கினார்; மாணிக்கவாசகர்போல நாவலர் அவர்கள் எழுதிய பேசிய வாசகங்களும், மாணிக்கங்களாகத் திகழ்ந்து வருகின்றன. பக்தி யுணர்வையும், சைவநெறி ஒழுகலாறுகளையும் பரப்புவதில், நாவலர் அவர்கள் தெய்வப் புலவர் சேக்கிழார் போன்று சிறந்தொளிர்ந்தார். சைவ சித்தாந்த தத்துவக் கொள்கையினைப் போதித்துப் பரப்பி வளர்த்த சான்றாண்மையில், அவர் மெய்கண்ட தேவர், சகலாகம பண்டிதர் என்று, அனைவரும்மதித்து வணங்கத்தக்க மாட்சிமை பெற்று வாழ்ந்தார்!

**முடிவுரை :**

அவர்தம் புகழ் என்றும் நிலைபெறுக ! அவர் அமைத்த நிறுவனங்கள் என்றும் வளர்ந்து ஓங்குக! அவர்தம் அரிய குறிக்கோள்கள், விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறுக! அவர்தம் தூய சிறந்த எடுத்துக்காட்டான நல்வாழ்க்கை நெறியினை, நாம் அனைவரும் பின்பற்றி உய்ய முயலுவோமாக!

❋